
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜுலை 04, 2013 | புரட்சி 12 | முழக்கம் 25 | விலை: ரூ.3.00



## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியானார் பி.சதாசிவம்: சமூகநீதிப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி



தமிழ்நாட்டைச் சார்ந்த நீதிபதி பி. சதாசிவம், உச்சநீதி மன்றத்தின் 40ஆவது தலைமை நீதிபதியாகியுள்ளார். இவர் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் என்பதும், குடும்பத்தில் முதல் பட்டதாரி என்பதும் தமிழ் வழியில் பயின்றார் என்பதும் தமிழகத்தில் நீண்டகாலம் நடந்த சமூகநீதிப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். பிரிக்கப்படாத சென்னை மாகாணமாக இருந்த காலத்தில், 1951 இல் பதஞ்சலி சாஸ்திரி என்ற பார்ப்பனர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இதற்கு முன் இருந்துள்ளார்.

சமச்சீர் கல்விக்கு ஆதரவாக தீர்ப்பளித்தவர் நீதிபதி சதாசிவம். இயற்கை எரிவாயு தொடர்பாக அம்பானி சகோதரர்களுக்குள் ரிலையன்ஸ் இயற்கை எரிவாயு நிறுவனத்துக்கும், ரிலையன்ஸ் தொழில் நிறுவனத்துக்கும் நடந்த வழக்கில், “இயற்கை எரிவாயுவை அரசின் பொதுத் துறை வழியாகவே கையாள வேண்டும். ஒரு ஜனநாயக நாட்டில், இயற்கை வளங்கள் மக்களுக்கே சொந்தமாக இருக்க வேண்டும்” என்று அவர் வழங்கிய தீர்ப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். குழந்தைகள், பெண்கள் தொடர்பான வழக்குகளில் அவர்களின் உரிமைகளுக்காக, கண்டிப்பான தீர்ப்புகளை வழங்கிய பெருமை அவருக்கு உண்டு. ஜாதி மறுப்புத் திருமணத்துக்கு எதிராக நடக்கும் ‘கவுரவக் கொலைகளை’ தடுக்க தனி சட்டம் கொண்டு வரவேண்டும் என்று ‘இந்து’ ஆங்கில நாளேட்டுக்கு அவர் பேட்டி அளித்துள்ளார். இப்போதைய சட்டப்படி கொலைக் குற்றம் என்று தான் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், அந்த கவுரவக் கொலைக்கு உடந்தையாக குழுமியிருந்தவர்கள் மீது நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. அவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. எனவே அதற்கு தனிச் சட்டம் அவசியம் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ள கருத்து, பாராட்டி வரவேற்கத்தக்கதாகும்.

இப்படி ஒரு தனிச் சட்டம் கொண்டு வருவதற்காக முந்தைய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால், பிரணாப் முகர்ஜி குடியரசுத் தலைவரான பிறகு, அந்தக் குழு கலைக்கப்பட்டு விட்டது குறிப்பிடத்தக்கது.

## 20 நாட்கள்: 58 ஊர்களில் கழகம் நடத்துகிறது

# ‘சுயமரியாதை–சமதர்ம’ பரப்புரை இயக்கம்

தமிழினத்தை சீர்குலைக்கும் ஜாதி-தீண்டாமை ஒடுக்கு முறைகள்; பறிக்கப்படும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்குரிய இடஒதுக்கீடு உரிமைகள்; ‘உலகமயம்’ என்ற கொள்கையால் சுரண்டப்படும் பொருளாதார உரிமைகள் ஆகியவற்றை மக்களிடையே எடுத்து விளக்கிடும் ‘சுயமரியாதை சமதர்மப் பரப்புரைப் பயண’த்தை திராவிடர் விடுதலைக் கழகம் ஜுலை 24 ஆம் தேதி தொடங்கி, ஆகஸ்டு 12 ஆம் தேதி வரை நடத்துகிறது. 20 நாட்கள் 58 ஊர்களில் இந்தப் பயணம் நடைபெறுகிறது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முழுமையாகப் பயணத்தில் பங்கேற்கிறார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆங்காங்கே பயணத்தில் பங்கேற்கிறார்.

1933 ஆம் ஆண்டில் ஈரோட்டில் டிசம்பர் 28, 29 தேதிகளில் பெரியார் தனது இல்லத்தில் சுயமரியாதைத் தொண்டர்களைக் கூட்டி, சமதர்மத் திட்டத்தை வெளியிட்டார். சுயமரியாதை இயக்கம் முன் வைத்த சமதர்மத் திட்டம், ஈரோடு சமதர்மத் திட்டம் என்று அழைக்கப்பட்டது. இன்று ஒடுக்கப்பட்ட மக்கள், பார்ப்பனிய கட்டமைப்பில் ஜாதி-தீண்டாமை சுரண்டலுக்கும், புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் பொருளாதார சுரண்டலுக்கும் உள்ளாகி வரும் சூழலில், காலத்தின் அறைகூவலுக்கு முகம் கொடுக்க திராவிடர் விடுதலைக் கழகம், பெரியார் உருவாக்கித் தந்த சுயமரியாதை சமதர்ம திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளது. அதனடிப்படையில் உருவாக்கப்பட்ட பரப்புரைப் பயணத் திட்டம்:

24.7.13 - புதன் கிழமை - மாலை 6 - மயிலாடுதுறை.

25.7.13 - வியாழன் - மாலை 4 - பேரளம், மாலை 5 - திருவாரூர், இரவு 7 - மன்னார்குடி

26.7.13 - வெள்ளி - காலை 11 - மதுக்கூர், மாலை 4 - பட்டுக்கோட்டை, இரவு 6 - பேராவூரணி.

27.7.13 - சனி - காலை 10 - கறம்பக்குடி, மாலை 4 - கந்தர்வகோட்டை, மாலை 6 - திருவெறும்பூர், இரவு 7 - காட்டூர்.

28.7.13 - ஞாயிறு - காலை 11 - சமயபுரம் டோல்கேட், மாலை 5 - பாடலூர், இரவு 7 - பெரம்பலூர்.

29.7.13 - திங்கள் - காலை 11 - துறையூர், மாலை 5 - குளித்தலை, இரவு 7 - கரூர்.

30.7.13 - செவ்வாய் - காலை 11 - கொடுமுடி, மாலை 4 - திருச்செங்கோடு, மாலை 5 - பள்ளிபாளையம், இரவு 7 - குமாரபாளையம்.

31.7.13 - புதன் - காலை 11 - பவானி இலட்சுமி நகர், மாலை 5 - ஈரோடு, இரவு 7 - சென்னிமலை.

1.8.13 - வியாழன் - காலை 8 - ஊத்துக்குளி, மாலை 5 - திருப்பூர், மாலை 6 - பல்லடம், இரவு 7 - தாராபுரம்.

2.8.13 - வெள்ளி - காலை 8 - கணியூர், காலை 11 - மடத்துக்குளம், மாலை 5 - உடுமலைப்பேட்டை, இரவு 7 - பொள்ளாச்சி.

3.8.13 - சனி - காலை 11 - கிணத்துக்கடவு, மாலை 5 - கோவை, இரவு 7 - மேட்டுப்பாளையம்.

4.8.13 - ஞாயிறு - காலை 11 - சேவூர், மாலை 5 - நம்பியூர், இரவு 7 - கோபி.

5.8.13 - திங்கள் - காலை 8 - குருவரெட்டியூர், மாலை 5 - காவலாண்டியூர், மாலை 6 - கொளத்தூர், இரவு 7 - மேட்டூர்.

6.8.13 - செவ்வாய் - காலை 11 - மேச்சேரி, மாலை 5 - ஓமலூர், இரவு 7 - இளம்பிள்ளை.

7.8.13 - புதன் - காலை 11 - வாழப்பாடி, மாலை 5 - ஆத்தூர், இரவு 7 - கள்ளக்குறிச்சி.

8.8.13 - வியாழன் - காலை 11 - சங்கராபுரம், மாலை 5 - கடுவனூர், இரவு 7 - திருவண்ணாமலை.

9.8.13 - வெள்ளி - காலை 11 - செங்கம், மாலை 5 - ஊற்றங்கரை, இரவு 7 - காவேரிப்பட்டினம்.

10.8.13 - சனி - காலை 11 - ஜோலார்பேட்டை, பகல் 1 - வாணியம்பாடி, மாலை 5 - வேலூர், இரவு 7 - காஞ்சிபுரம்.

11.8.13 - ஞாயிறு - காலை 11 - ஸ்ரீபெரும்புதூர், பகல் 1 - பூந்தமல்லி, மாலை 6 - சென்னை.

12.8.13 - திங்கள் - காலை 11 - மாமல்லபுரம், மாலை 5 - புதுச்சேரி, இரவு 7 - அரியாங்குப்பம்.

## தொழிலதிபர்கள் அறங்காவலர்கள் ஆகிறார்கள்

தமிழ்நாட்டில் பிரபலமான கோயில்களில் தலைமை அறங்காவலர்களாக தொழிலதிபர்களை தமிழக அரசு நியமித்துள்ளது. ஸ்ரீரங்கம் ரெங்கநாதன் கோயில் தலைமை அறங்காவலராக டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு (அய்யங்கார்) நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன் இந்தப் பதவியில் இருந்தவர் அசோக் லேலாண்ட் தலைமை நிர்வாகி ஆர். சேஷாசாயி. கபாலீசுவரன் கோயில் தலைமை அறங்காவலராக அப்போலோ மருத்துவமனைக் குழுவைச் சார்ந்த விஜயகுமார் (ரெட்டி), மதுரை கள்ளழகர் கோயில் தலைமை அறங்காவலராக எஸ்.ஆர்.எம். கல்லூரி உரிமையாளர் பச்சமுத்து, மீனாட்சியம்மன் கோயிலுக்கு கருமுத்து டி கண்ணன் நியமிக்கப்பட்டுள்ளனர். கோயில் அன்றாடப் பணிகளை கண்காணிப்பதோடு கோயிலில் சொத்துக்களை மீட்க வேண்டியதும் இவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகள். முதலாளித்துவமும், பார்ப்பனியமும் கைகோர்த்து நிற்கிறது.

## வினாக்கள்... விடைகள்...

**வினா:** ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத அளவில் வீழ்ச்சி அடைந்து விட்டதே!

**விடை:** வீழ்ச்சியைத் தடுக்க சிறப்பு ‘யாகங்கள்’ பூஜைகள் ஏதும் கிடையாதா?

**வினா:** கூடங்குளம் அணுமின் நிலையம் எந்த நேரத்திலும் செயல்படத் தொடங்கும்.
**–அதிகாரி சிதம்பரம்**

**விடை:** அதாவது, இப்போது பழுதடைந்து நிற்கும் திட்டம், எந்த நேரத்திலும் செயல்படலாம், என்கிறாரா?

**வினா:** 1425 எடையுள்ள செயற்கைக் கோளை விண்ணில் ஏவுவதற்கு முன் ‘இஸ்ரோ’ தலைவர் இராதா கிருஷ்ணன் திருப்பதி சென்று ஏழுமலையானை தரிசித்தார்.

**விடை:** சரி தான். அப்போ இந்த முறையும் விண்ணில் சுற்றப் போவது இல்லையா?

**வினா:** நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு 3வது அணி பற்றி பரிசீலிப்போம்.
**– முலாயம் சிங்**

**விடை:** தலைவரே, அப்போது அதுதான் முதல் அணி!

**வினா:** தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் அரசியல் கட்சிகளை விலக்கி வைப்பதற்கு தனிச் சட்டம் கொண்டு வரப்படும்.
**– ப. சிதம்பரம்**

**விடை:** அந்த சட்டத்தில் என்ன அம்சங்கள் இடம் பெறும் என்பதை யாவது மக்களுக்கு தெரிவிப்பீர்களா?

தலையங்கம்

## நெய்வேலி பங்கு விற்பனை

நவரத்தினங்களில் ஒன்றாக கருதப்படுவது நெய்வேலி நிலக்கரி நிறுவனம். இந்த பொதுத் துறை நிறுவனம், ஆண்டுக்கு 1500 கோடி நிகர லாபம் ஈட்டித் தரும் - தமிழ்நாட்டின் சொத்து. தமிழ்நாட்டில் ஆளும் கட்சி, எதிர் கட்சி உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளை புறக்கணித்து, இந் நிறுவனத்தின் 5 சதவீத பங்குகளை தனியாருக்கு விற்கும் விபரீத முடிவை மன்மோகன் சிங் ஆட்சி எடுத்திருப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியதாகும். ஏற்கனவே இரண்டு முறை நடுவண் அரசு இந்த முயற்சிகளில் இறங்கி, தமிழ்நாட்டில் எழுந்த எதிர்ப்பின் காரணமாக நிறுத்தி வைத்தது. இந்தப் பங்கு விற்பனையை நிறுத்தக் கோரி, தமிழக முதல்வர் ஜெயலலிதா முன் வைத்த கோரிக்கையை செவிமெடுக்க மறுத்த நிலையில், ஒரு கட்டத்தில் அப்படி பங்குகளை விற்றே தீருவது என்பதில் நடுவண் அரசு உறுதியாக இருக்குமானால், தமிழக அரசின் தொழில் முதலீட்டுக் கழகமே அதை வாங்கிக் கொள்ளத் தயார் என்று கடிதம் எழுதினார். ‘உப்புக் கண்டம் பறி கொடுத்த பார்ப்பனராக’ டில்லி அரசு இதில் திட்டவட்டமாக பதில் அளிக்காமல் விழிக்கிறது.

பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை வேகம் வேகமாக வெளியாருக்கு விற்பனை செய்யும் முடிவு பாரதிய ஜனதா ஆட்சி காலத்திலேயே தொடங்கப்பட்டுவிட்டது. வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது 1992-லேயே பங்குகளை விற்பதற்காக (Disinvestment) ஒரு தனித் துறையே உருவாக்கப்பட்டு, அருண்ஷோரி என்ற பார்ப்பனர், அதன் அமைச்சராக்கப்பட்டார். துணை பிரதமர் அத்வானி தலைமையில் இதற்கென்றே உயர் அமைச்சரவைக் குழு ஒன்றும் செயல்பட்டது. பொதுத் துறை நிறுவனங்களான மாடர்ன் ஃபுட்ஸ் எண்ணெய் நிறுவனமான அய்.பி.சி.எல். துறைமுகத்தோடு தொடர்புடைய கண்டெய்னர் கார்ப்பரேசன் ஆப் இந்தியா, இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கு உரிமையான ஓட்டல்கள் என்று தொடர்ந்தது, அடுத்து அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் காப்பீட்டுத் துறை, வங்கித் துறை, தகவல் தொடர்புத் துறை என்று பொதுத் துறை பங்குகள் விற்பனை விரிவடைந்தது. முதலில், நட்டத்தில் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதாகக் கூறினார்கள். பிறகு இலாபத்தில் இயங்கும் நிறுவனங்களின் பங்குகளையும் அடிமாட்டு விலைக்கு விற்கத் தொடங்கிவிட்டார்கள். ரிசர்வ் வங்கியில் தலைமை அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்ற அரங்கராசன் என்ற பார்ப்பனர் தலைமையில் அமைச்சரவைக்கு ஆலோசனை கூற ஒரு குழுவே இதற்காக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பார்ப்பன நரசிம்மராவ் பிரதமராக இருந்த காலத்தில், நாட்டின் பொருளாதாரத்தை சர்வதேச சந்தைக்குத் திறந்துவிடும், ஆபத்தான பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தினார். அதன் தொடக்கம் நடுவண் அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள்தான் பங்குகள் விற்பனைக்குக் காரணங்களாகிவிட்டன.

1. அய்.எம்.எப். என்ற சர்வதேச நிதி நிறுவனம், கடன் வாங்குதலைக் குறைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது. இதை ஏற்றுக் கொண்டு, நீண்டகால அடிப்படையில் நீடித்து நிலைக்கும் உற்பத்திகளை வழங்கும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டன. பட்ஜெட் பற்றாக்குறையை குறைப்பதற்காக திட்டங்கள் வெட்டப்பட்டன. திட்டங்கள் குறைந்ததால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் குறைந்தது.
2. அதே நேரத்தில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரியை குறைக்க வேண்டும் என்று பணக்கார சுரண்டும் நாடுகளும் அதன் நிறுவனங்களும் வலியுறுத்தியதை அரசு ஏற்றது.
3. முதலீட்டுக் குறைப்பு, இறக்குமதி வரிக் குறைப்பு எனும் இரட்டை நடவடிக்கைகளால் அரசு வருமானம் குறைந்து, பற்றாக்குறைக்காக கடன் வாங்கும் நிலை உருவானது. வாங்கிய கடன் நீடித்த முதலீடுகளுக்கு செலவிடப்படாமல், நடைமுறைச் செலவுகளை ஈடுகட்டுவதற்கே பெருமளவில் செலவிடப்பட்டது.

இப்போது இந்தியாவில் குறுகிய கால வெளிநாட்டுக் கடன் ரூ.10 லட்சத்து 32 ஆயிரம் கோடி. அதை இன்னும் 9 மாதங்களில் செலுத்தியாக வேண்டும். இந்தியாவை சுரண்டுவதற்கு இந்த ஆட்சியாளர்கள் ‘நடைபாவாடை’ விரித்து அழைத்து வந்த கார்ப்பரேட் நிறுவனங்கள், வெளிநாடுகளில் வாங்கிக் குவித்த கடனே இதில் பெரும் பகுதியாகும். அமெரிக்க ரிசர்வ் வங்கி கடன்களை வழங்குவதில், தாராளம் காட்டியதை நம்பி, கடனை வாங்கிக் குவித்தார்கள். ஆனால், அமெரிக்க ரிசர்வ் வங்கி விரித்த வலையில் சிக்கியவர்கள், இப்போது அதே அமெரிக்க வங்கி விதிகளைக் கடுமையாக்கியதால்பொருளாதாரம் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கிறது.

கடன் நெருக்கடியிலிருந்து தப்பிப்பதற்கு பொதுத் துறையில் முதலீடுகளை குறைத்தார்கள். இப்போது அடுத்த கட்டமாக இலாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளையே விற்கத் தொடங்கிவிட்டனர். இந்திய தேசிய பார்ப்பன ஆட்சி, மண்டல் பரிந்துரை அமுலாக்கப்பட்டதைத் தொடர்ந்து, (பார்ப்பன அதிகார வர்க்கத்தின் ஆதிக்கம் சரியப் போகிறது என்ற அச்சத்தில்) பன்னாட்டு நிறுவனங்களுக்கு வெண்சாமரம் வீசினார்கள். அதற்கேற்ற பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கி, தங்கள் பார்ப்பன மேலாதிக்கத்தை நீட்டிக்க திட்டமிட்டதன் விளைவே இந்த நெருக்கடிகளுக்கான அடிப்படைக் காரணம். இந்த நிலையில் இந்திய தேசிய பார்ப்பன பன்னாட்டு சுரண்டல் பொறிக்குள் தமிழர்கள் ஏன் சிக்கித் தவிக்க வேண்டும் என்ற கேள்வியை எழுப்பும் காலம் வந்துவிட்டது.

நெய்வேலி பங்கு விற்பனை தமிழர்களுக்கு தரும் செய்தி இதுதான்!

### ஆன்மிகத் தலைவர் அம்பலப்படுத்துகிறார்

# பக்தியின் பெயரில் நடக்கும் மோசடிகள்

கேதார் நாத், பத்ரிநாத் போன்ற இமயமலைப் பகுதிகளில் பக்தி சுற்றுலா சீர்கேடுகளை உருவாக்கிவிட்டது என்றும், பக்தர்கள் சுற்றுலா வருவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் யோகி அஸ்வினி எனும் ஆன்மிகவாதி, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏட்டில், (ஜூன் 30, 2013) கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். குடும்பத்தைத் துறந்து தவம் இருப்போர் மட்டுமே இந்தப் பகுதியில் அனுமதிக்கப்பட வேண்டும் என்கிறார் அவர். 15 ஆண்டுகளுக்கு முன்பு தாம் கேதார் நாத் சென்றபோது, அங்கு பக்தியின் பெயரில் மோசடி, ஏமாற்று, தில்லுமுல்லுகள் நடந்ததை அவர் பட்டியலிட்டுள்ளார். இப்போது நடந்த சீரழிவுகளுக்குக் காரணங்களாக அவர் கீழ்க்கண்டவற்றை பட்டியலிட்டுள்ளார்.

1. இங்கு குடும்பம் குடும்பமாக வரும் பக்தர்கள் மோட்சத்தையோ, தவத்தையோ நாடி வரவில்லை. சொந்த வளங்களைப் பெருக்கிக் கொள்ளும் வெறியோடு, குடும்பத்துடன் சுற்றுலா வருகிறார்கள். தங்கள் சொந்த நலன்களையே கடவுளிடம் வேண்டுகிறார்கள். பசியால் வாடும் மனிதர்களுக்கோ, விலங்குகளுக்கோ பசி போக்கிட முன்வர மாட்டார்கள்.
2. கங்கை நதியையும், நீர் நிலைகளையும் விஷமாக்கிவிட்டார்கள். கோடிக் கணக்கான டன் அளவில் கழிவுகளை இங்கேதான் கொட்டுகிறார்கள். **(ரூ.2600 கோடி - கங்கையை சுத்தப்படுத்த அரசு பணத்தைக் கொட்டியும், சுத்தப்படுத்த முடியவில்லை என்று கடந்த வாரம் பிரதமர் மன்மோகன் தலைமையிலான கங்கை நதி நீர்ப்படுகை ஆணையத்தின் கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. - ஆர்)**
3. இங்கே உள்ள பெரும்பாலான ‘சாதுக்கள்’ தொழில் நடத்தி, தோல்வி அடைந்த நிலையில் மதத்தை வைத்து பணம் பறிக்க வந்தவர்கள். அவர்கள் ஏராளமான ஆசிரமங்களை உருவாக்கிக் கொண்டு கூட்டம் சேர்க்க மதத் திருவிழாக்களை நடத்தி வருகிறார்கள். யோகா, ஆசனம் என்ற பெயரில் பயிற்சி மய்யங்களையும், ஆயுர்வேத மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகளையும் நிறுவி, கோடி கோடியாக சுருட்டுகிறார்கள். **(வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த பக்தர்களிடம் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு பணத்தைத் திருடிக் கொண்டு ஓடிய சாதுக்களை ராணுவத்தினர் மடக்கிப் பிடித்துள்ள செய்திகள் வெளிவந்துள்ளன. - ஆர்)**
4. பெரும்பாலான ‘புண்ணியதலங்களில்’ நன்கொடை என்ற பெயரில் பணம் சுரண்டப்படுகிறது. ஏழைகளுக்கு உதவுவதாக பொய் சொல்கிறார்கள். தங்க நகைகளாக பக்தர்களை ஏமாற்றிப் பிடுங்கி, தங்கள் காசுப் பெட்டியை நிரப்பிக் கொள்கிறார்கள். இஸ்லாமியர்கள் ஆண்ட காலத்தில் எந்த இஸ்லாமிய மன்னனும், இந்தப் பகுதியையோ இங்கு வாழ்ந்த மக்களையோ சூறையாடியதில்லை.

- என்று அந்த பிரபல ஆன்மிகத் தலைவர் குமுறியுள்ளார்.

பக்தியின் மோசடிகளுக்கு ஆன்மிகத் தலைவர்களே தரும் ஒப்புதல் வாக்குமூலம் இது!

### கழகத்தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற

# சர்வதேச சித்ரவதை எதிர்ப்பு நாள்

ஜூன் 26 ஆம் நாள் சர்வதேச சித்ரவதைக்கு எதிரான நாள். 1998 ஆம் ஆண்டு அந்த நாளை சர்வதேச சித்ரவதைக்கு எதிரான நாளாக பிரகடனம் செய்தார்கள். சர்வதேச சித்ரவதைக்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கையில் இதுவரை கையெழுத்திடாத இந்தியா அதில் கையெழுத்து இட வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடிக் கொண்டிருக்கும் சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து 22.6.2013 சனிக் கிழமை இரவு 8 மணியளவில், திருநெல்வேலி மாவட்டம் மேலப் பாளையம் பஜார் திடலில் சர்வதேச சித்ரவதைக்கு எதிரான தினத்தை முன்னிட்டு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் கூட்டமைப்பு சார்பாக நடைபெற்ற இந்த பொதுக் கூட்டத்திற்கு வழக்கறிஞர் தௌ.அப்துல் ஜப்பார் தலைமையேற்றார். அ.பீட்டர் வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு ஆகியோர் சிறப்புரையாற்றினர். காவல்துறையினர் அப்பாவிகள் மீது நடத்திய பல சித்ரவதைகள், பொய் வழக்குகள், வழக்கை நடத்தக்கூடிய விவரம் இல்லாத பலர் மரண தண்டனையை எதிர்நோக்கி இருக்கும் விவரங்கள் ஆகியவைகளை விரிவாக பேசிய கழகத் தலைவர் 2011 கணக்கின்படி சிறையில் இருக்கும் சிறைவாசிகளில் இஸ்லாமியர் எண்ணிக்கை 12.9 சதவீதம். விசாரணை கைதிகளாக இருக்கும் இஸ்லாமியர்களின் எண்ணிக்கை 12.27 சதவீதம் இருக்கிறார்கள். தடா போன்ற தடுப்புச் சட்டங்களில் 16.62 சதவீதம் பேர் இஸ்லாமியர்கள் இருக்கின்றார்கள். மக்கள் தொகையில் 5.5 விழுக்காடு என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறையில் இருப்பவர்களாக 200 சதவீதம் பேராக - கொடும் சட்டங்களில் 300 சதவீதம் பேராக இருக்கிறார்கள்.

ஆக எங்கேயோ தவறு நடந்திருப்பதை புரிந்து கொள்ள முடிகிறது. ஏன் சராசரிக்கு அதிகமாக இருக்கிறார்கள் - எப்படி இருக்க முடியும் என்பதை நாம் கேள்விக்கு உள்ளாக்க வேண்டும். மத ரீதியாக பிரித்து பார்க்கும் போக்கை காவல்துறை மனதிலும், அரசுகளின் மனதிலும் ஏற்றி வைக்கப்பட்டுள்ளதை மாற்றியாக வேண்டும். இது இஸ்லாமியர்களுக்கு மட்டும் நடக்கும் கொடுமை அல்ல என்பதை இஸ்லாமியர் அல்லாதோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். மற்றவர்களின் உரிமைக்கும் குரல் கொடுக்கும் எண்ணம் இஸ்லாமியருக்கும் வேண்டும் என்பதை சுட்டிக் காட்டினார்.

# சுற்றுச் சூழல் சீரழிவு: பக்தர்கள் வருகைக்கு தடை வருமா?

கடவுள் மனிதனைப் படைத்தானா? மனிதன் கடவுளைப் படைத்தானா என்ற கேள்வி, காலம் காலமாக எழுப்பப்பட்டு வருகிறது. எவரும் படைக்கப்படவில்லை. மனிதன்கூட ஒரு பரிணாம வளர்ச்சி தான் என்று அறிவியல் அதற்கு விடை கூறிவிட்டது. ஆனாலும், அறிவியல் சிந்தனைகளை, கண்டுபிடிப்புகளைக்கூட கடவுளைக் காப்பாற்று வதற்கு பயன்படுத்த ஒரு கூட்டம் படாதபாடுபட்டு வருகிறது.

*“கடவுள் எவர் என்று யார் பார்த்தார்?
அதை கண்ணில் காட்டியது சினிமாதான்!”*

என்று கவிஞர் வாலி, ஒரு திரைப்படத்தில் பாடல் எழுதினார். கடவுள் வேடம் தரித்து நடித்த நடிகர்களும், நடிகைகளும், மக்கள் உள்ளங்களில் கடவுளர்களாகவே பதிந்து போனார்கள்.

‘கடவுள் உன் முன் தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டால், எதைக் கேட்பாய்?’ என்று நண்பனிடம் கேட்டபோது, ‘நிறைய சொத்துகள், செல்வங்களைத் தா என்று கேட்பேன்’ என்று பதில் வந்தது. ‘நான் அதையெல்லாம் கேட்க மாட்டேன்; நல்ல அறிவைத் தா என்று கேட்பேன்’ என்று நண்பன் பதில் சொன்னான். சட்டென்று மற்றவன் சொன்னான், ‘யாரிடம் எது இல்லையோ, அதைத் தானே கேட்க முடியும்?’

பெரியாரிடம் இதே கேள்வியைக் கேட்டார்கள். பளிச்சென்று பதில் சொன்னார், ‘அப்படி வந்தால், கடவுள் இருக்கிறார் என்று சொல்லிவிட்டுப் போகிறேன்’.

மனநல மருத்துவமனையில் ஒரு நோயாளி எப்போதும் தனியாக உட்கார்ந்து கொண்டே “கடவுளே எனக்கு நூறு ரூபாய் தர மாட்டாயா?” என்று ஒவ்வொரு நாளும் கேட்டுக் கொண்டே இருந்தான். அனுதாபப்பட்ட மருத்துவர் ஒருவர், 50 ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் நீட்டினார். அடுத்த நாள், அதே மருத்துவர் பார்த்தபோது, அவன் வேண்டுதலை நிறுத்தவில்லை. இந்த முறை அவன் வேண்டுதல் வேறாக இருந்தது. “ஆண்டவரே பணத்தை அந்த டாக்டரிடம் தராதே! அவர் ரூ.100 ரூபாயில் 50 ரூபாயை எடுத்துக் கொள்கிறார்.”

கடவுளிடம் வேண்டுதல்களை வைக்கும் பக்தர்களின் கோரிக்கைகள் பெரும்பாலும் சுயநலம் சார்ந்தவைகள் என்பதை சொல்ல வேண்டிய அவசியமில்லை.

“உங்களின் கடவுள் எது?” என்று கேட்டால், விதம் விதமாக பதில் வரும். “அம்மா, அப்பா தான் எனக்கு தெய்வம். அவர் இல்லாவிட்டால் நான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது; அவர்கள் தான் எனக்குக் கடவுள்.”

“கடவுள் நமக்குள்ளேதான் இருக்கிறார். அதைத் தேடிப் பிடிக்காமல் கோயில்களை நாடி ஏன் ஓட வேண்டும்” இப்படி பகட்டுக்காக தத்துவம் பேசு கிறவர்களும் உண்டு. இன்னும் சிலர், இயற்கைதான் கடவுள் என்று ஒரு படி மேலே போய் கூறுவார்கள். ‘கோயிலுக்குப் போனால் உள்ளத்துக்கு அமைதி கிடைக்கிறது’ என்பார் மற்றொருவர். இவை எல்லாமுமே மனிதர்களால் தேர்வு செய்துகொண்ட விரப்பக் ‘கடவுள்’கள்!

இது தவிர சிவன் தென்னாட்டுக் கடவுள்; முருகன் தமிழ்க் கடவுள் என்று தேசிய இனங்களின் அடிப்படையில் பிரிக்கப்படும் கடவுள்களும் உண்டு. இன்னும் சைவக் கடவுள், அசைவக் கடவுள், ஆகமக் கடவுள், ஆலமரத்தடிக் கடவுள், பேருந்து நிலையம், தொடர்வண்டி நிலையம், மருத்துவமனை, மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகம் என்று திரும்புமிட மெல்லாம் கடவுள்களை கோயில்கள் கட்டி உட்கார வைத்திருக்கிறார்கள்.

இத்தனை கடவுள்களையும் தாண்டி, இமயமலைப் பிரதேசங்களுக்கு பக்தி சுற்றுலாவாக குழுகுழுவாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். தென்னாட்டு சிவன், தமிழ்நாட்டு முருகனை எல்லாம் ஓரம் கட்டிவிட்டு, வடக்கே பத்ரிநாத்துக் கும், கேத்ரிநாத்துக்கும் போக வேண்டுமா? தமிழ்நாட்டுக் கடவுள் சக்தியற்றுப் போய்விட்டதா? என்று கேட்டால் உடனே கடவுளை நிந்திப்பதாக ஆத்திரத்தில் துள்ளிக் குதிக்கிறார்கள்.


To save the hills in Uttarakhand, stop pilgrimage tourism
By Ashok Dilwali
Before & After

இயற்கை வளம் நிறைந்த மனித நடமாட்டங்கள் இல்லாதிருந்த மலைப்பகுதிகளை “புண்ணிய ஸ்தலங்களாக்கி” அவைகளுக்கு மகிமைகளையும் சக்திகளையும் திணித்து மக்களிடையே பரப்பு வதற்கென்றே இங்கே ஊடகங்கள் ஏராளம் இருக்கின்றன. போதாக்குறைக்கு திரைப்பட “சூப்பர் ஸ்டார்கள்” படப்பிடிப்பு முடிந்து இந்தப் பகுதி களுக்கு ‘ஆன்மிகத் தேடலுக்காக’ விமானமேறிப் போய் இதற்கான ‘மகத்துவங்களை’ அதிகரிக்கச் செய்துவிட்டார்கள்.

“கடவுள்களின் தேசங்களாக” இப்படி இயற்கை வளம் நிறைந்த பகுதிகள் மாற்றப்பட்டு, விடுதிகளும், வீடுகளும், கடைகளும், வழிகாட்டிகளும், தரகர் களும் பெருகியதால் சுற்றுச் சூழலைக் காத்து நிற்கும் காடுகள் அழிக்கப்பட்டன. மண்வளத்தின் நீர் பிடிப்பு குறைந்தது. மழையும் வெள்ளமும் வரும் போது மலைச் சரிவுகளும் சாலை அரிப்புகளும் நிகழ்கின்றன. இதில்கூட சுற்றுலா வந்த பக்தர்கள் காப்பாற்றப்படுவதில் தான் பத்திரிகைகள் அக்கறை காட்டின. இந்தப் பக்தர்களின் சுற்றுலாவை வைத்து சிறு சிறு தொழில் நடத்தி பிழைப்பு நடத்திய ஏழைத் தொழிலாளர்களைப் பற்றி எவருமே கவலைப்படவில்லை என்று விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

இதிலே, அரசியல் வேறு. குஜராத் மோடி ஒரே நாளில் ஹெலிகாப்டரில் பறந்து, 15000 குஜராத்தியர்களை மீட்டு வந்தார் என்று அவரது சீடர்கள் ஒரு பொய்யான செய்தியை பரப்பி னார்கள். மோடியே பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்கிடம் அப்படி எல்லாம் எதுவும் நடக்கவில்லை என்று விளக்க மளித்த பிறகும், இப்படி ‘டமாரம்’ அடிப்பது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கேதார்நாத் கோயிலை தாம் கட்டித்தரப் போவதாக மோடி கூறுகிறார். உத்தரகாண்ட் முதல்வர், ‘நாங்கள் தான் கோயில் கட்டுவோம்’ என்கிறார். ஹெலிகாப்டர் உதவியோடு விமானப் படையின ரால் உயிரைப் பணயம் வைத்து தமிழக முதல்வர் முயற்சியால் சென்னை கொண்டு வரப்பட்ட பக்தர்கள் கடவுள் கருணையால் உயிர் பிழைத்தோம் என்று வாய்கூசாமல் பொய் பேசுகிறார்கள்.

இமயமலையைச் சுமந்து நிற்கும் இயற்கை வளம் காப்பாற்றப்பட வேண்டுமானால் அங்கு பக்தர்கள் சுற்றுலா செய்வதைத் தடை செய்ய வேண்டும் என்று கடந்த 34 ஆண்டுகளாக இந்தப் பகுதியின் இயற்கைச் சூழலை புகைப்படமெடுத்து 24 நூல்களை வெளியிட்டுள்ள அசோக் திவாலி என்ற மூத்த பத்திரிகையாளர் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஏட்டில் எழுதுகிறார்.

பக்தர்களைக் காப்பாற்ற உயிரைப் பணயம் வைத்து மீட்புப் பணியில் ஈடுபட்ட 20 ராணுவத் தினர் ஹெலிகாப்டர் விபத்தில் மரணமடைந்து விட்டார்கள். இதில் தமிழகத்தைச் சார்ந்த பிரவின் என்ற விமானப்படை அதிகாரியும் ஒருவர். திருமண மாகாத தனது ஒரே மகனை தாய் பறி கொடுத்து நிற்கிறார். மீட்கப்பட்ட இந்த பக்தர்களுக்கு நன்றி உணர்ச்சியிருக்குமானால், இதயத்தில் ஈரம் இருக்குமானால், கடமைக்காக உயிரிழந்த இந்த மகத்தான மாவீரர்களின் படத்தைத்தான் தங்கள் வீடுகளில் மாட்ட வேண்டும்.

தன்னை நாடி வந்த பக்தர்களை கடவுள் காப்பாற்றவில்லை. மாறாக, கடவுள் பக்திதான், இயற்கை வளம், சுற்றுச் சூழல் பேரழிவுக்கு புனித யாத்திரைகளே காரணமாக இருந்திருக்கின்றன. இவ்வளவு கடும் விலை கொடுத்தப் பிறகும் மீண்டும் கோயிலைக் கட்டி, பக்தர்கள் வருகைக்கான ஏற்பாடுகளை செய்வோம் என்று உத்தரகாண்ட் முதல்வரும், மோடியும், பக்தி வியாபாரிகளும் அறிவிக்கிறார்கள் என்றால், இதைவிட மனித சமூகத்துக்கு எதிரான சுற்றுச் சூழலை அழித் தொழிக்கும் அடாவடித்தனம் வேறு இருக்க முடியுமா?

**“கடவுளை பரப்புகிறவன் அயோக்கியன்” என்ற பெரியாரின் கருத்து இவர்களால் உறுதியாக வழிமொழியப்படுகிறது என்பதுதானே உண்மை!**

## அரசியல் கட்சிகளின் சொத்து – நன்கொடை

சமீபத்தில் தேர்தல் ஆணையத்தில் அரசியல் கட்சிகள் சமர்ப்பித்துள்ள கணக்கின்படி கடந்த நான்கு ஆண்டுகளில் (2007-08 முதல் 2011-12) வரை காங்கிரஸ் சேர்த்துள்ள சொத்து ரூ.1,662 கோடி.

பகுஜன் சமாஜ் - ரூ.1,226 கோடி
பா.ஜ.க. - ரூ.852 கோடி
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி - 355 கோடி

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் மூலமாக அதிக நிதி பெறும் கட்சி பா.ஜ.க. குஜராத் பூகம்ப நிவாரணத்துக்காக அமெரிக்காவிலிருந்து வசூலித்து அனுப்பப்பட்ட நிதி, 2002 ஆம் ஆண்டு நடந்த முஸ்லீம்கள் மீதான வன்முறை வெறிச் செயலுக்கு பயன்படுத்தப்பட்டது என்கிற குற்றச்சாட்டை அமெரிக்க பேராசிரியர் ஒருவர் ஆதாரங்களுடன் முன் வைத்தார்.

காங்கிரஸ் - பா.ஜ.க. இரண்டு கட்சிகளுக்கு மட்டும் அரசு மான்யமாக ரூ.255 கோடி வழங்கப்பட்டுள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து பெருமளவில் அவை நிதி பெறுகின்றன. இதில் கறுப்பு மற்றும் ஊழல் பணமும் அடக்கம். தமிழகத்தில் காங்கிரஸ், பா.ஜ.க., தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க., விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகள், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வருமான வரி கணக்கைத் தெரிவிக்க மறுத்துவிட்டன. இந்தியா முழுக்க பல்வேறு ஊழல் முறைகேடுகளால் காங்கிரஸ் கட்சி ஒரு நாள் வசூலிக்கும் தொகை ரூ.495 கோடியை நெருங்கும். இப்போது தகவல் அறியும் உரிமைச் சட்டம், தங்களைக் கட்டுப்படுத்தாது என்று, காங்கிரஸ், பா.ஜ.க., இடதுசாரிகள் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கூறிவிட்டன.

**தகவல்: ‘ஆனந்த விகடன்’** 26.6.2013

## தமிழ்நாடு மாணவர் கழக மாநில கலந்துரையாடல் கூட்டம்

தமிழ்நாடு மாணவர் கழக மாநில கலந்துரையாடல் கூட்டம் 15.06.13 மாலை 5.00 மணியளவில் மாநில அமைப்பாளர் கோவை இர.சிலம்பரசன் தலைமையில் திராவிடர் விடுதலைக்கழகச் செயலவைத் தலைவர் சு.துரைசாமி, அமைப்புச் செயலாளர் தி.தாமரைக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடை பெற்றது.

தேசிய ஆசிரியர் கல்விக் கழகம் நடத்தும் ஆசிரியர் தகுதித் தேர்வில் வகுப்புவாரி உரிமையைப் பின்பற்றக்கோரி துண்டறிக்கைப்பிரச்சாரம் செய்வது எனவும், பள்ளிகளில் “அருகாமைப் பள்ளி” முறை நடைமுறையில் உள்ளதா என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களைப் பெறுவது எனவும், அதன் அடிப்படையில் போராட்டங்களை முன்னெடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு மாணவர் கழகத்தின் ஈரோடு மண்டல அமைப்பாளராக தோழர் குமாரபாளையம் செ.வெங்கட், சேலம் மண்டல அமைப்பாளராக மேச்சேரி அரசன், திருப்பூர் மாவட்டப் பொறுப்பாளராக தோழர் பிரகாஷ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# சாய் சமாஜ் அலுவலகம் முற்றுகை: கழகத் தோழர்கள் கைது



சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 27.6.2013 அன்று வியாழன் காலை 10 மணிக்கு மயிலாப்பூரிலுள்ள சாய் வித்யாலயா பள்ளியை இடித்த சாய் சமாஜ் அலுவலகம் அருகே முற்றுகைப் போராட்டம் கழக மாவட்ட செய லாளர் இரா. உமாபதி தலைமையில் நடந்தது.

சாய் வித்யாலயா பள்ளியை தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும்; இடித்த சாய் வித்யாலயா பள்ளி சுவற்றை மீண்டும் புதுப்பிக்க வேண்டும்; பள்ளி மாணவர்களுக்கு தொடர்ச்சியாக இடையூறு தரும் கோவில் நிர்வாகத்தின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டத்தில் மே 17 இயக்க அமைப்பாளர் திருமுருகன் காந்தி, திராவிடர் விடுதலைக் கழகம் விழுப்புரம் அய்யனார், காஞ்சி மாவட்ட கழக அமைப்பாளர் செங்குட்டுவன், பொருளாளர் சேகர், வடசென்னை ஏசு. தட்சணாமூர்த்தி, விஜய், இரணியன், மயிலைப் பகுதி பா. ஜான், இராவணன், மாரிமுத்து, மனோகர், பார்த்திபன் உள்ளிட்ட 70க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர்களை காவல் துறை கைது செய்து மயிலாப் பூரிலுள்ள வாசுகி மண்டபத்தில் வைத்து, மாலை அனைவரையும் விடுதலை செய்தது.

# சுயமரியாதை வாழ்வியல் விழா

சுயமரியாதை கலை பண்பாட்டுக்கழகத்தின் மாநில கலந்துரையாடல் கூட்டம் பல்லடம் அருகே அனுப்பட்டியில் 02.06.13 அன்று நடைபெற்றது. சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் திராவிடர் வாழ்வியல் விழா நடத்துவது எனவும், விழா பற்றி விரிவாக ஏற்காடு கலந்துரையாடலில் விவாதிப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி கடந்த 08.06.13 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஏற்காட்டில் விழா குறித்த முடிவுகள் எடுக்கப்பட்டன.

வரும் அக்டோபர் 20 ஞாயிற்றுக்கிழமை திருப்பூரில் சு.க.ப.க சார்பில் திராவிடர் வாழ்வியல் விழாவை நடத்துவது எனவும், அந்த விழாவில் வேத - இந்து வாழ்வியலுக்கு எதிரான திராவிடர் வாழ்வியல் பற்றிய விரிவான - வழிகாட்டும் நெறிமுறைகள் போன்ற கட்டுரைகள் அடங்கிய "திராவிடர் பண்பாட்டு மலர்" வெளியிடுவது எனவும் முடிவு செய்யப்பட்டது. அதே நாளில் சு.க.ப.க தோழர்களின் கலைவெளிப்பாடுகள் கலைவிழாவாக நடைபெறும்.

திராவிடர்களின் உணவு, உடை, கல்வி, மருத்துவம், விவசாயம், கலை, இல்ல விழாக்கள், பொது விழாக்கள் போன்ற அனைத்துப் பண்பாட்டு வெளிப்பாடு களிலும் "திராவிடர் அடையாளம்" என்ன என்பதை விளக்கும் நிகழ்வாக இவ்விழா நடைபெற உள்ளது. விழாவின் முக்கியமாக திராவிடர் உணவு விழாவும் நடைபெறும். மாட்டுக்கறி அவசியம் இடம்பெறும். திருப்பூர் டவுன் ஹாலில் விழா நடைபெற உள்ளது. இவ்விழாவில் மாநிலம் முழுவதும் உள்ள தோழர்கள் பங்கேற்கும் வண்ணம் ஏற்பாடுகளையும் விளம்பரங்களையும் செய்வது என முடிவு செய்யப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழக அமைப்புச் செயலாளர் தி.தாமரைக்கண்ணன், கோவை மண்டல அமைப்புச் செயலாளர் விஜயன், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் சேலம் மண்டல அமைப்பாளர் கொளத்தூர் குமார், மதுரை மண்டல அமைப்பாளர் செம்பட்டி மு.இராஜா, கோவை மாவட்ட அமைப்பாளர் அ.ப.சிவா, திருப்பூர் மாவட்டப் பொறுப்பாளர்கள் பிரகாசு, பாரதிவாசன், பரமேசுவரி, சேலம் மாவட்ட அமைப்பாளர் காவை இளவரசன், சென்னை மாவட்ட அமைப்பாளர் செல்லையா முத்துச்சாமி, பள்ளபட்டி மணிமாறன், கொழுமம் ஆதி, தீந்தமிழ், அனுப்பட்டி சுபா, திருப்பூர் மாநகரச் செயலாளர் ஜீவா நகர் குமார், சுயமரியாதை கலைக்குழு தோழர்கள் உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்று கருத்துரையாற்றினர்.

### ச.கருணாகரன்-மு.கவிதா மணவிழா

23.6.2013 ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி எஸ்.வி.சதீஷ் திருமண மண்ட பத்தில் ச.கருணாகரன்-மு.கவிதா ஆகியோரது வாழ்க்கை இணையேற்பு விழா நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

### நன்கொடை

சேலம் மாவட்டம் (மேட்டூர் ஆர்.எஸ்.) அ. சக்தி வேல்-அனிதா ஆகியோரது மகள் அறிவுமதி 11 ஆவது பிறந்த தினத்தின் (20.6.2013) மகிழ்வாக கழக ஏட்டிற்கு ரூ.1500 நன்கொடை வழங் கினர்.

# 'சமஸ்கிருதம்' கடவுள் மொழி என்பது கற்பனையே!

ஒவ்வொரு மொழிக்கும் அதன் எழுத்து. உச்சரிப்பு, இலக்கணம், வாக்கிய அமைப்பு போன்றவை திட்டமிட்டு அந்த மொழிக்காகவே வடிவமைக்கப் பட்டவை என்ற கருத்து பலரிடமும் ஆழமாக வேரூன்றி இருக்கிறது. ஆனால், அது உண்மையல்ல. ஒரு மொழியிலிருந்து பல மொழிகள் கிளைத்துள்ளன. மாற்றங்களைத் தாங்கி வளர்ந்துள்ளன. அடிப்படை இலக்கணம் வழியாகவே மொழியை கற்பிக்க வேண்டும் என்ற சிந்தனையில் மாற்றம் தேவை. அறிவியல் பார்வையில் மொழி பற்றிய வகுப்பறைப் பாடங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். நமது குழந்தைகள் மொழியையும் சமூகத்தின் மொழியையும் நாம் புறந்தள்ளிவிடக் கூடாது. வகுப்பறைகளில் அறிவியலின் தரம் உயர்த்தப்பட வேண்டும். இன்று ஒரு மொழியாக இருப்பது நாளை இரண்டு மொழிகளாக திரியக்கூடும்.

இந்துஸ்தானி என்ற ஒரு மொழியிலிருந்துதான், இந்தி, உருது என்ற இரண்டு மொழிகள் கிடைத்தன. செர்போ-குரோஷியன் மொழியிலிருந்து செர்பியன், குரோஷி ஆகிய இரண்டு மொழிகள் தோன்றின. பிராஜ், மைத்திலி, அவாதி, போஜ்புரி போன்ற மொழிகள் இந்தியின் தாய்மொழியாக இருந்தவை. இப்போது, இந்தி தாய்மொழியாகி, அவை இந்தியின் சேய் மொழியாகிவிட்டன. பல பெரும் கவிஞர்கள், இந்தி மொழியில் கவிதை எழுதுவதையே தரம் தாழ்ந்த செயலாகக் கருதிய காலம் ஒன்று இருந்தது. அதைவிட பிராஜ் மொழியிலேயே அவர்கள் எழுத விரும்பினார்கள். சமூக அரசியல் நிகழ்வுகளின் வழியாகவே ஒரு மொழி தன்னை தரப்படுத்திக் கொள்கிறது. இலக்கணங்கள், எழுத்து வடிவங்கள், அகராதிகள், தரவுகள் - மொழிப் பயன்பாட்டில் ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில்தான் கட்டமைக்கப் படுகின்றன.

அரசியல் சட்டத்தைப் படிக்காமலேயே இந்திதான் இந்தியாவின் தேசிய மொழி என்று தவறாகச் சிலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இந்தி ஆட்சி மொழி என்றே அரசியல் சட்டத்தின் 8 ஆவது பிரிவு கூறுகிறது. தேசிய மொழி என்று கூறவில்லை. ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை நீடிக்கும் என்பது 1965 ஆம் ஆண்டு மொழிப் போராட்டத்துக்குப் பிறகு உறுதியானது. அரசியல் சட்டத்தின் 8 ஆவது அட்டவணையில் முதலில் 8 மொழிகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இப்போது இதன் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் இதில் கூடுதலாக மொழிகளை சேர்க்கும் வாய்ப்புகள் சட்டத்தில் உள்ளன. கொங்கனி, மணிப்பூரி, போடோ, நேபாளி, டோக்ரி, சந்தாணி போன்ற மொழிகள் இன்னும் இந்தப் பட்டியலில் இடம் பெறவில்லை.

சமஸ்கிருதம் ஏதோ முழுமையாக வடிவமைக்கப்பட்ட மொழி என்றும், இந்திய மொழிகளின் தாய் என்றும் கூறப்படுவது எல்லாம் பொய். வங்காளம், குஜராத்தி, மராத்தி, இந்தி, பஞ்சாபி போன்ற இந்தோ -ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளுடன் சமஸ்கிருதத்துக்கு நெருங்கிய தொடர்பு உண்டு என்பது உண்மைதான். ஆனால், தென்னாட்டின் மொழிகளும், வடகிழக்கு மாநிலங்களில் பேசப்படும் திபெத்து, பர்மிய குடும்ப மொழிகளும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவையே! இந்தியாவில் பல்வேறு பழங்குடிப் பிரிவினர் பேசும் முந்தா மொழிக்கும், சமஸ்கிருதத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பிறகு எப்படி சமஸ்கிருதம், இந்திய மொழிகளின் தாய் மொழியாக முடியும்?

சமஸ்கிருத எழுத்து வடிவமான 'தேவநாகிரி' வடிவம்தான் மிக உயர்ந்தது என்றும், அதற்கான எழுத்தும் ஒலியும் கடவுளால்தான் உருவாக்கப்பட்டது என்றும் ஒரு பொய்யான நம்பிக்கை கட்டமைக்கப்பட்டுள்ளது.

உண்மையில் சமஸ்கிருதம், 14-க்கும் அதிகமான எழுத்து வடிவங்களில் எழுதப்பட்டுள்ளது என்ற உண்மை பலருக்கும் தெரிவதில்லை. உலகில் எந்த வடிவ எழுத்துகளிலும் சிறிய மாற்றங்களுடன் சமஸ்கிருத மொழியை எழுதிட முடியும். மொழியின் ஒலிக்கும் எழுத்து வடிவத்துக்கும் தொடர்பு உண்டு என்பதுகூட ஒரு மாயைதான். எந்த ஒரு மொழிக்கும் ஒரு எழுத்து வடிவத்தை ஒரு சில நாட்களிலேயே நாம் உருவாக்கிட முடியும்.

எழுத்து மொழியைவிட பேச்சு மொழி வேகமான மாறுதல்களுக்கு உள்ளாகி விடும். சமூக, கலாச்சார, அரசியல் காரணங்களுக்காக எழுத்து வடிவ மொழியை காப்பாற்ற வேண்டிய அவசியமிருக்கிறது. இந்த நிலையில் வகுப்பறையில், 10, 12 வயது குழந்தைகளிடம் மொழியின் கட்டமைப்பு, இலக்கணம், பாரம்பரியம் பற்றிய புரிதல்களை உருவாக்கிட முடியாது. அது மிகவும் கடினம். அதற்கு பதிலாக மொழி தொடர்பான புரிதலை, அறிவியல் ரீதியாக அவர்களிடம் விளக்கிடும் பயிற்சி முறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

**– 'இந்து' நாளேட்டில் (மே 15, 2013) வெளிவந்த கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 4th July 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜூலை 11, 2013 | புரட்சி 12 | முழக்கம் 26 | விலை: ரூ.3.00

### பல்லடம் ஆர்ப்பாட்டத்தில் கொளத்தூர் மணி உரை

# இளவரசன் மரணம்: ‘ஜாதிய’த்தின் கொலை

## தடையை மீறி கழகத்தினர் கைது



தருமபுரி மாவட்டத்தில் திவ்யா-இளவரசன் என்ற வெவ்வேறு ஜாதியை சார்ந்தவர்கள் ஜாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்டதால், நத்தம், அண்ணாநகர், நாய்க்கன் கொட்டாய் ஆகிய பகுதிகளில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. அதன் பிறகும் பிரியாமல் வாழ்ந்து வந்த ஜாதி மறுப்பு இணையர் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வந்தனர்; ஜாதி வெறியர்களின் மிரட்டல்களால் திவ்யா தனது தாயாருடன் சென்றார். இறுதியில் 4-7-2013 அன்று இளவரசனின் உடல் இரயில் தண்டவாளத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இளவரசன் சாவுக்குக் காரணமான ஜாதி வெறியர்களைக் கண்டித்து, 07-07-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 3-00 மணியளவில், திருப்பூர் மாவட்டம் பல்லடம் பேருந்து நிலையம் எதிரில், திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. கழக செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி தலைமையிலும், கோவை மண்டல அமைப்புச் செயலாளர் பல்லடம் விசயன் முன்னிலையிலும் நடத்தப்பட்ட இந்த கண்டன ஆர்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டன உரையாற்றினார்.

“ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட காரணத்திற்காக பல்வேறு சிக்கல்களை சந்தித்த இளவரசனை நாம் பறிகொடுத்திருக்கின்றோம்; இப்போது அவரைத் துரத்தியடித்து அவரின் கொலைக்கு காரணமான ஜாதி வெறியர்கள் சொல்லுகின்றார்கள், இது திவ்யாவிற்கும் இளவரசனுக்கும் மட்டுமே சம்பந்தப்பட்ட விசயம், யாரும் தலையிட வேண்டியதில்லை என்று. ஆனால் இந்த கொடியவர்கள்தான் இந்த ஜாதி மறுப்புத் திருமணத்தை பிரித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்களைப் பயமுறுத்தி பல்வேறு சிக்கல்களை உண்டாக்கியதன் விளைவாகத்தான் இளவரசன் இறந்திருக்கிறார். அது கொலையானாலும் தற்கொலையானாலும் நம்முடைய பார்வையில் அது ஜாதியம் செய்த கொலைதான். இப்படிப்பட்ட ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர்களுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருந்தபோதும் அதை உச்ச, உயர்நீதி மன்றங்கள் வலியுறுத்தியிருந்தும், பாதுகாப்பு கொடுக்கப் படவில்லை. ஏற்கனவே தற்கொலை செய்துகொண்ட நாகராசன் வழக்கில் எந்த காரணமும் இல்லாமல் இளவரசன் குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்தார். எனவே தான் அவர் காவல் துறை பயிற்சி முடித்திருந்தும் காவல் துறை பணிக்கு செல்ல முடியவில்லை. இளவரசன் வழக்கில் யார் யாரை வழக்கில் பதியப் போகிறார்கள் என்பதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. இதில் காவல்துறையும் அரசும் நியாயமாக நடந்துக்கொள்ளும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த வேளையில் நாம் மீண்டும் மீண்டும் வைக்கும் கோரிக்கை இந்த வழக்கை சி.பி.ஐ க்கு மாற்ற வேண்டும் இவருடைய சாவுக்கு காரணமான ஜாதி வெறியர்களைக் கைது செய்யவேண்டும். இந்த வழக்கில் அவர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்கு பதியவேண்டும். எஞ்சியிருக்கிற திவ்யாவையாவது சாகாமல் தடுத்திடுங்கள். இப்படிப்பட்ட ஜாதி அரசியல் செய்யும் அரசியல்வாதிகளை சமூகம் புரிந்து கொள்ளவேண்டும்; சுயநலத்திற்காக சமூகத்தின் அமைதியை குலைக்கும் அவர்களை நாம் அரசியல் வெளியில் இருந்தே புறந்தள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்” என்று கழகத் தலைவர் தனது கண்டன உரையில் கேட்டுக்கொண்டார்.

கழகப் பொருளாளர் ஈரோடு ப.இரத்தினசாமி, உட்பட 68 தோழர்கள் கைது செய்யப்பட்டு பல்லடம் மணி மண்டபத்தில் அடைக்கப்பட்டனர். மாலை 6-30 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## வினாக்கள்... விடைகள்...

**வினா:** பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் மாயாவதி, ‘பிராமணர்கள்’ மாநாடு நடத்தினார்!

– **செய்தி**

**விடை:** மகிழ்ச்சி; தலித் மக்களுக்காக ‘பிராமணர்கள்’ எப்போது மாநாடு நடத்தப் போகிறார்கள்?

**வினா:** சென்னை செங்குன்றத்தில் இலவசமாக வழங்கப்பட வேண்டிய ஆடுகள் நீண்ட தூரம் பயணித்ததால் இறந்துவிட்டன.

– **செய்தி**

**விடை:** ஹெலிகாப்டரில் அழைத்து வந்திருக்கக் கூடாதா?

**வினா:** இளவரசன் உடல் ‘போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டு அது வீடியோ படமாக்கப் பட்டது. – **செய்தி**

**விடை:** அதில், ஜாதி அடையாளம் இருந்ததா, டாக்டர்?

**வினா:** ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தப்படி தமிழர்களுக்கு வழங்கப் பட்ட உரிமைகளை பறிக்க இலங்கை அரசு முடிவு. – **செய்தி**

**விடை:** தமிழர்களின் உரிமைகளை மட்டுமா? ஒப்பந்தம் போட்ட இந்தியாவின் மானத்தையும் சேர்த்துத்தான்!

**வினா:** தேர்தல் அறிக்கையில் இலவசங்களை வழங்குவதாக உறுதியளிப்பது, நேர்மையான, சுதந்திரமான தேர்தல்கள் நடப்பதை கேள்விக்குரியாக்கிவிடும்.

– **உச்சநீதிமன்றம்**

**விடை:** அப்படியானால், தேர்தல் அறிக்கையில் அறிவிக்காமலே, தொழிலதிபர்களுக்கு கோடி கோடியாக வரி தள்ளுபடி செய்வது....?

**வினா:** நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் 5 சதவீத பங்குகளை விற்பது என்பது மத்திய அரசின் முடிவு அல்ல. அது ‘மத்திய பங்கு வாரியம்’ என்ற ‘செபி’ அமைபபு எடுத்த முடிவு. அதைத்தான் செயல்படுத்துகிறோம்!

– **அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்**

**விடை :** அப்படியா சார்? ‘செபி’ எங்கே சார் இருக்குது? அமெரிக்காவிலா?

## மாமல்லபுரத்தில் கழகத்தின் இரு நாள் பயிற்சி முகாம்

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கூட்டம், ஜூலை 7 அன்று மாலை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் கழகத் தலைமை நிலையத்தில் நடந்தது. மாவட்ட செயலாளர் இரா. உமாபதி வரவேற்புரையாற்றினார். மண்டல செயலாளர் அன்பு தனசேகரன், தலைமை நிலைய செயலாளர் தபசி. குமரன், விழுப்புரம் அய்யனார், உடுமலை தமிழ்ச் செல்வன் மற்றும் கழகப் பொறுப்பாளர்கள் உரையாற்றினர். ஜூலை 20, 21 தேதிகளில் மாமல்லபுரத்தில் புதிய தோழர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

கழகப் பொறுப்பாளர்கள் விவரம்: சென்னை மாவட்டத் தலைவர்-பா.ஜான், செயலாளர்-இரா. உமாபதி, அமைப்பாளர்-க. சுகுமார், துணைத் தலைவர்-ஏசுகுமார், துணைச் செயலாளர்-வேலு, பொருளாளர்-வேழவேந்தன், இளைஞரணி தலைவர்-தட்சணாமூர்த்தி, இளைஞரணி செயலாளர்-பா. செல்வக்குமார், இளைஞரணி அமைப்பாளர்-ஆ. தமிழ்ச்செல்வன். மாணவணி அமைப்பாளர்-பிரகாஷ், செய்தி தொடர்பாளர்-சுனில்குமார். திருவல்லிக்கேணி பகுதிப் பொறுப்பாளர்கள்: தலைவர்-சு. பிரகாசு, செயலாளர் இர. அருண்குமார், அமைப்பாளர்-செந்தில், பொருளாளர்-சு.ஆனந்தன். மயிலாப்பூர் பகுதிப் பொறுப்பாளர்கள்; தலைவர்-இராவணன், செயலாளர்-இரா.மாரிமுத்து, அமைப்பாளர்-ம.மனோகரன், பொருளாளர்-ஆ.சிவா.

தலையங்கம்

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் சமூக நீதிக் குரல்!

உயர்நீதித் துறையில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மைனாரிட்டி சமூகத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற இடஒதுக்கீட்டுக் கருத்தை, தாம் ஆதரிப்பதாக, உச்சநீதிமன்றத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்கவிருக்கும் நீதிபதி பி.சதாசிவம், துணிவுடன் தெரிவித்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.

நீதிபதி சுட்டிக்காட்டியுள்ள கருத்து, ஏற்கனவே அரசமைப்பு சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கருத்தேயாகும். அரசியலமைப்பு சட்டம் 312-வது பிரிவில், 42வது சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டு நாடாளுமன்றத்தில் ஏற்கப்பட்டது. அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். பதவிகளுக்கு அகில இந்திய சர்வீசுகள் வழியாக அதிகாரிகள் தேர்வு செய்வது போல், அனைத்து இந்திய நீதிப் பணியும் உருவாக்கப்பட வேண்டும் என்று இந்தப் பிரிவு வலியுறுத்தினாலும், அது நடைமுறைப்படுத்தப்படாத நிலையே தொடருகிறது.

உச்சநீதிமன்றம் எப்போதுமே பார்ப்பனர், உயர்சாதி நீதிபதிகளின் ஆதிக்கத்திலேயே இருந்து வருகிறது. அரசியலமைப்பு வழங்கியுள்ள ஷெட்யூல்டு மக்களுக்கான பிரதிநிதித்துவம்கூட உயர்நீதிமன்ற உச்சநீதி மன்றங்களில் பின்பற்றப்படுவதில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவர் நீதிபதியாக நுழைவதற்கு 112 ஆண்டுகாலம் தேவைப்பட்டது. கலைஞர் கருணாநிதி ஆட்சியில் முதன்முறையாக வரதராசன் என்ற தாழ்த்தப்பட்டவர் நீதிபதியானவுடன் பெரியார், உளம் மகிழ்ந்து பாராட்டினார். உச்சநீதிமன்றத்தில் அத்திபூத்ததுபோல், தாழ்த்தப்பட்டவர் ஒருவர் அல்லது இருவர் மட்டுமே இருந்திருக்கிறார்கள். இப்போது ஒரு தாழ்த்தப்பட்டவர்கூட நீதிபதியாக இல்லை. உச்சநீதிமன்றத்தில் அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, 56 ஆண்டுகளுக்குப் பிறகு நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் என்ற ஒரே ஒரு பிற்படுத்தப்பட்டவர்தான் நீதிபதியாக முடிந்தது.

உச்சநீதிமன்றம், சமூகநீதி தொடர்பான வழக்குகள் வரும்போதெல்லாம் அதை பறிப்பதில்தான் குறியாக இருந்து வந்திருக்கிறது.

1950 ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த சோக வரலாறு, தொடர் கதையாகவே நீடிக்கிறது. அப்போதுதான் கல்வித் துறையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு உரிமைகளை பறித்தார்கள். தமிழகத்தில் பெரியார் தலைமையில் மூண்டெழுந்த கிளர்ச்சி, மத்திய அரசை பணிய வைத்து, முதன்முதலாக அரசியல் சட்டத்தை திருத்தச் செய்தது.

தொடர்ந்து இடஒதுக்கீடு உரிமைகள் பறிக்கப்பட்டே வந்துள்ளன. அதிகாரம் நிறைந்த ஒரே பதவிக்கு இடஒதுக்கீடு முறை கூடாது என்று தீர்ப்பளித்தது. மண்டல் பரிந்துரைக்கு எதிரான ‘இந்திரா சகானி’ வழக்கில், இடஒதுக்கீட்டின் அளவு 50 சதவீதத்துக்கு மேல் போகக் கூடாது என்று உச்ச வரம்பு விதித்ததோடு, தாழ்த்தப்பட்டோருக்கு பதவி உயர்வில் வழங்கப்பட்டு வந்த இடஒதுக்கீட்டையும் பறித்தது. மற்றொரு வழக்கில் (டாக்டர் நாயன் ஷர்மார்க்ஸ்) மருத்துவ மேல் பட்டப் படிப்பில் இடஒதுக்கீடு பறிக்கப்பட்டது. ‘இனாம்தார்’ வழக்கில் அரசு உதவி பெறும் தனியார், பொறியியல் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டைப் பறித்தார்கள். 2006 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டிலும் ‘பொருளாதார வரம்பை’ உச்சநீதிமன்றம் திணித்தது. உச்சநீதிமன்றத்தில் இந்த சமூகநீதி உரிமை பறிப்புகளுக்காக அதிலிருந்து பாதுகாக்க 6 முறை சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டன.

குடியரசுத் தலைவராக கே.ஆர். நாராயணன் இருந்தபோது அவரது ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள் பட்டியலை தலைமை நீதிபதிக்கே திருப்பி அனுப்பினார். தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் மைனாரிட்டிகள் பிரதிநிதித்துவம் இல்லாதது ஏன் என்று விளக்கம் கேட்டார். அப்போது பார்ப்பன ஏடுகள், குடியரசுத் தலைவரின் இந்தச் செயல்பாட்டைக் கடுமையாக குறை கூறி எழுதின.

தமிழ்நாட்டுக் கோயில்களில் கர்ப்பக்கிரகத்துக்குள் பார்ப்பனர் மட்டுமே நுழைய முடியும் என்ற நிலையை மாற்றி, தி.மு.க. ஆட்சி பிறப்பித்த உத்தரவை உச்சநீதிமன்றம் தடை போட்டு நிறுத்தி வைத்திருக்கிறது. மதுரை மீனாட்சிக் கோயில் பார்ப்பன அர்ச்சகர்கள், தாங்கள் ‘கடவுளால் அனுப்பி வைக்கப்பட்டவர்கள்’ என்று போட்ட மனுவை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டு தடை விதித்துள்ளது என்பதுதான் இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம்.

உச்சநீதிமன்றம், பார்ப்பன உயர்சாதியின் மன்றமாக இருப்பதால்தான் இப்படிப்பட்ட அநீதிகள் தொடர்கின்றன. இப்போது முதன்முதலாக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த தமிழர், உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பொறுப்பு ஏற்கவுள்ள நிலையில், துணிவாக சமூகநீதிக்குக் குரல் கொடுத்துள்ளார். அவரது குறுகிய கால பதவிக் காலத்தில் இதை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்குமா என்ற கேள்விகள் ஒரு பக்கம் இருந்தாலும் துணிவோடு சமூகநீதிக் குரலை ஒலித்ததற்காகப் பாராட்ட வேண்டும்.

‘கவுரவக் கொலைகள்’ செய்யும் சாதிவெறியர்களையும் அவர்களுக்கு துணைப் போகும் கூட்டத்தையும் கண்டிக்க, தனிச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று நீதிபதி வலியுறுத்தும் கருத்துக்கு செயல்வடிவம் தர முயற்சிப்பாரேயானால், ஒடுக்கப்பட்ட சமூகம், நீதிபதி சதாசிவம் அவர்களை உச்சிமோந்து பாராட்டும் என்பதில் அய்யமில்லை.

# தடைகளைத் தகர்த்து குடியாத்தத்தில் நடந்த இன உணர்வு மாநாடு

மருத்துவர் நா.எழிலன் தலைமையில் இயங்கி வருகின்ற இளைஞர் இயக்கம் சார்பாக, வேலூர் மண்டல சாதியொழிப்பு, இன உணர்வு மாநாடு அறிவிக்கப்பட்டிருந்தது. மூட நம்பிக்கை ஒழிப்பு, பெரியாரியல், மந்திரமல்ல தந்திரமே, சோதிட மோசடி போன்ற தலைப்புகளில் பயிற்சி வகுப்பாகவும், மாலையில் பொது மாநாடாகவும் நடைபெற இருந்த இந்த மண்டல மாநாட்டிற்கு காவல் துறையால் அனுமதி மறுக்கப்பட்டது. மக்களிடம் பகுத்தறிவு சிந்தனைகளை கொண்டு சேர்க்கவேண்டும், திட்டமிட்ட தேதியில் நிகழ்ச்சி நடத்தவேண்டும் என்று விரும்பிய தோழர்கள் நீதிமன்றம் சென்றனர். நீதிமன்றத்திலும் அனுமதி பெறமுடியாத தோழர்கள் மாநாட்டை இல்ல நிகழ்வாக நடத்த முடிவு செய்தனர். வேலூர் மாவட்டம் குடியாத்தம் இராமலை என்ற பகுதியில் 29-06-2013 சனிக்கிழமை அன்று காலை முதல் மாலை வரை, ஒரு புதிய இல்லத்தில் பயிற்சி வகுப்புகளை நடத்தினர். இல்லத் திறப்பு மற்றும் பெயர் சூட்டு விழா என்ற பெயரில் மாலை நிகழ்வுக்காக ஒரு விவசாய நிலத்தை மாநாட்டு திடலாக தயார் செய்தனர். வயலின் ஒரே ஒரு பக்கம் மட்டும் சாலை இருந்தது; எனவே அந்த சாலையின் வழியாக செல்பவர்கள் இந்த நிகழ்ச்சியை பார்க்க முடியுமானால் இது இல்ல நிகழ்வு அல்ல, பொது நிகழ்வு. எனவே இந்த நிகழ்ச்சியை இரத்து செய்தாக வேண்டும் என்று காவல்துறை வற்புறுத்தியது. நாங்கள் பொது இடத்தில் நிகழ்ச்சி நடத்தவில்லை, எங்களின் சொந்த இடத்தில் நடத்துகிறோம் இதில் நீங்கள் தலையிடக் கூடாது என்று காவல் துறைக்கு பதிலளித்த தோழர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டு பணிகளில் தீவிரம் காட்டினர். அதிகமான காவலர்களை கொண்டு வந்து இறக்கிய காவல் துறை, பொது மக்களிடையே அச்சத்தை உண்டாக்கியது. மிகுந்த பரபரப்புடனும் எதிர்பார்ப்புடனும் மாலை 6-00 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. சாலையின் சிறிது தூரம் துணி கட்டி மறைக்கப்பட்டது; நிகழ்ச்சிக்கு வருபவர்களை வீடியோ பதிவு செய்தனர் காவல் துறையினர். குறைவான கூட்டத்தோடு தொடங்கிய நிகழ்ச்சி சற்று நேரத்தில், தோழர்களின் விடாமுயற்சியின் பயனாய் மக்கள் திரண்டனர்.

ஆதித்தமிழர் கலைக் குழுவின், பறையாட்டம், ஒயிலாட்டம், சாட்டையாட்டம், மான்கொம்பு ஆட்டம், திருச்சி ஆனந்த் குழுவினரின் ஜாதி ஒழிப்பு தொடர்பான வீதி நாடகம், சித்திரைசேனனின் பாடல்கள் என பல கலை நிகழ்ச்சிகளின் இடையிடையே சொற்பொழிவு நடைபெற்றது. முதலில் பேசிய மருத்துவர் நா.எழிலன் மக்களின் அறியாமையை போக்கி விழிப்புணர்வை ஏற்படுத்துவது நமது அடிப்படைக் கடமை என இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 51 ஏ (எச்) வலியுறுத்துகிறது. அப்படிப்பட்ட கடமையைச் செய்ய வந்திருக்கும் நமக்கு தடை போடுகின்ற காவல் துறைக்கும், மாவட்ட ஆட்சியருக்கும், அரசு அதிகாரிகளுக்கும் நாம் முதலில் வகுப்பெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இல்லத் திறப்பு என்பது வீட்டின் கதவை திறப்பது மட்டுமல்ல, மூடநம்பிக்கை, அறியாமை என்னும் பெயரில் மக்களின் மூளைக்கு போடப்பட்டுள்ள பூட்டைத் திறப்பதற்கு தான் இந்த விழா என்று கூறி நிகழ்ச்சியின் நோக்கத்தை விளக்கிப் பேசினார். கடவுள் மத நம்பிக்கையில் இருந்து விடுபட வேண்டிய அவசியத்தை பெரம்பலூர் பெரியார்நேசன் விளக்கிப் பேசினார்.

நரிக்குறவர்கள் நலச் சங்கத்தின் தலைவர் பொறியாளர் பொன்னையன் பேசும் போது, ‘எங்கள் இனத்தில் நான் தான் முதல் பொறியாளர், அதன் பிறகு பல ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு தான் முதன் முதலாக இந்த ஊரை சார்ந்த ஒருவருக்கு மருத்துவ படிப்பில் சேர இடம் கிடைத்திருக்கின்றது; அதுவும் மாநிலத்தின் மூன்றாம் இடம் பெற்ற மதிப்பெண் தகுதி அடிப்படையில் தான் கிடைத்துள்ளது. ஆனாலும் வேலைவாய்ப்புகள் கிடைக்கவில்லை. பழங்குடி நாடோடி மக்களான எங்களுக்கு உரிய இட ஒதுக்கீடு வழங்கப்படாமல், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளதால் நரிக்குறவர்கள் இனம் வேலை வாய்ப்பு பெற முடிவதில்லை, நான் பொறியியல் படிப்பை முடித்திருந்தாலும் ஊசி, மணி, பாசிதான் விற்று வாழவேண்டியுள்ளது. சில நல்ல அதிகாரிகளின் உதவியோடு சுயஉதவிக் குழுக்களாக இணைந்து ஊசி மணி பாசிதான் நாங்களே தயாரிக்க முடிந்திருக்கிறது. அவ்வளவுதான் எங்கள் வளர்ச்சி என தங்கள் நிலைமைகளை விளக்கியும், பழங்குடி மக்களாய் தங்களை அறிவிக்க அனைவரும் ஆதரவு காட்டுங்கள்’ என்றும் வேண்டுகோள் உரை ஆற்றினார்.

இறுதியாக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை ஆற்றினார். நமது இல்ல நிகழ்வுகளில் பார்ப்பனர்களை புறக்கணிக்க வேண்டிய அவசியம் குறித்தும், ஆரியப் பார்ப்பனப் பண்பாட்டிலிருந்து விலகி சுயமரியாதைப் பண்பாட்டைப் பின்பற்றுங்கள் என்றும் உரையாற்றினார். மொத்தத்தில் இல்லத் திறப்பு மற்றும் பெயர் சூட்டு விழா என்ற பெயருடன் சிறப்பான ஒரு மாநாடு நடைபெற்றது.

# டைகர் பாலன் தந்தை முடிவெய்தினார்

திராவிடர் விடுதலைக் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் அவர்களின் தந்தை சித்தன் அவர்கள், 25-06-2013 அன்று மாலை கொளத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் முடிவெய்தினார்.

26-06-2013 புதன்கிழமை அன்று காலை 9-00 மணியளவில், எந்த விதமான மதச் சடங்குகளும் இல்லாமல் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொருளாளர் ஈரோடு ப.இரத்தினசாமி உட்பட மாவட்ட ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் தோழர்கள் கலந்து கொண்டனர். பிற்பகல் 12-00 மணியளவில் அவருடைய இல்லத்தில் மறைந்த சித்தன் அவர்களின் படம் திறந்து வைக்கப்பட்டது; அத்துடன் அனைத்து துக்க நிகழ்வுகளும் நிறைவடைவதாக டைகர் பாலன் அறிவித்தார்.


“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,சென்னை-41.
✆9941613535

# மனிதத்தைக் கொல்லும் ஜாதி வெறியே! திரும்பிப் பார்!

இளவரசனின் மரணம், உணர்வுகளை உலுக்கிவிட்டுள்ளது. திவ்யா-இளவரசன் என்ற அன்பினால் இணைந்த இளம் உள்ளங்களை ஜாதி வெறி பிரித்தது. திவ்யாவின் தந்தையின் உயிரை இந்த ஜாதி வெறி காவு கொண்டது. இப்போது இளவசரன் என்ற 20 வயதே நிறைந்த இளைஞனை ஜாதிவெறி கொலை செய்து விட்டது. இதுதான் ஜாதியப் பெருமையா? இதுதான் இவர்கள் பேசும் க்ஷத்திரிய தர்மமா? இதுதான் ‘அக்னி’ வம்ச வழியில் வந்து பிறந்ததாக பீற்றிக் கொள்ளும் பெருமையின் அடையாளமா?

‘தலித்’ இளைஞர்கள் ஜீன்ஸ், பேன்ட், கூலிங் கிளாஸ் அணிந்து கொண்டு, வன்னியப் பெண்களை மயக்கி திருமணம் செய்து ஏமாற்றி பணம் பறிக்கிறார்கள். இது நாடகக் காதல் என்று நீட்டி முழங்கிய ஜாதியத் தலைவர்களே! இப்போது யாரை யார் ஏமாற்றியிருக்கிறார்கள்! நாடகத்துக்கான காட்சிகள் எந்த திசையிலிருந்து அரங்கேற்றப்பட்டன? பதில் சொல்ல முடியுமா?

திவ்யாவின் தந்தை தற்கொலை செய்து கொண்டபோது, இந்த சாவுக்குக் காரணமாக இளவரசன் மீதும், காவல் துறை வழக்குப் பதிவு செய்து, காவல் துறையில் இந்த இளைஞருக்கு கிடைக்க வேண்டிய பதவி நியமனத்தையும் தடுத்தார்களே! இப்போது இளவரசன் மரணத்துக்கு காரணமான ஜாதியத் தலைவர்கள், வழக்கறிஞர்கள் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்யுமா?

திவ்யா என்ற பெண், ஜாதி வெறியர்களின் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் சூழ்நிலைக் கைதி யாக்கப்பட்டார். காரணம், அவர் ஒரு பெண்ணாகப் பிறந்ததும் தான்! எந்த ஒரு சூழ்நிலையிலும் அந்தப் பெண், தான் கைப்பிடித்த காதலனையோ, அவரது குடும்பத்தினரையோ ஒரு வார்த்தைக்கூட குறை காணவில்லை!

இப்போதும், மகனை இழந்த துயர நிலை யிலும்கூட, கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே இளவரசனின் தந்தை, “திவ்யா எனது மகளைப் போன்றவர், அவர் என் வீட்டில் கடைசி வரை வாழலாம்; மறுமணம் செய்ய விரும்பினால், எனது செலவிலேயே செய்து வைக்கிறேன்” என்று மனிதநேயத்தோடு பாசத்தைக் கொட்டியிருக்கிறாரே. “ஓ, ஜாதி வெறிக் கூட்டமே! இந்த மனித நேயத்தின் முன் நீ தலைகுனிந்து, கூனிக் குறுகி அவமானப்பட்டு,



மண்ணில் தலை புதைந்து கிடப்பது, உனக்குத் தெரியுமா? அது உனக்குத் தெரியாது; உனது ஜாதி வெறி மனிதநேயத்தை உணர வைக்காது.

தமிழ்நாட்டில் ஜாதியம், கிராமப்புறங்களில் வேர்ப்பிடித்து நிற்பது உண்மைதான். அதைப் பட்டியலிட்டு அம்பலப்படுத்தி வருகிறோம் என்பதும் நிதர்சனம் தான். ஆனாலும், ஜாதியத்தை வெறியாக்கி, ஊதிப் பெருக்கி, அணியாக்கி, படைதிரட்டி, போர் நடத்தி, அரசியலுக்கு ஓட்டுகளாக்கிக் கொள்ளலாம் என்ற இறுமாப்புக்கு, தமிழகத்தில் இடமில்லை என்பதை, ஓ, ஜாதியத் தலைவர்களே! நீங்கள் இப்போதாவது பாடம் கற்றுக் கொள்வீர்களா?

உங்களுக்கு ஓர் உண்மை புரிந்ததா? “பாட்டாளிகள்” படை வரிசையை நீங்கள் கட்டியமைக்கப் புறப்பட்ட ஓராண்டு காலத்துக் குள்ளேயே அது கலகலத்து பின்னங்கால் பிடறியில் தெறிக்க சிதறி ஓடிக் கொண்டிருப் பதைப் பார்த்தீர்களா? தனித்துவிடப்பட்டதை உணருகிறீர்களா? தோள் தட்டி, தொடை தட்டி, பின்பாட்டுப் பாட வந்த ஜாதியக் குழுக்களின் தலைவர்களாக அடையாளம் காட்டிக் கொண்ட வர்கள், இப்போது எங்கே போனார்கள்? எங்கே பதுங்கினார்கள்? அந்தக் கூட்டணி இப்போது தோள் கொடுக்க வந்ததா? மாமல்லபுரம் கடற்கரையில், “இதோ நாங்களும் இருக்கிறோம்”; பாட்டாளி மக்கள் ஆட்சி யமைக்கும் காலத்துக்காக காத்திருக்கிறோம் என்று கர்ஜித்த ‘பிராமண சங்கம்’ இப்போது எங்கே போனது?

சமூக வலைதளங்களில் பதிவாகும் ஆயிரமாயிரம் கருத்துகளில் உங்களுக்கு ஆதரவாக ஏதாவது ஒரு குரல் கேட்கிறதா? ஜாதிவெறியை எதிர்த்து நின்ற திராவிடர் விடுதலைக் கழகத்தை லெட்டர் பேட் அமைப்பு என்று ஏளனம் செய்தீர்கள்; அந்த இயக்கம் தான், தமிழகத்தில் ஜாதி வெறி தலைதூக்குவதை துணிவோடு எதிர்த்தது; தொடர்ந்து போராடியது; ஜாதித் தலைவர்கள் கூடு மிடங்களில் எல்லாம் எதிர் போராட்டங்களை நடத்தியது; தோழர்கள் கைதானார்கள்.

உணர்வுள்ள தோழர்களை, அமைப்புகளை இணைத்து எதிர்வினையாற்றினார்கள்! ஆம்; நாங்கள் மக்களிடம் சென்றோம்; கருத்துகளை விதைத்தோம். நாமக்கல்லில் உருட்டுக்கட்டை களையும் சென்னையில் கற்களையும் தூக்கி வீசினார்கள். ஜாதி வெறியர்கள் வீசிய கல்லடிகளில் எங்கள் தோழர்கள், சென்னை தெருக்களில் சிந்திய ரத்தம் வீண் போகவில்லை.

ஊடகங்கள் இருட்டடிப்பு செய்தன. கவலைப்பட வில்லை; போராட்டங்கள்; மாவட்டந்தோறும் ஜாதி எதிர்ப்பு மாநாடுகள், மாநாட்டு மேடைகளில் ஜாதி மறுப்புத் திருமணங்கள், ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’ என்ற முழக்கத்தோடு பரப்புரைப் பயணங்கள் என்று திராவிடர் விடுதலைக் கழகம் தனித்த ஒரு இயக்கமாக தமிழகத்தின் வீதிகளில் சுழன்று சுழன்று பணியாற்றியது.

விளைவு - ஜாதி வெறியின் முகத்திரை - மக்கள் மன்றத்தில் கிழிந்துப் போய் நிற்கிறது.

மனிதத்தை சிதைப்பது - ஜாதியம்!

மனு தர்மத்தை விதைப்பது - ஜாதியம்!

மனித உயிர்களைக் காவு கேட்பது - ஜாதியம்!

இணைந்த காதல் உள்ளங்களை பிரித்து அவர்களின் உணர்வுகளை அழித்து, அதில் அற்ப மகிழ்ச்சிக் கூத்தாடுவது - ஜாதியம்!

இதை மீண்டும் மீண்டும் மக்கள் உள்ளங்களில் நாம் எழுதத்தான் போகிறோம்!

‘அப்பாடா நாம் தப்பித்துக் கொண்டோம்; அவாளுக்குள் மோதிக்கிறானுக’ என்று பார்ப்பனியம் பதுங்கி நின்று கும்மாளம் போடு வதும் நமக்குத் தெரியும்!’ அவாள்களின் நச்சுக் கருத்தியலே இந்த ஜாதியத்தின் வேர் என்பதையும் இடைவிடாமல் முழங்கப் போகிறோம்.

தோழர்களே! நாம் முன்னெடுப்போம் கொள்கைத் தளங்களில் மேலும் முன்னேறிச் செல்வோம்; மக்களின் உள்ளங்களில் கருத்துக்களை விதைப்போம், வெற்றி நமமே! நம்பிக்கையுடன் வாருங்கள்!

**– இரா**

## பெரியார் தொழிலாளர் கழகத்தின் கட்டுமானப் பிரிவு துவக்கம்

பெரியார் தொழிலாளர் கழகத்தின் ஈரோடு மாவட்ட கலந்தாய்வுக் கூட்டம் 30.6.2013 ஞாயிற்றுக் கிழமை 5 மணிக்கு ஈரோடு சூரம்பட்டி வலசு பெரியார் ஜே.சி.பி. பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பெரியார் தொழிலாளர் கழகத்தின் மாநிலத் தலைவர் இராம. இளங்கோவன் தலைமை தாங்கினார். திராவிடர் விடுதலைக் கழக மாநிலப் பொருளாளர் ப. இரத்தின சாமி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெரியார் தொழிலாளர் கழகத்தின் துணை அமைப்பாக கட்டுமானத் தொழிலாளர் பிரிவு தொடங்குவது;

அமைப்பிற்கு வலு சேர்க்க ஏதுவாக அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களைச் சேர்ப்பது;

பெரியார் கட்டுமானத் தொழிலாளர் கழகத்தின் பெயர்ப் பலகை திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழாவை விரைவில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பெரியார் தொழிலாளர் கழகத்தின் கட்டுமானத் தொழிலாளர் கழகத்தின் கட்டுமானத் தொழிலாளர் பிரிவுக்கு நிர்வாகிகளாக கீழ்க் காண்போர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவராக திருமுருகனும், செயலாளராக கேசவனும், பொருளாளராக தியாகராஜனும், அமைப்பாளர்களாக செல்வம், அண்ணாமலை செல்வம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பெரியார் கட்டுமான தொழி லாளர் கழகத்தின் உறுப்பினர்களாக கீழ் வருவோர் தங்களை இணைத்துக் கொண்டனர்.

உறுப்பினர்கள் விவரம் வருமாறு: சதீஷ்குமார், ராஜமாணிக்கம், இளைய ராஜா, சாமிவேல், சீனிவாசன், பாத்திமா, காஜாமைதீன், சதீஷ், சக்திவேல்.

இறுதியில் திருமுருகன் நன்றி கூறினார்.

## மத்திய அரசு குன்னூர் கூட்டத்தில் எச்சரிக்கை

ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த சிங்களப் பேரினவாத அரசிற்கு, பல்வேறு உதவிகளை செய்த இந்திய அரசு, சிங்களவர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளித்து வருகின்றது. தமிழக மக்கள், தமிழக அரசு, தமிழ் உணர்வாளர்கள் என அனைவரும் எதிர்ப்பு, கண்டனம் தெரிவித்தும் சிறிதும் பொருட்படுத்தாத மத்திய அரசு தற்போதும் தமிழகத்தில் பயிற்சி அளித்து வரும் தகவல் வெளியானது. நீலகிரி மாவட்டம், குன்னூர் வெலிங்டன் இராணுவ பயிற்சிக் கல்லூரியில், சிங்கள இராணுவத்தின் விங் கமாண்டர் தசநாயகே, மேஜர் ஹரிச்சந்திரா ஆகிய இருவருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து, வெலிங்டன் இராணுவக் கல்லூரி முற்றுகை போராட்டம் அறிவிக்கப்பட்டது.

போராட்டத்தின் முதல் நாளான 24-06-2013 அன்று இரவே சிங்கள இராணுவ அதிகாரிகள் குன்னூரிலிருந்து மும்பைக்கு அனுப்பப்பட்டு விட்டனர். சிங்களவர்களுக்கு இந்தியாவில் எந்த பகுதியிலும் இனி எப்போதும் பயிற்சி அளிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி, 25-06-2013 செவ்வாய்க்கிழமை அன்று காலை 11-00 மணிக்கு குன்னூர் பேருந்து நிலையம் அருகே பொதுக் கூட்டம் நடைபெற்றது. “நாம் பயிற்சி கொடுக்காவிட்டால் சீனா பயிற்சி கொடுத்துவிடும் என்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சிலர் கூறுகிறார்கள்; இராஜீவ் காந்தியை தமிழகத்தில் கொல்லாமல் விட்டிருந்தால் பஞ்சாபில் கொன்றிருப்பார்கள் என்று காங்கிரஸ்காரர்களால் சமாதானம் சொல்லிக் கொள்ள முடியுமா?” என்று திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமது உரையில் சுட்டிக் காட்டினார்.

நாங்கள் தமிழகத்தில் பயிற்சி கொடுக்கவில்லை இந்தியாவின் வேறு பகுதியில் பயிற்சி கொடுப்போம் என்ற முடிவை இந்தியா எடுக்குமானால், இந்தியா எங்கள் அன்னிய நாடு என்று சொல்லுகின்ற நிலையை தமிழக மக்கள் எடுக்கக் கூடும் என்று ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தமது உரையில் எச்சரித்தார். வணிகர் சங்கத் தலைவர் வெள்ளையன், தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன்,தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் அமைப்புச் செயலாளர் முதலானோர் உரையாற்றினார்கள். ம.தி.மு.க, தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட பொறுப்பாளர்கள், மேட்டூர், ஈரோடு, திருப்பூர், கோவை ஆகிய பகுதிகளைச் சார்ந்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

DATE OF PUBLICATION 10.07.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# வரலாற்று மீட்டுருவாக்கத்தில் எச்சரிக்கைத் தேவை: கொளத்தூர் மணி பேச்சு

*ஆதித் தமிழர் பேரவை சார்பாக, மதுரை வீரன் வரலாறு மீட்பு அரசியல் எழுச்சி மாநாடு, 30-06-2013 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணியளவில், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு செங்குந்தர் திருமண மண்டபத்தில் ஆதித் தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் அதியமான், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழக மக்கள் ஜனநாய கட்சி தலைவர் கே.எம்.செரீப், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்க கௌரவத் தலைவர் பேராசிரியர் அருணன், மூத்த வழக்கறிஞர் இரத்தினம் முதலானோர் உரையாற்றினர். மதுரை வீரன் வரலாற்று நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட பேராசிரியர் அருணன் பெற்றுக்கொண்டார். கழகத் தலைவர் ஆற்றிய உரையின் சுருக்கம் :*

வரலாற்றைச் சொல்வதற்குகூட சமூகத்தில் சகிப்புத் தன்மை இல்லாமல் நூலில் உள்ள சில சொற்களைச் சொல்லிக் (பொம்மியின் திருமணம் என்று சொல்வதற்காக) கூட தடை விதிக்கிறார்கள். முருகன் வள்ளியை திருமணம் செய்தான். எனவே அந்த ஜாதிக்காரன் முருகன் கதையையே சொல்லக் கூடாது என்று பேசுவார்களா? கோபிகா ஸ்திரிகள் அத்தனை பேருடனும் கிருஷ்ணன் உறவு வைத்திருந்தான் என்று கதை இருக்கின்றதே தங்களை இழிவுபடுத்துவதாக யாதவ மகாசபை தடை கேட்குமா? பெரிய ஜாதியில் பிறந்தால் தான் அறிவாளியாக இருக்க முடியும் என்று வள்ளுவரையே சொன்னான். ஆதி என்ற புலச்சிக்கும், பகவன் என்ற பார்ப்பானுக்கும் பிறந்தவன் என்று திருக்குறள் இரண்டாம் பதிப்பில் எழுதிவிட்டான். தமிழ்நாட்டில் தேவதாசி முறை ஒழிப்புக்குப் போராடிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி முதல் பெண் மருத்துவர்; முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர்; இவர் இசை வேளாள சமூகத்தில் பிறந்திருக்க முடியாது, சுப்ரமணிய அய்யருக்கு பிறந்தவர் என்று சொன்னான். இப்படி வரலாற்றில் நாம் பலவற்றை திருத்த வேண்டியிருக்கின்றது.

தற்போது இந்த நாடு யாருக்கு சொந்தம் என்பதில் பெரும் விவாதம் நடக்கின்றது. தமிழ்நாட்டில் தமிழன் மட்டும் தான் இருக்கவேண்டும், தெலுங்கு, கன்னடம், உருது பேசுபவர்கள் தமிழர்கள் அல்ல என்று சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் யார் என்பதை பற்றி நாம் பேச வேண்டியிருக் கின்றது. அதற்கும் பல வரலாறுகளை சொல்ல வேண்டியிருக்கின்றது. பேசுகிற மொழியில் இருந்து தான் தேசிய இனம் உருவாகிறது என்று பேசும் மடையர் களுக்கு, வரலாற்றில் இருந்து தான் தேசிய இனம் உருவாகிறது என்ற உண்மை தெரியவில்லை. ஒரு குறிப்பிட்ட மொழியை பேசுபவர்கள் மட்டும் எப்படி தேசிய இனமாக இருக்க முடியும்? இப்படிப்பட்ட தலைவர்களை பின்பற்று கின்ற ஏமாளிகளுக்கு நாம் வரலாற்றை சொல்லித் தரவேண்டியுள்ளது. மதுரை வீரன் வரலாற்றை மீட்டிருக்கின்றோம் என்ற மகிழ்ச்சி சரிதான். எங்களுக் குள்ளும் வீரர்கள், புரட்சியாளர்கள் இருந்திருக்கின்றார்கள், அவர்கள் சாதி மறுப்பில், கோவில் நுழைவில், தேவதாசி மீட்பில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று காட்டவேண்டிய தேவை இருக்கிறது; காட்டுகிறோம். ஆனால் அதிலேயே நின்று விடக் கூடாது என்ற எனது அச்சத்தையும் வெளிப்படுத்த விரும்புகிறேன். 1990 ஆம் ஆண்டு புரட்சியாளர் அம்பேத்கர் நூற்றாண்டு விழாவையொட்டி ஒரு புதிய எழுச்சி தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் வந்தது. அதிலிருந்து நாம் பல போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். அதிலிருந்து நம்மை திசை திருப்புவதற்காக உள்ளூர் தலைவர்களை முன் நிறுத்துகிறார்களோ என்ற அய்யம் கூட எனக்கு உண்டு. வரலாற்றை மீட்போம் ஆனாலும் நம்முடைய அடையாளமாக அம்பேத்கரை விட்டு விடாமல் தொடருவோம்.

வரலாற்றில் வாழ்ந்தவர்களைப் பற்றி பேசுவது நமக்கு பெருமிதம். பெரியாரிடம் வரலாற்று பெருமிதம் இல்லை என்று தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் சொல்லுவார்கள். நமக்கு பெருமிதமான வரலாறே இல்லை, அடிமை வரலாறு தான் எங்களுக்கு உண்டு என்று நான் சொல்லுவது உண்டு. நீங்கள் காட்டுகின்ற பேரரசர்களெல்லாம் எங்களை இழிவுபடுத்தியவனாக இருந்திருக்கின்றான். அழகிய தமிழ்ப் பெயரான அருள்மொழித்தேவன் என்பதை இராஜராஜன் என்று வடமொழியில் மாற்றி கொண்டவன் தான் நமக்கு பேரரசனாக காட்டப்படுகிறான். தாழ்த்தப்பட்டவர்களை தனியாக குடியமர்த்தி வைத்தவனை, தேவடியாள் தெரு என்று தனியாக வைத்தவனை, நிலத்தோடு சேர்த்து அடிமைகளை விற்கும் பழக்கத்தை வைத்திருந்தவனை பேரரசனாக காட்டினால் அது நமக்கு பெருமிதமான வரலாறா? இனி பெருமிதம் மிக்க வரலாறை படைக்க வந்திருப்பவர்கள் நாம். நமக்கு இருக்கின்ற இழிவுகளை துடைத்தெறிந்து விட்டு புதிய வரலாறு படைக்க வந்திருக்கிறோம் நாம். இது குறித்து பெரியார் பேசியதை நான் குறிப்பிட விரும்புகின்றேன் .

*(கழகத் தலைவர் படித்துக் காட்டிய பெரியார் நூலிலிருந்து அப்படியே கீழே)*

*"தமிழர் வாழ்க்கை நடப்புகளில் பழந்தமிழர் கொள்கை என்று பேசக்கூடாது என்றும், அதை கொண்டு வந்து மேற்கோள் காட்டக் கூடாது என்றும், எமது தோழர்களை கேட்டுக் கொள்கின்றேன். பழந்தமிழன் யார்? அவன் கொள்கை என்ன? அதற்கு ஆதாரம் என்ன? அதற்கு இன்று அவசியம் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல இன்று ஆளைக் காணோம். வீணாக அந்தப் பேரில் பிழைக்கவோ, பெருமைப்படவோ, மக்களைச் சுரண்டவோ, தங்கள் எண்ணத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளவோ பயன்படுத்தப்படுகிறது. பழந் தமிழன் யாராயிருந்தால் எனக்கென்ன? உங்களுக்குத்தான் என்ன காரிய மாகும்? அவன் கொள்கையோ, மதமோ, கடவுளோ, நடப்போ, சக்தியோ எதுவா யிருந்தால் தான் இங்கு இன்று நமக்கு என்ன இலாபம்? என்பது தான் என் கேள்வி.*

*பழந்தமிழர் நிலையைப் பற்றி பேசுபவர்கள் பகுத்தறிவுவாதிகளாக, பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கும் அறிவாளிகளானால், நடுநிலைக்காரர்கள். ஆனால் அவர்களை ஒன்று கேட்கின்றேன். அதாவது காட்டுமிராண்டி வாழ்க்கைக் கால மனிதனை விட கல்லாயுத கால வாழ்க்கை மனிதன் சிறந்தவன் அல்லவா என்பதும், அது போலவே 4000, 5000 வருஷத்திற்கு முன் இருந்த மனிதனை விட இன்று இருபதாவது நூற்றாண்டில் வாழும் மனிதன் சிறிதாவது மேலான அனுபவம் பெற சவுகரியமும் ஆராய்ந்து பார்க்கும் வசதியும் உடையவனா? அல்லவா? என்பதோடு, அந்தக் காலத்தில் வாழ்ந்த வாழ்வைவிட எண்ணிய எண்ணத்தைவிட வேறான வாழ்வும் வேறான எண்ணங்களும் கொள்ள வேண்டியவனாய் இருக்கின்றானா இல்லையா என்பதேயாகும்? இன்று வாழும் மனிதனுடைய எந்தக் காரியத்திற்கு பழந்தமிழனுடைய வாழ்க்கைக் குறிப்பும் நினைவுக் குறிப்பும் நமக்கு வேண்டி இருக்கிறது என்று உங்களை வணக்கமாகக் கேட்கிறேன்.*

*வீணாகப் பழந்தமிழர் கொள்கை என்பதும், பழந்தமிழர் வாழ்க்கை நிலை என்பதும் அந்நியன் ஏய்க்கவோ, அறியாமையில் மூழ்கவோதான் பயன்படக் கூடியதாக ஆகிவிட்டது. இனி நம்முடைய எந்த சீர்திருத்தத்திற்கும் அந்தப் பேச்சு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பகுத்தறிவுவாதியின் கடமையாக ஆகிவிட்டது. பழந்தமிழன் வந்து போதிக்கத் தகுந்த நிலையில் இன்று நமது மனித சமூகம் இல்லை. பழந்தமிழன் கொள்கை எதுவும் இன்று எந்த மனித சமூகத்திற்கும் அவசியமும் இல்லை. மனிதன் காலத்தோடு, மாறுதலோடு, செல்ல வேண்டியவனேயொழிய வேறில்லை. வேண்டுமானால் மடையர்களைத் தட்டி எழுப்ப ஆயுதமாக அதைக் கொள்ளலாம். ஆனால் சாது மக்களை ஏமாற்ற அதைப் பயன்படுத்த விடக்கூடாது"* என்று பெரியார் கூறுகிறார்.


நமக்கு பழந்தமிழ் அரசன் பெருமையை சொல்பவர்கள் நம்மை ஏமாற்றத் தான் பயன்படுத்துகிறார்கள். தமிழ் மொழி பேசுபவன் மட்டும் தமிழன் என்று சொல்லுகின்றவன் தான், இந்த நாட்டில் இந்துத்துவா என்று நம்மீது ஏவியிருக்கின்ற, நம்மை அடக்கி வைத்திருக்கின்ற அந்த கொடுமைகள் பற்றி அல்லது இந்திய பேராதிக்க ஏகாதிபத்திய அரசு இருந்து கொண்டு தமிழ் இனத்தின் உரிமைகளை சுரண்டுவதை சிந்திக்க விடாமல் பிற மொழி பேசுபவனை எதிரியாக காட்டி ஏமாறுகிறார்கள்; ஏமாற்றுகின்றார்கள். இந்த வரலாற்று தவறுகளையும் சீர்படுத்துகின்ற வேலையில் நாம் ஈடுபட வேண்டும்; அவர்களுக்கும் அறிவூட்டி அவர்களை திருத்துகின்ற வேலையில் நாம் ஈடுபட வேண்டும் என்று இந்த வேளையில் கேட்டுக்கொள்கின்றேன். நான் நமக்கான அடையாளமாக சொன்னேன் அம்பேட்கரை வைப்பது என்பது. அவர் நமக்கு காட்டிய வழியை மட்டுமல்ல போராட்ட வழிகளை, நம்மை மீட்பதற்கான வழியினை எடுத்துச்சொன்னதை நாம் மீண்டும் மீண்டும் நமது சிந்தனைக்கு கொண்டுவருவோம். நம் வரலாற்றில் வாழ்ந்த பெரும் வீரர்கள் இருக்கட்டும், அண்மைக் காலத்தில் நம் சமுதாயத்திற்காக உழைத்தவர்களான எல்.குருசாமி, ஜகநாதன் போன்ற தலைவர்கள் ஆற்றிய பணிகளை நினைவூட்டுவோம்; வழிகாட்டிகளாக அவர்களை வைத்துக்கொள்வோம். தந்தை பெரியார் புரட்சியாளர் அம்பேத்கர், இரண்டு மாமேதைகளும் நமக்கு காட்டிய வழி என்பது இந்துத்துவா, இந்து மதம், கடவுள் என்பதெல்லாம் நம்மை அடிமைப் படுத்தவும் அடிமை நிலையைத் தொடரச் செய்யவும் பயன்படுத்தப் படுபவை; அவற்றை தகர்த்தெறிவதில் நாம் தொடர்ந்து போராடுவோம்.

இந்த இயக்கத்தில் இருக்கும் பல தோழர்கள், இந்து மத அடையாளத்தை விடவில்லை; அதை பேணிக்காத்துக் கொண்டிருக்கின்றோம். உங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் யார் என்று அடையாளம் தெரிந்துகொள்வதற்காக உங்கள் கையிலாவது, கழுத்திலாவது கருப்பு கயிறு கட்டியாக வேண்டும் என்று ஒரு காலத்தில் பேஷ்வா மன்னர்கள் ஆணையிடுகிறார்கள்; அது இழிவின் சின்னம் அறுத்தெறியுங்கள் என்று இயக்கம் நடத்தியவர் அம்பேத்கர். அம்பேத்கரையும் பாராட்டிக் கொண்டு தலைவராக ஏற்றுக்கொண்டு இன்னும் சிலர் பொருள் தெரியாமல் தமது கைகளில் கறுப்பு கயிறு கட்டிக்கொண்டிருக் கிறார்கள்; ரக்ஷா பந்தன் என்ற பெயரில் திணித்தான். பின்னர் ப்ரண்ட்ஷிப் பாண்ட் என்ற பெயரில் திணிக்கிறார்கள்; எப்படியாவது நமது கையில் கயிறு கட்டவேண்டும் என்று நினைக்கின்றார்கள்.

இந்து மதம், இந்து மதச்சின்னங்கள், இந்து மதச்சிந்தனைகள் எல்லாவற்றை யும் விட்டொழிப்பதன் வழியாக நாம் விடுதலை பெற்ற மனிதர்களாக, சுய மரியாதை உள்ள மனிதர்களாக வாழ்வதற்கு உறுதியேற்று, மற்றவர்களுக்கு தெளிவுபடுத்துகின்ற பணிகளை செய்யுங்கள்; அந்தப் பணிக்கு என்றைக்கும் திராவிடர் விடுதலைக் கழகம் உங்களோடு இணைந்து நிற்கும். காரணம், ஒரு சமுதாயத்தில் மாற்றத்தை காண விரும்புகிறவன் அந்த சமுதாயம் எப்படிப்பட்ட மாற்றம் அடைய வேண்டும் என யார் சொல்வது சரியாக இருக்கும்? ஒரு நகரத்தில் வாழ்பவன் சொன்னால் அது அவனுடைய வசதிக்கு இருக்கும்; கிராமத்துக்காரனின் சிக்கல் தெரியாது. கிராமத்தில் இருக்கும் ஆதிக்க ஜாதிக்காரன் சொன்னால் அவனுக்கும் சில சிக்கல் தெரியாது. அங்கேயும் அடக்கப்பட்டு உரிமையற்று கிடக்கின்ற ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் யாரேனும் சொல்ல வேண்டும்; அதிலும் குடும்பத்தில் அடக்கப்பட்டு கிடக்கும் ஒரு பெண் சொல்வது தான் சரியானதாக இருக்கும். அவர்கள் விரும்பும் சமுதாயம் தான் வேண்டும். எனவே ஒரு "ஆதித் தமிழர் சமுதாயப் பெண்" விரும்புகின்ற சமூக விடுதலையை பெறுவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம்" என்றார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 11th July 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜூலை 18, 2013 | புரட்சி 12 | முழக்கம் 27 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...

**வினா:** கூடங்குளம் அணு மின் நிலைய கழிவுகள் பிரான்சு, ரஷ்ய நாட்டுத் தொழில் நுட்பத்தில் வெளியேற்றப்படுவதால் கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படாது.

**– அணுசக்திக் கழக முன்னாள் தலைவர் சீனிவாசன்**

**விடை:** அப்படியா? கடல் வாழ் உயிரினங்களுக்கு பேரிடர் பாதுகாப்புப் பயிற்சிகளை ஏற்கனவே கொடுத்து விட்டீர்களா?

**வினா:** நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் 5 சதவீத பங்குகளை தனியாருக்கு விற்காமல், தமிழக அரசுக்கே ரூ.500 கோடிக்கு விற்க ‘செபி’ ஒப்புதல்.

**– செய்தி**

**விடை:** அதேபோல், தமிழ்நாட்டின் வளங்களையும் தொழிலையும் தனியாருக்கு விற்காமல், தமிழ்நாட்டுக்கே விற்பதற்கு என்ன விலை தர வேண்டும்?

**வினா:** ஒன்றுபட்ட இந்தியா வேண்டுமா? அல்லது பிரிவினைவாத இந்தியா வேண்டுமா என்பதை மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

**– அஜய் மக்கான் (காங்கிரஸ் பொதுச் செயலாளர்)**

**விடை:** அப்படியானால், மக்களுக்கான இந்தியாவை யார் முடிவு செய்வது, சார்?

**வினா:** தந்தி சேவை முடிவுக்கு வந்துவிட்ட நிலையில் கடைசி தந்தி ராகுலுக்கு அனுப்பப்பட்டது. **– செய்தி**

**விடை:** “இப்போது மரணம் தந்திக்குத்தான். காங்கிரசுக்கு அல்ல. எமது ஆறுதலை ஏற்றுக் கொள்க” என்று தந்தி வாசகம் இருந் திருக்குமோ!

**வினா:** நெருக்கடியான நேரத்தில் கடமைகளை மேற்கொள்ளாத உத்தரகாண்ட் காங்கிரஸ் ஆட்சியை அகற்ற வேண்டும்.

**– குடியரசுத் தலைவரிடம் பா.ஜ.க. மனு.**

**விடை:** அதேபோல் நெருக்கடியான நேரத்தில் நாடிவந்த மக்களைக் காப்பாற்ற கடவுள்களையும், அவர்களின் கோயில்களையும் நீக்கிட வேண்டும் என்ற கோரிக்கையையும் மனுவில் சேர்த்துக் கொள்ளுங்கள்!

**வினா:** இந்து கோயில்களை அரசு கட்டுப்பாட்டிலிருந்து மீட்க வேண்டும். அரசு சட்ட விரோதமாக கோயில்களைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

**– டெல்லியில் இந்து தர்ம ஆச்சாரிய சபா கோரிக்கை**

**விடை :** ஆக, எந்தக் கோயிலும் கடவுள் கட்டுப்பாட்டில் இல்லை என்று கூற வருகிறீர்களா?

# கூடங்குளம்: அவசரமாக ‘இயக்குவது’ ஏன்?

***கூடங்குளம் அணுமின் திட்டம் செயல்படத் தொடங்கிவிட்டது என்று அறிவிப்பு வெளி வந்துள்ளது. இத்திட்டத்தை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்கைத் தொடர்ந்த ‘பூவுலகின் நண்பர்கள்’ அமைப்பைச் சார்ந்த பொறியாளர் சுந்தர்ராசனிடம் இது குறித்து ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்காக பேசினோம். அவர் விரிவான விளக்கங்களை நியாயங்களை எடுத்துரைக்கிறார். அவர் நம்மிடம் தெரிவித்த கருத்துகளின் சுருக்கமான தொகுப்பு:***

- கூடங்குளம் அணுமின் திட்டத்தின் ஒவ்வொரு உதிரிப் பாகத்தையும் தனித்தனியாக பாதுகாப்பானதா என்பதை சோதித்துக் கண்டறிய வேண்டும் என்று இந்திய அணுசக்திக் கழகம் இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம், மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மத்திய மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. பல லட்சம் உதிரிப் பாகங்கள் அனைத்தையும் இரண்டே மாதத்தில் சோதித்து முடித்துவிட்டதாக கூடங்குளம் அணுமின் நிலைய நிர்வாகம் உச்சநீதிமன்றத்தில் சீல் இடப்பட்ட உறையில் பதிவாளரிடம் அறிக்கை அளித்துள்ளது. இது தொடர்பாக வழக்கு தொடர்ந்த மனுதாரர்களாகிய எங்களுக்கு அந்த அறிக்கையைத் தரவும் இல்லை. நிர்வாகம் தந்த இந்த அறிக்கையில் என்ன அடங்கியிருக்கிறது என்று எங்கள் வழக்கறிஞர் நீதிபதிகளிடம் கேட்டபோது, நாங்களே அதைப் படிக்காதபோது உங்களுக்கு எப்படி கூற முடியும் என்று நீதிமன்றத்தில் நீதிபதிகள் தெரிவித்தனர். கூடங்குளம் அணுமின் திட்டம் பாதுகாப்பானது என்பதை சோதித்து உறுதிப்படுத்தியது உண்மைதான் என்றால், அந்த அறிக்கையை ‘சீல்’ செய்து, ரகசியமாக ஏன் பதிவாளரிடம் தர வேண்டும்? மனுதாரராகிய எங்களுக்கு தராமல் ஏன் மறைக்க வேண்டும்? நீதிபதிகளே படிக்காத நிலையில் திட்டத்தை ஏன் அவசரமாக செயல்படுத்த வேண்டும்?
- கூடங்குளம் அணுமின் திட்டம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்களின் அச்சத்தைப் போக்கிய பிறகு, திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது. அப்படி மக்களை இவர்கள் சந்திக்க தயாராக இல்லை. மக்களிடம் பேசவும் இல்லை. மாறாக இத்திட்டத்தை எதிர்த்து வரும் மக்கள் மீது வழக்குகளைப் போட்டுள்ளார்கள். எத்தனை பேர் மீது தெரியுமா? 2 இலட்சத்து 50ஆயிரம் பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 12,500 பேர் மீது தேசத்துக்கு எதிராக ‘போர் தொடுத்தவர்கள்’ என்ற பிரிவிலும் 9000 பேர் மீது ‘தேசத் துரோக’ சட்டப் பிரிவின் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ‘சுதந்திர’ப் போராட்டம் நடத்தியவர்கள் மீது பிரிட்டிஷ் ஆட்சி தமிழ்நாட்டில் பதிவு செய்த தேசத் துரோக வழக்கே 2400 மட்டும் தான். ‘சுதந்திர’ இந்தியாவில் பாதுகாப்பற்ற அணுமின் திட்டத்தை திணிக்காதே என்று போராடும் சொந்த நாட்டு மக்கள் மீது அதைவிடப் பன்மடங்கு எண்ணிக்கையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குகளை அணுமின் திட்டம் தொடங்குவதற்கு முன்பு திரும்பப் பெற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்தும் பின்பற்றப்படவில்லை.
- உலக மின் உற்பத்தியில் அணுசக்தி வழியாக மின்சாரம் தயாரிக்கப்படுவது இந்தியாவில் 2.7 சதவீதம் மட்டுமே. மற்றபடி - நீர், நிலக்கரி, சூரிய சக்தி, காற்றாலை, இயற்கை எரிவாயு அடிப்படையில்தான் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இந்தியாவில் மொத்த மின்சார உற்பத்தி 2 லட்சத்து 15 ஆயிரம் மெகாவாட். இதில் அணுமின் சக்தி வழியாக தயாரிக்கப்படுவது 4,780 மெகாவாட் மட்டுமே. எனவே, குறைந்த அளவிலே தயாரிக்கப்படுகிற இந்த ஆபத்தான மின் உற்பத்தி முறையைக் கைவிட முடியும். அதே நேரத்தில் ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் அணுமின் சக்தியையே அதிக அளவில் பயன்படுத்திய நிலையில், அதில் அடங்கியுள்ள ஆபத்து கருதி, கைவிடும் முடிவுக்கு வந்து விட்டன. குறிப்பாக ஜப்பான் அதன் மின் உற்பத்தியில் 34 சதவீதம் அணுமின் உற்பத்தியையே சார்ந்து நின்றது. ‘புக்குஷிமா’ விபத்துக்குப் பிறகு, தனது முடிவை அது மாற்றிக் கொண்டுவிட்டது. இதை நாம் கூறும்போது, அணுமின்சக்திக்கு ஆதரவாக பேசும் விஞ்ஞானிகள், அவர்கள் அணுமின் உற்பத்தியைக் கைவிடவில்லை. 2022 வரை அதை நீடிக்கவே திட்டமிட்டுள்ளனர் என்று கூறுகிறார்கள். இது திசை திருப்பும் கருத்து. அணுமின் உற்பத்தியை மட்டுமே நம்பியிருந்த அந்த நாடுகள் மாற்று மின்சார உற்பத்திகளை கட்டமைக்க தேவைப்படும் கால அவகாசத்துக்காகவே அதைத் தள்ளிப் போடுகிறார்கள் என்பதே உண்மை. அணுமின் சக்தியின் ஆபத்துகளை உணர்ந்த மக்கள், அங்கே போராடத் தொடங்கி விட்டார்கள். நாங்களும் இங்கே இருக்கிற அணுமின் உலைத் திட்டங்களை மூடிவிட வேண்டும் என்று கோரவில்லை. ஏற்கனவே செயல்படும் அணுமின் நிலையங்களின் பாதுகாப்பை உறுதி செய்து, அதன் செயல்படும் காலம் வரை செயல்பட அனுமதித்து பிறகு மூடி விடுங்கள். அதே நேரத்தில் புதிய அணுமின் திட்டங்களைத் தொடங்கிட வேண்டாம் என்றுதான் வற்புறுத்துகிறோம்.
- கூடங்குளத்தில் முதல் பிரிவில் இப்போது அணுமின் உற்பத்தி தொடங்கி விட்டதாக அறிவித்துள்ளார்கள். இன்னும் 3 மற்றும் 4-வது பிரிவுக்கு ரஷ்ய நாட்டுடன் ஒப்பந்தம் போடப் போகிறார்கள். 5 மற்றும் 6வது பிரிவுகளுக்கும் திட்டமிடப்பட்டுள்ளன. ‘அணுமின் பூங்கா’வை (Nuclear Park) கூடங்குளத்தில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்போது அதன் உற்பத்தி இலக்கு 1000 மெகாவாட். இந்தியாவில் முதன் முதலாக தாராப்பூரில் அணுமின் தொடங்கப்பட்ட அந்தக் காலத்திலேயே 60 மெகா வாட் மின்சார உற்பத்தியே இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. படிப்படியாக சிறிது சிறிதாகவே இந்த உற்பத்தி இலக்கு அதிகரிக்கப் பட்டது. இதற்கு 60 ஆண்டுகால தொடர் நிகழ்வுகள் தேவைப்பட்டன. ஆனால், கூடங்குளத்தில் மிக அதிக அளவில் 1000 மெகாவாட் என்று உற்பத்தி இலக்கை நிர்ணயிக்கிறார்கள். இதன் ஆபத்துகள் பற்றி கவலைப்படவில்லை. 1000 மெகாவாட் மின் உற்பத்திக்கு நாளொன்றுக்கு 700 கோடி லிட்டர் ‘கூலிங் வாட்டர்’ பயன்படுத்தப்படுகிறது. ‘கூலிங் வாட்டர்’ என்றால், குளிர்ந்த நீர் என்று கருதிவிடக் கூடாது. அணுமின் உலையை குளிர்விப்பதற்காக 29 டிகிரி செல்சியசில் தண்ணீரை செலுத்தி, 39 டிகிரி செல்சியசில் வெளியேற்றப்படும் தண்ணீர் இது. 6 கூடங்குளம் மின்உற்பத்தி பிரிவுகளும் செயல்படும் போது ஒவ்வொரு நாளும் 4200 கோடி லிட்டர் வரை கடலில் கலக்க வேண்டும். அதாவது 4200 கோடி லிட்டர் தண்ணீர் 38 டிகிரி செல்சியஸ் சூட்டில் கடலில் கலக்கப் போகிறது. இந்த நிலையில் கடல் வாழ் உயிரினங்கள் நிலை என்னவாகும்? கடலை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரங்கள் நிலை என்னவாகும்?
- அதுமட்டுமல்ல, இந்தத் தண்ணீரை கடலில் கொட்டாமல் கடற்கரையிலேயே கொட்டப்படுகிறது. கடலுக்குள் உள்ளே 2 கிலோ மீட்டர் தொலைவில் கொட்டப்பட வேண்டும் என்று சுற்றுச் சூழல் அமைச்சகம் கூறுகிறது. இப்போது தடை மீறப்படுவதை சுற்றுச் சூழல் அமைச்சகமும் கண்டு கொள்ளவில்லை. உச்சநீதிமன்றமும் கவனத்தில் எடுக்கவில்லை. ஒரு நாள் நள்ளிரவில் அணுமின் திட்டம் செயல்படத் தொடங்குவதாக அறிவிப்பு மட்டும் அவசர அவசரமாக வெளிவந்துள்ளது.
- அணுமின் நிலையம் அதிகமாக செயல்படும் நாடுகள் எவை? இதற்கு உலக வரைபடத்தைப் பார்த்தாலே விடை கிடைத்துவிடும். பூமத்திய ரேகையை சுற்றியுள்ள இந்தியா போன்ற நாடுகளில் தண்ணீர் வளம் குறைவு.

3 ஆம் பக்கம்

**தலையங்கம்**

## ஜாதியும்-ஜாதிப் பேரணிகளும்!

அலகாபாத் உயர்நீதிமன்றம், அரசியல் கட்சிகள் நடத்தும் ஜாதிப் பேரணிகளுக்கு தடை விதித்துள்ளது. பார்ப்பன ஆதிக்க ஜாதிகள் பேரணி நடத்துவதும், தாழ்த்தப்பட்டோர் ஒடுக்கப்பட்டோர் பேரணி நடத்துவதும் வேறு வேறானது. முன்னது ஜாதி ஆதிக்கப் பேரணி; பின்னது உரிமைகளுக்கான பேரணி.

எப்படி ஏழ்மை ஒழிப்பு என்பது ஏழைகளின் ஒழிப்பாகிவிடக் கூடாதோ, அதேபோல் ஜாதி ஒழிப்பு என்பதும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை ஒழிப்பாகிவிடக் கூடாது. உ.பி.யில் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி, பார்ப்பனர்களுக்காக மாவட்டந்தோறும் மாநாடுகளை நடத்தி இறுதியில் மாநில மாநாட்டை லக்னோவில் நடத்தியுள்ளது. பார்ப்பனர்கள் தங்களின் 'ஜாதித் திமிர்' அடையாளங்களோடு விபூதி, நாமம், பூணூல் கோலங்களோடு பஜனைப் பாடல்களைப் பாடிக் கொண்டு மாநாட்டுக்கு திரண்டதாக செய்திகள் கூறுகின்றன. மாநாட்டில் 2014 நாடாளுமன்றத் தேர்தலில் உ.பி.யில் 21 நாடாளு மன்றத் தொகுதிகளுக்கான பார்ப்பன வேட்பாளர்கள் பட்டியலையும் அறிவித்துள்ளார். ஒரு குறிப்பிட்ட சாதிப் பிரிவுக்கு இவ்வளவு அதிக எண்ணிக்கையில் வேட்பாளர் அறிவிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை.

சமாஜ்வாடிக் கட்சியைச் சார்ந்த இராம்கோபால் யாதவ் தொடர்ந்த பொது நலன் வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் அதிரடியாக அளித்த தீர்ப்பு அரசியல் கட்சிகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது உண்மை. ஜாதியை தேர்தல் சந்தர்ப்பவாத நலனுக்காக அரசியல் கட்சிகள் தேர்தல் நடத்தை விதிகள் மற்றும் தேர்தல் ஆணைய விதிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, உயர்த்திப் பிடித்து விடுகின்றன. எனவே அரசியல் கட்சிக்கு இப்படி ஒரு கடிவாளம் தேவை என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். அதே நேரத்தில் உரிமைக்காகவும் ஜாதிய அடிமைத்தனத்தையும் எதிர்த்து நிற்கும் தாழ்த்தப்பட்ட மிகவும் பின் தங்கிய சமூகப் பிரிவினரின் உரிமைகளை இத்துடன் இணைத்துப் பார்க்கக் கூடாது.

அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து, சமாஜ்வாடிக் கட்சிக்குள் ஜாதி வாரியாக அமைத்திருந்த 14 பிரிவுகளை உடனடியாகக் கலைத்து அக்கட்சி அறிவித்திருக்கிறது. அதில் பார்ப்பனப் பிரிவும் ஒன்று. பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி, இனி, ஜாதிப் பேரணிகளை நடத்துவதற்கு பதிலாக சகோதரத்துவ மக்கள் பேரணி நடத்தப் போவதாக அறிவித்துள்ளார். இவையெல்லாம் வரவேற்க வேண்டிய மாற்றங்களாகும்.

ஜாதி-மதங்களைக் கடந்து அனைத்து ஜாதி-மதப் பிரிவினரையும் ஒரு குடையின் கீழே இணைத்து வைப்பதுதான் அரசியல் கட்சியாக இருக்க முடியும். ஆனால், அதற்கு மாறாக, அரசியல் கட்சிகளே ஜாதி மதப் பிளவுகளை அடையாளங்களாக பூசிக் கொண்டு நிற்பது 'சமத்துவம்' என்ற உண்மையான ஜனநாயக அடையாளத்துக்கு நேர் எதிரானதாகும். வேட்பாளர்கள், கட்சிப் பொறுப்பாளர்கள்கூட எண்ணிக்கையில் அதிகம் உள்ள ஜாதி ஆதிக்கவாதிகளுக்குத்தான் கூடுதலாக கிடைக்கிறது. பார்ப்பனர் எண்ணிக்கையில் மைனாரிட்டிகளாக இருந்தாலும் அவர்களின் சமுதாய, அரசியல், ஊடக செல்வாக்கும் - அதன் ஆதிக்கமும் ஏனைய பிரிவினரை, தங்களிடம் மண்டியிடச் செய்து வருகிறது. இதில் உண்மையிலேயே ஜாதி ஒழிப்பு நடைமுறையில் எதார்த்தமாக்கப்பட வேண்டுமானால், இப்படி சமுதாய அரசியல் செல்வாக்கோடு கொடிகட்டிப் பறக்கும் பார்ப்பனிய ஆதிக்க சக்திகளுக்கு எதிரான போராட்டம் தீவிரமாக்கப்பட்டு அவர்களிடம் குவிந்துள்ள சமுதாய அரசியல் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும். இதற்குத்தான் பார்ப்பனிய மேலாண்மையை உயர்த்தும், இந்துமதம், சடங்குகள், வழிபாட்டு உரிமைகள், ஜாதியமைப்புகளையும் எதிர்த்த பெரியார், அதேபோழ்து ஜாதிய சமநிலைக்கும், சமூக உரிமைகளுக்கும் கல்வி, வேலை வாய்ப்புகளில் ஒதுக்கீட்டு உரிமைகளுக்கும் போராடினார். ஜாதி ஒழிப்பு என்பது மேற்குறிப்பிட்ட இரண்டு பிரச்சினைகளையும் தீவிரமாக்குவதில்தான் அடங்கி யிருக்கிறது என்பதை உணர வேண்டும்.

ஜாதி பேரணிகளை தடை செய்யும்போது இந்து மத அடிப்படை யில் இயங்கும் அமைப்புகளையும் தடை செய்ய வேண்டாமா என்ற நியாயமான கேள்வியை மாயாவதி எழுப்பியுள்ளார். அரசியல் சட்டம் வழங்கியுள்ள மத உரிமையை அரசியலுக்குப் பயன்படுத்துவது எப்படி சரியாகும்? ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்துத்துவா அமைப்புகள் மதப் போர்வையில் அரசியல் நடத்துவது சமூகத்தைப் பிளவுபடுத்துவது மட்டுமல்ல; ஜாதிய அமைப்புக்கும் உரமூட்டி வளர்ப்பதாகும். எனவே ஜாதியத்தின் வேர் மதம் என்றாகிவிட்ட நிலையில் மதத்தின் அரசியலையும் தடைப்படுத்தியாக வேண்டும்.

அதே நேரத்தில் நீதிமன்ற தீர்ப்புகளும் சட்டங்களும் இந்த சமூகப் பிரச்னைக்கு நிலையான தீர்வைக் கண்டுவிட முடியாது. மக்கள் மன்றத்தில் ஜாதி மதத்தின் அடக்குமுறைகளுக்கு எதிரான இயக்கம் நடத்தப்பட்டு, மக்கள் அதன் நியாயங்களை உணரச் செய்ய வேண்டும். ஜாதி-மதமற்ற வாழ்க்கைக்கான பொருளியல் அடித்தளங்களை உருவாக்கும் திட்டங்களை ஆட்சி முன்வைக்கப்பட வேண்டிய அவசியமும் இருக்கிறது.

புத்தர், பூலே, பெரியார், அம்பேத்கரின் பார்ப்பனிய ஜாதி ஒழிப்பு சிந்தனைகளை மக்கள் மன்றத்தில் வேரூன்றச் செய்து, இதற்கு எதிரான ஆதிக்க சக்திகள் நடவடிக்கைகளுக்கு கடிவாளம் போடும் போதுதான் உண்மையான ஜாதியற்ற சமூகத்தைப் படைக்க முடியும்.

**அக்கம்-பக்கம்**

## பாவம், காமராசர்

அடேங்கப்பா! இது உண்மை தானா? என்று மூக்கில் மீது விரலை வைக்க வேண்டியிருக்கிறது. எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு சென்னை நகரில் திரும்புமிடமெல் லாம் இந்த ஆண்டு காமராசர் பிறந்த நாள் விழா சுவரொட்டிகள்; வண்ணப் பதாகைகள்! அத்தனையும் ஒட்டியது காங்கிரசுக்காரர்கள்தான்! காமராசர் பெயர் படங்களோடு ஒட்டிய பிரமுகர் களின் பெயர்கள்! 'உயிரே' என்கிறார் ஒருவர்; தலைவரே என்கிறார் மற்றொருவர்! 'தெய்வமே' என்கிறார், இன்னொருவர்! 'சபதமேற்கிறோம்' என்கிறார், இன்னொரு தலைவர்!

காமராசர் நூற்றாண்டு சில ஆண்டு களுக்கு முன்பு வந்தது. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் அதிகாரபூர்வமாக ஒரு விழாக்கூட இவர்கள் நடத்த முன்வரவில்லையே என்று நாம் கேட்க வரவில்லை. கேட்டால் 'போடா தேசத் துரோகி' என்று தூற்றுவார்கள்! (அப்போது நமது இயக்கம் தான் பல ஊர்களில் காமராசர் விழாக்களை நடத்தியது) இப்போது போட்டிப் போட்டுக் கொண்டு சுவரொட்டிகள் வருவதற்கு என்ன காரணம்? எல்லாம் வரப் போகிற நாடாளுமன்றத் தேர்தல்தான்! இப்படி நாம் எழுதுவதால் எந்த காங்கிரஸ் காரராவது, "அப்படி எல்லாம் எழுதுவது தவறு; நாங்கள் பதவியை கால் தூசிக்கும் மதிக்காத கொள்கைச் சிங்கங்கள், தெரியுமா?" என்று மார்தட்டி, தொடை தட்டிக் கிளம்பிடப் போவதில்லை. அப்படிப் பட்ட காங்கிரசு தலைவர் எவரும் இப்போது உயிருடன் இல்லை என்பது நமக்குத் தெரியும்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, 'சன்' தொலைக்காட்சியில் ஒரு விவாதம் நடந்தது. "தமிழ்நாட்டில் தேசியக் கட்சிகள் ஏன் வளரவில்லை?" என்பது தலைப்பு. பங்கேற்ற தேசியக் கட்சிப் பிரமுகர்கள் பிளந்து தள்ளினார்கள். '1952 ஆம் ஆண்டு தேர்தலின்போது நாங்கள் தான் அதிக பலத்தில் இருந் தோம்' என்றார், ஒரு பொதுவுடைமை தேசியவாதி. '1937 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை எங்கள் தேசிய காங்கிரசு தான் ஆட்சி செய்தது தெரியுமா?' என்று பெருமை பேசினார், ஒரு காங்கிரசு தேசியவாதி! இந்து தேசிய வாதி கட்சிப் பிரமுகருக்கு அப்படிப் பெருமை பேச பழைய வரலாறு ஏதும் இல்லை. ஆனாலும் தங்கள் கட்சிதான் தூய்மையானது என்றார். விவாதம் நடந்துகொண்டே இருக்கும்போது, இங்கே, "பேசுகிற நாங்கள் அனை வருமே தேசியவாதிகளாகவே இருக்கிறோம்! திராவிடர் இயக்கவாதி ஒருவர்கூட இல்லையே" என்று ஆதங்கத்துடன் கேட்டார், ஒரு தேசியவாதி. 'இருக்கிறார், வருவார்' என்றார், நிகழ்ச்சித் தொகுப்பாளர்.

30 நிமிட 'விவாதங்களுக்குப்' பிறகு மேட்டூரிலிருந்து பேசினார், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி. அதுவரை சுயப் பெருமை 'தம் பட்டங்களை' ஓங்கி ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த தேசியக் கட்சிகளுக்கு 'கிடுக்கிப் பிடியாக' வினாக்களை தொடுத்தார், கொளத்தூர் மணி.

"தமிழ்நாட்டு மக்களின் உணர்வு களை வெளிப்படுத்தி, அதற்காகப் போராடும் அமைப்புகள் தான் தமிழ் நாட்டில் செல்வாக்கு பெற முடியும்; தேசியக் கட்சிகள் இதைச் செய்யத் தவறு கின்றன. காமராசர் தேசியக் கட்சியில் இருந்தாலும் அவர் தமிழக மக்களின் உணர்வுகளை எதிரொலித்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக் கான ஆட்சியை நடத்தினார். மொழிவழி மாநிலங்கள் பிரிந்த நிலையில் தென்னக மாநிலங்களை இணைக்கும் 'தெட்சிணப் பிரதேசம்' என்ற திட்டத்தை பார்ப்பனர்களும் காங்கிரசுக்குள் இருந்த சிலரும் சூழ்ச்சியாக முன்வைத்தபோது, அதை காமராசர் ஏற்க மறுத்தார்; குலக் கல்வித் திட்டத்தை ஒழித்தார்; பள்ளிகளைத் திறந்தார். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை செயலால் வெளிப் படுத்தியதால் காமராசர் ஆட்சியை பெரியார் ஆதரித்தார்.

கேரளாவின் பொதுவுடைமைக் கட்சி யும், காங்கிரசு கட்சியும் தங்கள் மாநிலத் துக்கு அணுமின் திட்டமே தேவை யில்லை என்கிறது. ஜெய் தாப்பூர் அணு மின் திட்ட எதிர்ப்புப் போராட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியே தலைமை ஏற்று நடத்துகிறது. தமிழ் நாட்டில் அதே கட்சிகள் கூடங்குளம் அணுமின் திட்டத்தை ஆதரிக்கின்றன. கருநாடகா வில் பா.ஜ.க. ஆட்சியானா லும், காங்கிரசு ஆட்சியானாலும் தமிழ்நாட்டுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய காவிரி நீர் உரிமையை தர மறுக்கிறார்கள். இங்கே தமிழகத்தி லுள்ள அதே 'தேசிய கட்சிகள்', தங்கள் கட்சிகள் நடத்தும் ஆட்சியைத் தட்டிக் கேட்பதில்லை. சடங்கிற்காக கண்டித்து அறிக்கைகள் விட்டிருக்கலாம். அது வேறு அவர்களின் கட்சி செயற்குழு விலோ, நிர்வாகக் குழுவிலோ தமிழகத் தின் உரிமைகளுக்கு நியாயமானக் குரல் கொடுத்து அழுத்தம் தந்தார்களா என்பதுதான் கேள்வி?

மண்டல் குழு பரிந்துரை அமுலாக்கப் பட்டபோது வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்த பா.ஜ.க. - "தமிழ்நாட்டில் மட்டும் இடஒதுக்கீடு கொள்கையை ஆதரிக்கிறோம்" என்றது. இப்போதும் கூட பிரதமர் பதவிக்கு பா.ஜ.க. மோடியை முன்னிறுத்துகிறது, எந்த அடிப்படையில்? மோடி குஜராத்தில் நல்ல நிர்வாகத்தைத் தந்தார் என்று கூறுகிறார்கள். ஆக, தேசிய அரசியலை நிர்ணயிப்பதற்கு மாநிலங்களிலிருந்து தான் ஆட்களைப் பிடித்து வரவேண்டி யிருக்கிறது. எங்கே போனது தேசியம்?"

- என்று வாதங்களை அடுக்கிக் கொண்டே போனார், தோழர் கொளத்தூர் மணி.

அவ்வளவுதான். தேசியம் பேசும் கட்சிகள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ள 'தற்காப்பு' வாதங்களில் இறங்கிடும் நிலைக்கு தள்ளப் பட்டார்கள். தோழர் கொளத்தூர் மணி எழுப்பிய கேள்விகளுக்கு இறுதி வரை விடையே இல்லை!

"தமிழ்நாட்டில் காமராசர் ஆட்சியை அமைப்போம்" என்று தமிழக காங்கிரசார் தனித்தனியாக பேசக் கிளம்பியிருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அப்படிப்பட்ட காமராசர் ஆட்சியை காங்கிரசுக்குள் எந்தக் குழு அமைப்பது என்பதுதான் இப்போது பிரச் சினையே! திருவாளர்கள் வாசன், ப. சிதம்பரம், ஈ.வெ.கி.எஸ். இளங்கோ வன், தங்கபாலு, ஞானதேசிகன் என்று பல்வேறு அணியினர் காமராசர் ஆட்சியை அமைப்பதற்கு கடும் போட்டியில் களத்தில் இறங்கி யிருக்கிறார்கள். (பெயர் விடுபட்டிருக்க லாம் பெயர் இடம் பெறாதவர்கள், மன்னிப்பார்களாக. இருட்டடிக்க வேண்டும் என்ற எந்த உள் நோக்கும் எமக்குக் கிடையாது)

(4 ஆம் பக்கம்)

# கழகத்தின் செயல்பாடுகள்

## மதுரை மண்டல கலந்துரையாடல் கூட்டம்

02.06.13 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் ஒட்டன் சத்திரத்தில் மதுரை மண்டலப் பொறுப்பாளர்களின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. அமைப்புச் செயலாளர் தி.தாமரைக் கண்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டத் தோழர்கள் பங்கேற்றனர்.

ஜூன் 3 ஆம் வாரத்தில் மதுரை மண்டலப் பொறுப்பாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சிவகுப்பை பழனியில் நடத்துவது எனவும், ஆகஸ்ட் 3 ஆம் வாரத்தில் தொடர்ச்சியாக 15 நாட்கள் கிராமப்புறப் பிரச்சாரப் பயணம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

சுயமரியாதை கலைபண்பாட்டுக் கழகத்தின் மதுரை மண்டல அமைப்பாளராக செம்பட்டி மு.இராஜாவும், சு.க.ப.க. திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளராக பீட்டர் அந்தோணிராஜூம், சிவகங்கை சு.க.ப.க மாவட்ட அமைப்பாளராக தோழர் இளங்கோவும், திராவிடர் விடுதலைக்கழகத்தின் சிவகங்கை மாவட்ட அமைப்பாளராக தோழர் முத்துக்குமாரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## குடந்தையில் ‘ஒற்றுமை விழா’ பொதுக் கூட்டம்

06-07-2013 சனிக்கிழமை மாலை 6-00 மணியவில் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் மகாமகக் குளக்கரையில், தமிழ்நாடு மக்கள் கட்சி சார்பாக ஒற்றுமை விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு மக்கள் கட்சி, அனைத்து தமிழக பெண்கள் கழகம், தமிழக இளைஞர் கழகம், அம்பேத்கர் ஜனநாயக இளைஞர் கழகம் ஆகிய அமைப்புகளை ஒருங்கிணைத்து நடத்திய இந்த பொதுக் கூட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

## பல்லடத்தில் கழகத் தோழர் மணவிழா

கோவை மாவட்டம் சூலூர் அருகே உள்ள கண்ணம்பாளையம் பகுதி கழகத் தோழர் அ.வெ.நாராயணமூர்த்தி-செ.தீபா ஆகியோரது வாழ்க்கைத் துணை ஏற்பு விழா 07-07-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11-00 மணியளவில் பல்லடம் ஜி.ஆர்.ஆர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி திருமணத்தை நடத்தி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

## காஞ்சியில் சமூகநீதிப் பேரவை நடத்திய வி.பி.சிங் பிறந்த நாள் விழா

முற்போக்கு சமூக நீதிப் பேரவை சார்பாக காஞ்சியில் ஜூன் 25 அன்று நாராயணகுரு திருமண மண்டபத்தில் வி.பி.சிங் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. வி.பி.சிங் பற்றி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன. பேரவை நிறுவனர் டாக்டர் விமுனாமூர்த்தி பரிசுகளை வழங்கி நிறைவுரையாற்றினார்.

## மயிலையில் கழகக் கூட்டம்

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 5.7.2013 அன்று மாலை 6 மணிக்கு மயிலாப்பூர் சாய்பாபா கோவில் அருகில், 4.7.2013 அன்று ஜாதி அரசியலால் உயிரிழந்த தோழர் இளவரசனுக்கு நினைவு மேடை அமைக்கப்பட்டு, வியாபார மயமாகும் கல்வியும், பள்ளிகளில் ஆங்கிலத் திணிப்பும் நடைபெறுவதற்கு எதிரான விளக்கக் கூட்டம் நடைபெற்றது. பா.ஜான் தலைமை வகிக்க, இராவணன் முன்னிலை வகிக்க மனோகரன் வரவேற்புரையாற்ற, மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, துரை அருண், ரூதர் அ. கார்த்திக்-பகுதி செயலாளர், விடுதலைச் சிறுத்தைக் கட்சி, கழகத் தோழர் சூலூர் வீரமணி ஆகியோர் விளக்கவுரையாற்றினர். நிகழ்வின் தொடக்கத்தில் அருள் தாசு, பகுத்தறிவு பாடல்களை பாடினார். முடிவில் மாரிமுத்து நன்றி கூறினார். இக் கூட்டத்தில் ஜாதி அரசியலால் உயிர் இழந்த தோழர் இளவரசனுக்கு இரங்கல் தெரிவித்து இரண்டு நிமிடம் அமைதி காக்கப்பட்டது.

## கவின் இராமலிங்கம் வால்டர்ஸ் முதல் பிறந்த நாள் நன்கொடை

பேராசிரியர் இரா. சண்முக சுந்தரம்-பேராசிரியை ருக்குமணி ஆகியோரின் மகன் இராமலிங்கம் வால்டர்ஸ்-சியாமளா தம்பதியருக்கு பிறந்த கவின் இராமலிங்கம் வால்டர்ஸின் முதல் பிறந்த நாளான 18.6.2013 அன்று சிட்னி ஆஸ்திரேலியாவில் கொண்டாடினர். பிறந்தநாள் நினைவாக திராவிடர் விடுதலைக் கழக வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கி மகிழ்ந்தனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,சென்னை-41.
✆9941613535

முதல் பக்கத் தொடர்ச்சி

கடக ரேகைக்கு (Tropic of Cancer) மேலே உள்ள நாடுகளில் தண்ணீர் வளம் அதிகம் என்பதால் அந்தப் பகுதி நாடுகளில் மட்டும் தான் உலக அணுமின் உற்பத்தியில் 95 சதவீதம் அணுமின் உலைகள் நிறுவப் பட்டுள்ளன. உலகில் மொத்தம் உற்பத்தியாகும் அணுமின் உற்பத்தி 3 லட்சத்து, 60 ஆயிரம் மெகாவாட். ஆனால் உலகில் மரபு சாரா முறையில் உற்பத்தியாகும் மின் உற்பத்தியே அதிகம். அதன் உற்பத்தித் திறன் 4 லட்சத்து 50 ஆயிரம் மெகாவாட்டுக்கும் அதிகம்.

- நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள அணுசக்தி இழப்பீட்டு சட்டத்தின்படி, விபத்துகள் நேரிட்டால், ‘உலைகளை’ வழங்கிய நாடுகள் 1500 கோடி இழப்பீடு தர வேண்டும் என்று கூறுகிறது. இழப்பு எவ்வளவு அதிகம் இருந்தாலும் சரி, 1500 கோடி வழங்கினாலே போதும் என்று கூறும் சட்டத்தை கடும் எதிர்ப்புகளை மீறி நிறைவேற்றினார்கள். இழப்பீடு தர வேண்டும் என்பதை சட்டபூர்வமாக்கியிருப்பதாக இந்திய அரசு பெருமை பேசியது. இப்போது கூடங்குளம் அணு உலையை வழங்கிய ரஷ்யா, இந்த சட்டம் தங்களைக் கட்டுப்படுத்தாது என்று கூறிவிட்டது. இந்தச் சட்டம் வருவதற்கு முன்பே ஒப்பந்தம் போடப்பட்டுவிட்டதாக ரஷ்யா வாதாடியது. அதை இந்திய அரசும் ஏற்றுக் கொண்டுவிட்டது. (‘வோடாபோன்’ அலைபேசி நிர்வாகம் இதேபோல ஒப்பந்தக் காரணத்தைக் காட்டி அரசுக்கு கட்ட வேண்டிய பணத்தைக் கட்ட மறுத்தபோது, அதை எதிர்த்து இந்திய அரசு வழக்கு தொடர்ந்தது. உச்சநீதிமன்றமும் ‘வோடாபோன்’ பணத்தை கட்டியாக வேண்டும் என்று உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது) இந்தியாவின் அரசமைப்புச் சட்டம் இழப்பீடு முழுமையாக வழங்கப்பட வேண்டும். எந்திரங்களை வழங்கும் நாடுகளே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உறுதியாகக் கூறியுள்ள நிலையில் அரசியல் சட்டத்தையே மீறி இந்திய அரசு செயல்படுகிறது.
- கூடங்குளம் அணுமின் திட்டத்தை எதிர்ப்பவர்கள் ‘தேசத்துக்கு விரோதிகள்’ என்று திட்ட ஆதரவாளர்களும் காங்கிரசாரும் கூறுகிறார்கள். 600 தமிழ் மீனவர்களை சிங்களக் கடற்படை சுட்டுக் கொன்றதைத் தடுக்காதவர்கள், இறுதிப் போரில் இலட்சக்கணக்கில் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்ததைத் தடுக்காதவர்கள், கூடங்குளம் திட்டத்தை எதிர்ப்போரை தேசத் துரோகிகள் என்கிறார்கள். இப்போது கூடங்குளம் அணுமின் திட்டத்தில் திட்டத்துக்கான எரிபொருளை இத்திட்டம் முடிவுக்கு வரும்காலம் வரை ரஷ்யாவிடமிருந்து தான் வாங்க வேண்டும் என்பதை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. ஆக, ரஷ்யாவை சார்ந்து மட்டுமே இத்திட்டத்தை அமுல்படுத்த முடியும். இடையில் வேறு அரசியல் காரணங்களைக் காட்டி, ரஷ்யா, எரிபொருளை நிறுத்துவதாக மிரட்டினால், அதற்கு இந்தியா பணிந்து போக வேண்டும் என்ற நிலை ஏற்படக் கூடும். ‘தேச பக்தி’ பற்றி பேசுகிறவர்களைக் கேட்கிறோம், இதுதான் தேசபக்தியா?
- அணுமின் உற்பத்திக்கான அடிப்படையான எரிபொருள் ‘யுரேனியம்’; இது உலகிலேயே அதிகமாகக் கிடைக்கும் நாடு ஆஸ்திரேலியா; அங்கே உலக யுரேனியத்தில் 23 சதவீதம் கிடைக்கிறது. ஆனால், அந்த நாடு ஒரு சதவீத அணுமின் உற்பத்திக்குக்கூட தயாராக இல்லை. மற்ற நாடுகளுக்கு வேண்டுமானால் ‘யுரேனியத்தை’ ஏற்றுமதி செய்யத் தயாராக உள்ளது. ‘யுரேனியத்தை’ செறிவூட்டும் ஆலை ஒன்றை சீனாவில் குவாங்டாங்க் (Guangdong) என்ற பகுதியில் அந்நாட்டு அரசு தொடங்கத் திட்டமிட்டிருந்தது. இதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துப் போராடியதால் சீனா கடந்த வாரம் இந்த திட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ளது. நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல சீனா, வட அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, பிரான்சு, ஜப்பான் எல்லாம் ‘கடக ரேகை’ மேலே உள்ள நாடுகள்.
- அண்மையில் தென்கொரியா நாட்டில் அணு உற்பத்தி நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகள் தரமற்றவை என்பதைக் கண்டறிந்த அந்நாட்டு அரசு, அதன் செயல்பாடுகளை ரத்து செய்துள்ளது. சீனாகூட, ரஷ்ய தொழில் நுட்பத்தை, அணுமின் திட்டத்தில் அங்கீகரித்தாலும் அத்திட்டத்தை வடிவமைத்து உற்பத்தி செய்து காட்டும் வரை பொறுப்பு முழுவதையும் ரஷ்யாவிடமே ஒப்படைத்து விட்டது. பாதுகாப்பாக திட்டத்தை அமுல்படுத்திக் காட்டிய பிறகே ஒப்புதல் வழங்கும் இந்த முறை ‘Turn Key’ என்று கூறப்படுகிறது. ஆனால் இந்தியாவின் விஞ்ஞானிகள் தாங்களாகவே ரஷ்ய அணு உலைகளைக் கொண்டு கூடங்குளத்தில் தாங்களாகவே கட்டுமானம் வடிவமைப்புகளை செய்ய முன்வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இது இந்தியாவுக்கே புதிய தொழில் நுட்பமாகும்.
- ஒரு விபத்து நேர்ந்தாலோ இயற்கைப் பேரழிவு நடந்தாலோ அதிலிருந்து மக்களைக் காப்பாற்றக் கூடிய ‘பேரிடர் மேலாண்மை’ (Disaster Management) அமைப்பு இந்தியாவில் படுமோசமாக இருப்பது எல்லோரும் அறிந்ததுதான். அண்மையில் உத்தரகாண்ட் - வெள்ளம் - மலைச் சரிவுகளில் நாடே இதைப் பார்த்தது. பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை. தமிழ்நாட்டில் கடற்கரையிலிருந்து 16 கிலோ மீட்டர் சுற்று தூரம் வரை அவசர பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி கன்யாகுமரி மாவட்டத்தில் கடற்கரை அவசரப் பாதுகாப்புப் பகுதிகளாக உள்ள கிராமங்கள் பற்றி தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டபோது அப்படி எந்த ஒரு பகுதியும் கன்யாகுமரி மாவட்டத்தில் கிடையாது என்று தேசிய அணுமின் கழகம் உண்மைக்கு மாறாக பதில் தந்தது. ஆனால் கள ஆய்வில் 13 இலட்சம் மக்கள் இத்தகைய பகுதியில் வாழ்வதாக அவர்களே அறிக்கை தயாரித்துள்ளனர்.
- உச்சநீதிமன்றமே கூறிவிட்ட பிறகு, இவர்கள் ஏன் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்று சில விஞ்ஞானிகளும் அரசியல் கட்சிகளும் வாதிடுவது ஏற்புடையதல்ல. உச்சநீதிமன்றத்தையும் மிஞ்சியது மக்கள் மன்றம். அந்த மக்களிடம் வந்து பேசுங்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள். “விஞ்ஞானிகளுக்கு எல்லாம் தெரியும்; மக்களுக்கு எதுவுமே புரியாது” என்ற ஆணவப் பேச்சே, இந்தப் பிரச்னைக்கு மிகவும் அடிப்படை. உச்சநீதிமன்றம் கூறியதுதான் சரியானது என்றால், நான், ஒரு பொறியாளனாக வந்திருக்க முடியாது. ‘வகுப்புவாரி பிரதிநிதித்துவம்’ செல்லாது என்று தீர்ப்பளித்தது, இந்த உச்சநீதிமன்றம் தான். அப்போது பெரியார் மக்களை அணி திரட்டி, தீர்ப்பை எதிர்த்துப் போராடியதால் தான் முதல் சட்டத் திருத்தம் வந்தது. எங்களைப் போன்றவர்கள், கல்வி உரிமைக்கு கதவு திறந்து விடப்பட்டது” என்றார் பொறியாளர் சுந்தரராசன்!

DATE OF PUBLICATION 18.07.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# சுயமரியாதை – சமத்துவப் பரப்புரைப் பயணம்

**தலைமை : தோழர் கொளத்தூர் மணி**

*1932 ஆம் ஆண்டில் பெரியார் முன் வைத்தது சுயமரியாதை - சமதர்மத் திட்டம். இன்று அதே கோரிக்கைகளை திராவிடர் விடுதலைக் கழகம் சமுதாயத்தின் தேவை கருதி முன்னெடுக்கிறது. முதல் கட்டமாக 24.7.13 இல் மயிலாடுதுறையில் தொடங்கி 20 நாட்கள் 20 மாவட்டங்களில் பரப்புரையில் ஈடுபட்டு, 12.8.13இல் திராவிடர் விடுதலைக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு தொடக்க நாளில் புதுச்சேரியில் நிறைவடைகிறது.*

**சுயமரியாதை நோக்கில்...**

- மக்களின் சுயமரியாதையை அவமதித்து அவர்களை பார்ப்பனியத்துக்கு அடிமைப்படுத்தும் பார்ப்பனிய திருமணம், பார்ப்பனர்கள் திணித்த சடங்குகள், பார்ப்பன வழிபாட்டு முறைகள் முதலியவற்றை சுயமரியாதை உணர்வோடு புறந்தள்ள வேண்டும்!
- கோவில் கருவறையில் பார்ப்பனரல்லாதோர் பூஜை செய்தால் சாமி தீட்டாகிவிடும் என்ற கருவறைத் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும்!
- ஜாதி மறுப்புத் திருமணங்கள் அதிகரிக்க வேண்டும்!
- ஜாதி மறுப்பு இணையரின் குழந்தைகளுக்கு 'ஜாதியற்றோர்' (No Caste Quota) ஒதுக்கீடு வழங்க வேண்டும்!
- ஜாதி - தீண்டாமைக் கொடுமைகள் எந்த வடிவில் இருந்தாலும் எதிர்த்து அகற்றப்பட வேண்டும்!
- ஜாதி மறுப்புக் காதலர்களைக் கொலை செய்யும் ஜாதி வெறியர்களைத் தண்டிக்க தமிழக அரசு தனிச் சட்டம் கொண்டு வரவேண்டும்!
- ஜாதி, மதம் கடந்த காதலர்களுக்குப் பாதுகாப்பு வழங்க காவல்துறையில் தனிப் பிரிவைத் தொடங்க வேண்டும்!
- அரசுத் திட்டங்களில், தலித்துகளுக்குரிய வீடுகளை 'காலனி', 'சேரி' என தனியாக ஒதுக்காமல், ஊருக்கு உள்ளேயே உள்ள காலி இடங்களில் - கட்டிக் கொடுக்க வேண்டும்!
- ஜாதிகளை வலுப்படுத்தும் கிராமத் திருவிழாக்கள் - குலதெய்வ வழிபாடுகளைப் புறக்கணிக்க வேண்டும்!
- ஜாதியை அடையாளப்படுத்தும் குலத் தொழில்களைவிட்டு வெளியேற வேண்டும்!

**சமதர்மம் என்ற சமத்துவ நோக்கில்...**

- நீதித் துறையிலும், மத்திய, மாநில அரசுத் துறைகள் அனைத்திலும், கல்வி, வேலை வாய்ப்புகளில் தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் - சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீட்டு உரிமையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
- அரசு நிறுவனங்கள் பெரும்பாலும் தனியார் மயமாகி வரும் சூழலில், தனியார் துறை வேலை வாய்ப்புகளிலும் தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப் பட்டோர் - சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- இடஒதுக்கீட்டு உரிமையை ஜாதியத்தை நிலைநிறுத்தப் பயன்படுத்தும் சுயநல சக்திகளை வீழ்த்தி, ஜாதி ஒழிப்பை நோக்கி முன்னெடுக்க வேண்டும்.
- கல்வி, வணிகம், சிறு வணிகம், விவசாயம், மருத்துவம், செலவு என அனைத்திலும் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட - சிறுபான்மை மக்களின் வாழ்வாதாரத்தை அழித்துவரும் உலகமயம் - தாராளமயம் - தனியார் மயங்களை எதிர்த்து மக்களைத் திரட்ட வேண்டும்.
- தமிழர்களின் உரிமைகளையும், தமிழ்நாட்டின் வளங்களையும் அழித்து தமிழ்நாட்டை பன்னாட்டுச் சுரண்டல் காடாக மாற்றி வரும், பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டுக் கூட்டுக் கொள்கையை முறியடிக்க வேண்டும்.

மத்திய - மாநில அரசுகளே! தனியார் துறையிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்து!

ஜாதி மறுப்புத் திருமண இணையரின் குழந்தைகளுக்கு ஜாதியற்றோர் (No Caste Quota) ஒதுக்கீடு வழங்கு!

**திராவிடர் விடுதலைக் கழகம்,**
95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம்,
மயிலாப்பூர், சென்னை-4. தொலைபேசி: 044-24980745
www.dvkperiyar.org / dvkheadoffice@gmail.com

## திருப்பூரில் கழகக் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக மூடநம்பிக்கை ஒழிப்புப் பொதுக் கூட்டம் 14.7.13 ஞாயிறு மாலை 7 மணிக்கு திருப்பூர் இடுவாய் பாரதிபுரம் பகுதியில் தோழர் கா.முத்து தலைமையில் நடந்தது. போபி. வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். மந்திரமல்ல தந்திரமே நிகழ்ச்சியில் காவை இளவரசன் கண்ணைக் கட்டிக் கொண்டு, மோட்டார் சைக்கிள் ஓட்டுதல், கொதிக்கும் எண்ணெயில் கைவிடுதல் போன்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார்.

மதவாத அமைப்புகளும், சோதிடர்களும் நிறைந்த பகுதியில் எதிர்ப்புகளுக்கிடையே இந்த நிகழ்வு நடந்தது. செயலவைத் தலைவர் சு. துரைசாமி, மண்டலச் செயலாளர் சி.விஜயன், மாவட்டச் செயலாளர் க.அகிலன், மாநகரத் தலைவர் சண்முகம், மாநகர செயலாளர் ஜீவா நகர் குமார், முகில்ராசு, சிவகாமி, மணிகண்டன், நகுலன், பிரசாத், நீதிராசன், மூர்த்தி, வாட்ச் கடை செல்வம், பல்லடம் வடிவேல், பெரியார் முத்து மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். குணசேகர் நன்றி கூறினார்.

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

1976ஆம் ஆண்டில் இந்திரா பிரதமராக இருந்தபோது அவசர நிலையை பிரகடனம் செய்து, எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் விசாரணையில்லாமல் ஓராண்டு காலம் சிறையிலடைத்தார். அப்பொழுது காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டி, அவசர நிலையை எதிர்த்து துணிவாக தீர்மானம் போட்டார். நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து வந்து விட்டது என்றார். நாடு இந்த நிலைக்கு வந்து விட்டதே என்று உள்ளம் உடைந்து போன காமராசர், தனது வீட்டுக்குள்ளே முடங்கி, அதே ஆண்டில் அக்டோபர் 2இல் (அதாவது காங்கிரசை கலைத்து விடுங்கள் என்று கூறிய காந்தியார் பிறந்த நாளில்) மக்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டார். அப்போது, இந்திரா காந்தி முகாமிலிருந்து கொண்டு அவசர நிலையை ஆதரித்த ப.சிதம்பரம் போன்றவர்கள், இப்போது காமராசர் ஆட்சி அமைப்போம் என்கிறார்கள்! அதேபோல காமராசர் முகாமில் இருந்துவிட்டு, அவரது மரணத்துக்குப் பிறகு கட்சியை கூண்டோடு இந்திராவின் தேசியத்தில் அடகு வைத்தவர்களும் இப்போது காமராசர் ஆட்சி அமைப்போம் என்கிறார்கள்.

இந்திராவைப் பிரதமர் பதவியில் உட்கார வைத்தவரே, இந்தப் பச்சைத் தமிழன்தான்! ஆனால், தீட்டிய மரத்திலேயே கூர் பார்க்கக் கிளம்பினார் இந்திரா காந்தி. அதே இந்திரா வின் குடும்ப வாரிசுகளுக்கு நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து கிடக்கும் "தன்மான வீரர்கள்" தான் காமராசர் ஆட்சியை அமைப்போம் என்று பேசுகிறார்கள். இதே முழக்கம் கடந்த 40 ஆண்டுகளாக காதுகளை துளைத்துக் கொண்டே இருக்கிறது.

காமராசர் **ஆட்சியை** இவர்கள் அமைக்கும் அதிசயம் எந்த யுகத்தில் வேண்டுமானாலும் நிகழட்டும்! அதற்காக காமராசர் **'மாட்சியை'**க் குலைத்து விடாதீர்களய்யா என்பதே அடியேனின் தாழ்மையான விண்ணப்பம்!

பாவம் காமராசர்! அவரை விட்டுவிடுங்களய்யா!

**– கோடங்குடி மாரிமுத்து**

## கழகத் தோழர் சசிகுமார்– பொ. கோமதி மணிவிழா



14.6.2013 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 9 மணியளவில் சேலம் மாவட்டம் கொளத்தூர் எஸ்.எஸ். கல்யாண மஹாலில், காவலாண்டியூர் பகுதி கழகத் தோழர் தி.சசி குமார்-பொ.கோமதி ஆகியோரது வாழ்க்கை இணை ஏற்பு விழா நடைபெற்றது. கொளத்தூர் ஒன்றிய செயலாளர் க.ஈசுவரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கண்ணாமூச்சி ஊராட்சி மன்றத் தலைவர் க.கொ. பழனிசாமி, மாவட்ட கழக அமைப்பாளர் டைகர் பாலன் முதலானோர் வாழ்த்துரை வழங்கினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றி வாழ்க்கை இணையேற்பு ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைத்தார். விழா மகிழ்வாக புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.3000 வழங்கினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 19th July 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜூலை 25, 2013 | புரட்சி 12 | முழக்கம் 28 | விலை: ரூ.3.00

## வினாக்கள்... விடைகள்...

**வினா:** நரேந்திர மோடிக்கு அமெரிக்கா 'விசா' வழங்க வேண்டும்.
**– பாரதிய ஜனதா தலைவர் ராஜ்நாத் சிங்**

**விடை:** இந்துக்கள் கடல் தாண்டுவது பாவம் என்று சாஸ்திரம் கூறுவதை, மீறலாமா, ராஜ்நாத்?

**வினா:** வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைத் துறையில் அன்னிய முதலீட்டை 49 சதவீதமாக உயர்த்துவது நாட்டின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாகிவிடும்.
**– உள்துறை அமைச்சகம் எதிர்ப்பு**

**விடை:** அலைபேசி போன்ற தொலை தொடர்புத் துறையில் 100 சதவீத அன்னிய முதலீட்டுக்கு அனுமதித்துள் ளீர்களே! அது பாதுகாப்புக்கு ஆபத்து இல்லையா? பார்ப்பன பத்திரிகைத் துறையில் அன்னிய முதலீடு வந்தால் மட்டும்தான் தேசப் பாதுகாப்புக்கு ஆபத்து வந்து விடுமா?

**வினா:** குடியரசுத் தலைவர் பதவியில் பிரணாப் முகர்ஜி – ஓராண்டு சாதனை.
**– தினமலர் செய்தி**

**விடை:** உண்மைதான்! கருணை மனுக் களை தள்ளுபடி செய்ததில் மகத்தான சாதனை புரிந்துள்ளார்!

**வினா:** செவ்வாய் கிரகத்தை ஆராய செயற்கைக் கோளை அனுப்ப இருக்கிறோம். பெருமைக்காக அல்ல; வர்த்தக நோக்கத்திற்காகவே இந்த ஆய்வு நடக்கிறது. எதிர்காலத்தில் மனிதர்கள் அங்கே குடியேறலாம்.
**– இஸ்ரோ தலைவர் இராதாகிருட்டிணன்**

**விடை:** அப்படியா? முதலில் சோதிடர் களை அனுப்பி, 'செவ்வாய் தோஷம்' பற்றி ஆராயச் சொல்லுங்கள்! அப் போதுதான் 'பூமி தோஷக்காரர்கள்' நம்பிக்கை யோடு வருவார்கள்!

**வினா:** கடவுள்கள் காட்சிப் பொருள்கள் அல்ல. தரிசனத்துக்கு கட்டணம் வாங்குவதை ரத்து செய்ய வேண்டும்.
**– இந்து முன்னணி ராமகோபாலன் போராட்டம்**

**விடை:** அர்ச்சனை என்பதும் வியாபாரம் அல்ல. எனவே அர்ச்சகர்கள் 'தட்சணை' வாங்குவதையும் நிறுத்த வேண்டும் என்று போராடுவீர்களா, கோபால்ஜி?

**வினா:** உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக் கும் உணவு கிடைப்பது உறுதி செய்யப் படும். சராசரியாக 81 கோடி பேர் இத் திட்டத்தால் பயனடைவார்கள்.
**– காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் பக்தசரண் தாஸ்**

**விடை:** ஆக, நாட்டில் உணவுப் பாதுகாப்பு கிடைக்காதவர்களாக 81 கோடிப் பேர் இருக்கிறார்கள் என்பதை புள்ளி விவரங்களுடன் விளக்கி விட்டீர்கள்; நல்ல சாதனைதான்!

**வினா:** ரூபாய் மதிப்பு சரிவில் இருந்து மீள் வதற்கு பொது மக்கள் தங்கம் வாங்கு வதை குறைத்துக் கொள்ள வேண்டும்.
**– நிதியமைச்சர் ப. சிதம்பரம்**

**விடை:** ஏன், கடவுள்களிடம் குவிந்து கிடக்கும் தங்கத்தை எடுக்கக் கூடாதா? எடுத்தால் பக்திக்கு சரிவு வந்துவிடுமா?

# மாமல்லபுரத்தில் 2 நாள் கழகப் பயிற்சி முகாம்





சென்னை மண்டல திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களுக்கு பெரியாரியல் அடிப்படைப் பயிற்சி முகாம் 20, 21.7.2013 ஆகிய இரு நாட்களிலும் மாமல்லபுரத்தில் சிறப்புடன் நடந்தது. கிழக்கு கடற்கரைச் சாலையில் இயற்கை எழில் சூழ்ந்த பண்ணை இல்லத்தில் நடந்த இந்த பயிற்சி முகாமில் கழகத்தில் புதிதாக தங்களை இணைத்துக் கொள்ள முன் வந்த 33 இளைஞர்கள் கொள்கைப் பயிற்சி பெற்றனர். இதில் பெண்கள் 5 பேர்.

முதல் நாள் காலை 8.30 மணியளவில் தோழர்கள் அறிமுகத்தோடு பயிற்சிகள் தொடங்கின. சுயமரி யாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் சென்னை மாவட்ட பொறுப்பாளர் செல்லையா முத்துசாமி திரைப்படம் இலக்கியம் குறித்த சமூகப் பார்வை என்ற தலைப்பில் முதல் பயிற்சியை அளித்தார்.

தொடர்ந்து, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'பெரியார் ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் பயிற்சியளித்தார். தேனீர் இடை வேளைக்குப் பிறகு உடுமலை தமிழ்ச்செல்வன் 'திராவிடர் இயக்க முன்னோடிகள்' என்ற தலைப்பில் 'ஒளித்திரை'யுடன் (பவர் பாயின்ட்) சமூக வரலாறு களை விளக்கினார். உணவு இடைவேளைக்குப் பிறகு பிற்பகல் 3 மணியளவில், காவை இளவரசன் பேய், பிசாசு, ஜோதிடம், வாஸ்து, மூடநம்பிக்கைகளை விளக்கினார். பயிற்சியாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் சந்தேகங்களைக் கேட்டனர். தேனீர் இடைவேளைக் குப் பிறகு தோழர் குமார், சமுதாயத்தில் பெரியார் இயக்கத்தின் தாக்கம் குறித்து பயிற்சியளித்தார். 6 மணியளவில் முதல் நாள் பயிற்சி முடிந்தது. இரவு சார்லி சாப்ளின் திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

ஜூலை 21 அன்று இரண்டாம் நாள் பயிற்சி 9 மணியளவில் தொடங்கியது. பகல் 1 மணி வரை ஜாதிய பாகுபாடு; ஒடுக்குமுறைகள்; காரணங்கள்; வடிவங்கள் குறித்து ஜஸ்டின் ராஜ் பயிற்சியளித்தார். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'வகுப்புரிமை-இட ஒதுக்கீடு' வரலாறுகளை விளக்கிப் பேசினார்.

முன்னதாக, உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் துரை அருண், திருமூர்த்தி ஆகியோர் பயிற்சி முகாம் குறித்து தங்கள் கருத்துகளைப் பதிவு செய்தனர். பயிற்சியில் பங்கேற்ற தோழர்கள் பயிற்சி அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டதைத் தொடர்ந்து, முகாமுக்கு ஏற்பாடுகளை செய்த தோழர்கள் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, காஞ்சி மாவட்ட தலைவர் டேவிட் ஆகியோர் முகாமுக்கான ஏற்பாடுகள், நோக்கம் குறித்துப் பேசினர். இரண்டு நாள் பயிற்சிகளையும் தோழர் விழுப்புரம் அய்யனார் ஒருங்கிணைத்தார்.

நிறைவாக பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கினார். காஞ்சி மாவட்ட பொருளாளர் சேகர் நன்றி கூற, மாலை 6 மணியளவில் முகாம் நிறைவடைந்தது. இந்த இரண்டு நாள் பயிற்சியில் ஏராளமான சமூக வரலாற் றுச் செய்திகளை அறியும் நல்ல வாய்ப்புகள் கிடைத்த தாக தோழர்கள் கருத்து கூறினர். தனக்கென்று வாழா மல் சமுதாயத்துக்கு இயன்றவரை தொண்டாற்ற வேண்டிய உணர்வை இந்த முகாம் தங்களுக்கு ஊட்டியது என்றும் அவர்கள் கூறினர்.

இரு நாட்களிலும் உணவு, தேனீர் வழங்கும் ஏற்பாடுகளை காஞ்சி மாவட்ட பொருளாளர் சேகர், சென்னை மாவட்ட துணைச் செயலாளர் வேலு, சென்னை கழகத் தோழர் தமிழ்ச் செல்வி, தோழர்கள் சிபி, பரசுராம், பொன்னுசாமி ஆகியோர் முன்னின்று செய்தனர். மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன் முகாமுக்கு வந்தனர்.

**மல்லை சத்யா :** ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, முகாமுக்கு பெருமளவில் உதவினார். முதல்நாள் மாலை 3 மணியளவில் பயிற்சி அரங்குக்கு வந்து, கழகப் பொதுச்செயலாளர், தோழர்களுடன் ஒரு மணி நேரத்துக்கு மேலாக கலந்துரையாடினார். தமிழர்களுக்கான திராவிடர் இயக்க லட்சியங்களை இளைஞர்களிடம் கொண்டு செல்லும் இத்தகைய பயிற்சிகளின் தேவை அவசியத்தை தோழர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

பயிற்சியில்லாத நேரங்களில் பயிற்சியரங்கில் இருந்த நீச்சல் குளம் பயிற்சியாளர்களுக்கு மிகவும் உற்சாகத்தைத் தந்தது. இரண்டு நாள் இயற்கையான மகிழ்ச்சியான சூழலில் நடந்த இந்த பயிற்சி, கழகத் தோழர்களிடையே கொள்கை உறவுகளோடு அனைவரும் கலந்து பேசி மகிழ்ச்சியுடன் உறவாடிய மாற்று நிகழ்வாகவும் அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது.

**– நமது செய்தியாளர்**

# ‘துக்ளக்’கின் பார்ப்பனத் திமிர்!

‘அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமை வேண்டும்’ என்பது ஏதோ அர்ச்சகர் வேலைக்கான போராட்டமாக குறைத்து மதிப்பிடுவது சமூகப் பார்வையின் கோணல்புத்தியே ஆகும்.

அனைத்து சாதியினரும் - பார்ப்பன ஆதிக்க ஜாதி குடியிருப்பு வீதிகளில் நடக்கும் உரிமை கோரியபோது இது நடைப்பயிற்சிக்கான போராட்டம் என்று கேலி செய்வதுபோல் பார்ப்பனர்கள் இந்த உரிமைப் போராட்டத்தையும் கேலி செய்கிறார்கள்.

ஜாதியின் மய்யமான உயிர்ப் புள்ளி கோயிலின் கர்ப்பகிரகத்துக்குள் இருக்கும் பார்ப்பன ஆதிக்கத்தில் அடங்கியிருக்கிறது என்ற உண்மையை சமூக விஞ்ஞானியான தந்தை பெரியார் கண்டறிந்தார். அதற்காக தனது வாழ்க்கையின் இறுதி காலத்தில் போராட்டக் களம் அமைத்தார். இதே கோரிக்கையை ஏற்று தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானமும், பிறகு மீண்டும் தி.மு.க. ஆட்சியில் அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது. முதல்வர் எம்.ஜி.ஆர். காலத்தில் இதே கோரிக்கையை பரிசீலிக்க நீதிபதி மகராசன் தலைமையில் ஒரு வல்லுனர் குழு அமைக்கப்பட்டு, அக்குழு அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆக எந்த ஆகமும் தடை போடவில்லை என்பதை ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தியது. ஜெயலலிதா முதல்வராக இருந்த காலத்தில் அர்ச்சகர் பயிற்சிக்காக 69 சதவீத இடஒதுக்கீடு அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன.

பிறகு மீண்டும் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, அதில் பயிற்சி பெற்ற அனைத்து ஜாதியையும் சேர்ந்த 204 மாணவர்கள், உச்சநீதிமன்றத் தடையால் அர்ச்சகர் ஆக முடியாமல் தடுக்கப்பட்டு விட்டனர். தந்தை பெரியார் திராவிடர் கழகமாக இருந்தபோது, 2002 ஆம் ஆண்டில் காஞ்சி காமாட்சி கோயில் கருவறை நுழைவுப் போராட்டத்தை நடத்தி, 1000 தோழர்கள் கைதானார்கள். மீண்டும் இப்போது தோழர் கோவை இராமகிருட்டிணன் அவர்களை பொதுச் செயலாளராகக் கொண்டு செயல்படும் தந்தை பெரியார் திராவிடர் கழகம், கடந்த டிசம்பர் 24 ஆம் தேதி மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் கருவறை நுழைவுப் போராட்டத்தை நடத்தி தோழர்கள் கைதானார்கள். (அதற்காக அவர்கள் முன் வைத்த கோரிக்கைகளில் நமக்கு கருத்து வேறுபாடு உண்டு. அது வேறு சேதி) அதேபோல கி.வீரமணி அவர்கள் தலைமையில் இயங்கும் திராவிடர் கழகம், இப்போது அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகும் போராட்டத்தை அறிவித்துள்ளது. எந்த பெரியார் அமைப்பு இந்தப் போராட்டத்தை நடத்தினாலும், அது தந்தை பெரியார் அவர்களால் அறிவிக்கப்பட்ட போராட்டம் தான். தந்தை பெரியார் அவர்களின் ஜாதி இழிவு ஒழிப்புப் போராட்டத்தின் தொடர்ச்சிதான்!

ஆனால், நாட்டில் நிலவும் சிறு சிறு நிகழ்வுகளைக்கூட ஊதிப் பெருக்கி விளம்பரப்படுத்தும் பார்ப்பன ஏடுகள் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகருக்கான உரிமைப் போராட்டம் என்றால், இதுகாலம் வரை ‘கள்ள மவுனம்’ சாதிப்பது தான், ‘அவாள்களின்’ வாடிக்கையாகிவிட்டது. கடந்த வாரம் ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சி, இது குறித்து சிறப்பு நிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்பியதைப் பாராட்டி வரவேற்க வேண்டும். அதில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகக் கூடாது என்பதில் பார்ப்பனர்கள், தங்களின் நச்சுக் கருத்துக்களை வெளிப்படையாக முன்வைத்ததை பல்லாயிரக் கணக்கில் மக்கள் பார்த்திருப்பார்கள். ‘பார்ப்பனர்கள் திருந்தி விட்டார்கள்’ என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கும் தமிழர்கள், இந்தத் தொலைக்காட்சியில் பார்ப்பனர்களின் வெறிப் பேச்சுக்களைக் கேட்ட பிறகாவது தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இவ்வாரம் வெளிவந்த ‘துக்ளக்’ பத்திரிகையில் (ஜூலை 24), திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களை கொச்சைப்படுத்தி அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் போராட்டத்தை எதிர்த்து பார்ப்பன நச்சைக் கக்கியுள்ளது.

*“அர்ச்சகர் வேலை என்பது வெறுமனே சுவாமி சிலையின் மீது பூக்களை விட்டெறிகிற வேலையல்ல. அதற்கென்று தனியாக படிப்பு இருக்கிறது. சமஸ்கிருத மந்திரங்களின் அர்த்தங்களைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். பூஜை விதிமுறைகளில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். இதற்கு ஆழ்ந்த சம்ஸ்கிருத அறிவு தேவை.* ***இவற்றையெல்லாம் வகுப்பெடுத்துச் சொல்லி தந்துவிட முடியாது. அது இயல்பாகவே வரவேண்டிய ஒன்று.*** *சங்கீதம், நடனம் மாதிரித்தான் புரோகிதம் செய்வதும், அர்ச்சகராவதும்”* - என்று எழுதியுள்ளது, துக்ளக்.

சமஸ்கிருத அறிவை வகுப்புகளில் கற்பித்துத் தெரிந்து கொள்ள முடியாதாம். அது இயல்பாகவே வரக் கூடியதாம்! என்ன சொல்ல வருகிறது ‘துக்ளக்’? பார்ப்பனராகப் பிறந்தவர்களுக்கு மட்டுமே சமஸ்கிருதமும், அதன் வழியாக கடவுளை நெருங்கும் உரிமையும், பிறவியின் அடிப்படையில் இயல்பாக வரக்கூடியது என்று கூசாமல், பார்ப்பன வெறியை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. சங்கீதமும், நடனமும்கூட படித்தோ பயிற்சிப் பெற்றோ வருவதில்லையாம். அதுவும்கூட ‘இயல்பாகவே’ (அதாவது ஒரு குறிப்பிட்ட ஜாதியில் பிறந்ததால் மட்டுமே) வரக் கூடியதாம். ‘இயல்பாகவே’ வரக்கூடிய அறிவு என்று ஒன்று இருக்கிறது - என்று பிறவியின் அடிப்படையில் பார்ப்பன மேலாதிக்கத்தை நிலைநாட்டத் துடிக்கிறது இந்தக் கூட்டம்.

***ஜாதி இழிவு ஒழிப்புப் போராட்டத்தை எந்தப் பெரியார் அமைப்பு முன்னெடுத்தாலும் திராவிடர் விடுதலைக் கழகம், அது, பெரியார் முன்னெடுத்த ஜாதி ஒழிப்புக்கான போராட்டமாகவே பார்க்கும்.***

தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் பூஜை நடத்தும் ஆகமக் கோயில்களில் ஆகம முறைகேடுகள் எந்தெந்த முறைகளில் நடக்கின்றன என்பதை நீதிபதி மகராஜன் குழு, நீண்ட பட்டியலிட்டுள்ளதை ‘துக்ளக்’ பார்ப்பனருக்கு சுட்டிக் காட்டுகிறோம். காஞ்சி கோயிலுக்குள் தேவநாதன் எனும் அர்ச்சகர் பார்ப்பான் ‘கிருஷ்ண லீலை’கள் நடத்தி, அவை ‘ஒளிக் காட்சி’களாக தமிழகம் முழுதும் உலா வந்ததே. அதுபற்றி எல்லாம் ‘துக்ளக்’ பார்ப்பான் ஒரு வரிகூட எழுத முன் வரவில்லை. இவையெல்லாம் வகுப்பறைப் பயிற்சியில்லாமல் இயல்பாகவே அந்த அர்ச்சகப் பார்ப்பான் கற்றுக் கொண்ட பிறவிக்குரிய பெருமை என்கிறதா, துக்ளக்?

*அது மட்டுமல்ல, கோயிலில் தமிழ் வழிபாட்டு முறையையும் கிண்டல் செய்கிறது, இந்த ஏடு. ‘தமிழ் அர்ச்சனை என்பது தோற்றுப் போன சமாச்சாரம். கோயில்களில் உள்ள பல்லிகூடத் தமிழில் அர்ச்சனை செய்யச் சொல்வது இல்லை. எல்லோரும் தங்கள் குழந்தை ஆங்கில வழிக் கல்வியில் தான் படிக்க வேண்டும் என்று ஆசைப் படுவதுபோல, கோயில்களில் சமஸ்கிருதத்தில் தான் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். மக்களின் விருப்பம் இது’ என்று எழுதுகிறது இந்த பார்ப்பன ஏடு!*

தமிழில் பத்திரிகை நடத்தி வியாபாரம் செய்யும் கும்பல் - அர்ச்சனை மட்டும் தமிழில் நடத்தக் கூடாது என்கிறது. சமஸ்கிருதத்தை மட்டும் தான் கடவுள் ஏற்பார் என்று பேசி வந்த இந்தக் கூட்டம், இப்போது ‘மக்கள் விருப்பம்’ என்ற வாதத்துக்குள் புகுந்து கொண்டு, தனது ஆதிக்கத்தை நிலை நாட்டத் துடிக்கும் சூழ்ச்சியைப் புரிந்து கொள்ள வேண்டும்.

‘கோயில்-பக்தி-வழிபாட்டு முறை-அவற்றில் பார்ப்பன மேலாதிக்கம்’ என்பவை எல்லாம் பக்தி சார்ந்த புனிதங்கள் என்றும், ஆண்டவனால் உருவாக்கப்பட்டவை என்றும், அதில் கேள்விக்கே இடமில்லை என்றும் காலம் காலமாக பார்ப்பனர்கள் கட்டமைத்து, அச்சுறுத்தி திணித்து வரும் நம்பிக்கைகளைத்தான் இப்போதும் அவர்கள் ‘கவசங்களாக’ பயன்படுத்தி வருகிறார்கள். இந்தப் ‘புனிதங்களை’ பொய்மைகளை, கற்பிதங்களை கட்டுடைத்து, மக்கள் மன்றத்தில் கேள்வி எழுப்பிய பெருமை பெரியார் இயக்கத்துக்கு மட்டுமே உண்டு என்பதை கூரை மீது ஏறி நின்று நாம் முழங்க முடியும். “மக்கள் மனம் புண்படும்; மக்கள் நம்பிக்கைக்கு எதிராக நாம் பேச முடியாது; இந்த நம்பிக்கைகள் மக்கள் வாழ்க்கையோடும் மகிழ்ச்சியோடும் கலந்து நிற்கின்றன” என்று இதுநாள் வரை பேசிக்கொண்டு, ‘புனிதக் கட்டுடைப்பு’களிலிருந்து ஒதுங்கி நின்று கொண்டு, ஜாதி-தீண்டாமை ஒழிப்பு-சமத்துவம்-சமதர்மம் பேசும் கட்சிகள், அமைப்புகள், இயக்கங்கள் அனைத்தும் இது குறித்து கவலையுடன் சிந்திக்க வேண்டும் என்று வற்புறுத்துவது நமது கடமையாகிறது. ‘மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்’ என்ற வாதம், ஜாதி ஆதிக்கவாதிகளுக்கு ஒரு ஆயுதமாகப் பயன்படும் போது அந்த மக்களிடம் இது குறித்து விழிப்புணர்வை, பரப்புரையை நடத்தி, அவர்களை தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு முற்போக்கு இயக்கங்களுக்கு இருக்கிறதா இல்லையா என்ற கேள்வியை கவலையுடன் முன்வைக்க விரும்புகிறோம்.

அடிமுட்டாள்தனமாக இது குறித்து சில கேள்விகளை எழுப்பியுள்ளது, துக்ளக்! “பெரியார், அண்ணா சிலைகளுக்கு மாலையிடக் கூடாது; அவர்கள் ‘சமாதி’க்கு மாலை வைக்கக் கூடாது என்று ஒரு கும்பல் கிளம்பி போராட்டம் நடத்தினால், ஏற்றுக் கொள்வார்களா?” என்று கேட்கிறது துக்ளக்.

துக்ளக் வாதப்படியே பதில் சொல்வோம். “பெரியார், அண்ணா சிலைகளுக்கு, நினைவிடங்களுக்கு மரியாதை செய்ய மாலை அணிவிக்க எந்த ஒரு குறிப்பிட்ட ஜாதி மட்டும் தான் வரவேண்டும் என்றோ அவர்களின் கொள்கைகளை வகுப்பெடுத்து புரிந்து கொள்ள முடியாது என்றோ, இவர்களின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளும் அறிவு ‘இயல்பாகவே’ வரக்கூடியது என்றோ இங்கே எவரும் சொல்லவில்லையே! அப்படிச் சொன்னால் இந்த சிலைகளுக்கு, நினைவிடங்களுக்கு வரவேண்டாம் என்று தாராளமாய் போராட வரட்டும்!”

திராவிடர் கழகத்தில் இருக்கிற எல்லாருமே “எங்களையும் பொதுச் செயலாளராக்குங்கள்; எங்களையும் தலைவராக்குங்கள் என்று போராட்டம் நடத்த ஆரம்பித்தால் என்னவாகும்?” - என்று கேட்கிறது துக்ளக்.

தங்களுக்கான பொதுச் செயலாளர்களையும், தலைவர்களையும், விரும்பி ஏற்றுக்கொண்டவர்கள் தான், அந்த இயக்கத்தில் இருக்கிறார்கள். அதற்கும் கோயில்களில் அனைத்துச் சாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை கேட்பதற்கும் என்ன தொடர்பு? ‘சோ’ தலைக்கும் முழங்காலுக்கும் ஏன் முடிச்சுப் போட வேண்டும்? கோயில் என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒரு வழிபாட்டு இடம். இதே கோயில்களுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் நுழையக் கூடாது என்று ஒரு காலம் இருந்தது. அப்போது கோயிலுக்குள் நுழையாமலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் ஒதுங்கி இருந்தார்கள். “இது மக்கள் விருப்பம்; எனவே தாழ்த்தப்பட்டோர் கோயில் நுழைவு என்பது தோற்றுப் போய் விட்டது” என்று அப்போது ‘துக்ளக்’ பத்திரிகை இருந்திருந்தால் ‘மேதாவித்தனமாக’ எழுதியிருக்கும். கோயில் நுழைவுப் போராட்டங்கள் நடத்திய பிறகே கோயில் நுழைவு உரிமை கிடைத்தது; தீண்டாமை ஒழிக்கப்பட்டது. இப்போது கர்ப்பக்கிரகத்துக்குள் நிலைத்து நிற்கும் தீண்டாமையை ‘இயல்பானது’ - வகுப்பறையில் சொல்லிக் ‘கொடுக்க முடியாதது’, ‘எல்லோரும் தலைவர்களாகிட முடியாது’ என்றெல்லாம் குதர்க்கவாதம் பேசி நியாயப்படுத்த பார்ப்பனர்கள் துடிக்கிறார்கள்.

கர்ப்பகிரகத்துக்குள் பார்ப்பன ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு, உரிய பயிற்சியுடன் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகிவிட்டால், ஜாதி-

(4 ஆம் பக்கம்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 25.07.2013

அங்கும்-பக்கம்

# ரகசியம்-பரம ரகசியம்

23 ஆண்டுகளாக சிறையில் வாடும் பேரறிவாளன், “என்னுடைய கருணை மனுவை தள்ளுபடி செய்ததற்கான காரணத்தைக் கூறுவீர்களா?” என்று தகவல் உரிமை தலைமை ஆணையருக்கு கடிதம் எழுதினார். “அது முடியாது; குடியரசுத் தலைவருக்கு அமைச்சரவை எழுதிய குறிப்புகளையோ, குடியரசுத் தலைவர் தள்ளுபடி செய்வதற்கான காரணங்களையோ வெளியிட வேண்டிய அவசியமில்லை. அதை சட்டம் அனுமதிக்கவில்லை” என்று கண்டிப்பாக பதில் எழுதிவிட்டார் அதிகாரி. அதுவும்கூட, ஒரு வகையில் சரிதான். கருணை காட்டுவதற்குத்தான் காரணம் வேண்டும். கருணையை மறுப்பதற்கு காரணம் ஏதும் தேவையில்லையே! கருணை உள்ளம் இல்லாமல் இருந்தாலே போதும்!

குடியரசுத் தலைவர் ‘கருணையுடன் - கருணை மனு தள்ளுபடி செய்யப்படுகிறது’ என்று எழுதி யிருப்பார், போலிருக்கிறது! பேரறிவாளன் கருணை மனு நிராகரிப்பு மட்டுமல்ல, தடா நீதிமன்றத்தில் அவர் மீது நடந்த வழக்கு விசாரணைகூட ரகசியமாகத்தான் நடந்தது. அதாவது, நீதிமன்றத்தில் ராஜீவ் கொலை வழக்குப் பற்றி நடக்கும் வாதங்கள், குறுக்கு விசாரணைகள் மக்களுக்கு தெரிந்துவிடவே கூடாது என்று அப்படி ஒரு ‘தேச ரகசியத்தைக்’ காப்பாற்றினார்கள்.

இந்தியாவின் தூதரக செயல்பாடுகளை யெல்லாம் அமெரிக்கா கண்காணித்துள்ளது என்பதுகூட அண்மையில் அம்பலமானது. (அமெரிக்க உளவு நிறுவனத்தில் பணியாற்றி, மனசாட்சி பொறுக்காமல், இந்த உண்மைகளை அம்பலப்படுத்தி, இப்போது ரஷ்யாவில் அடைக்கலமாகியுள்ள ஸ்னோடன் என்ற இளைஞர்தான் இந்த ரகசியத்தைக் கூறினார்)

அய்யோ, இந்தியாவின் ரகசியங்களை அமெரிக்கா கண்காணிப்பதா? என்று இந்தியா அப்படி ஒன்றும் துள்ளி குதிக்கவில்லை. “இந்தியாவை அமெரிக்கா கண்காணித்தால், இந்த ஆசாமிக்கு என்ன வந்துவிட்டது? இப்படிப்பட்ட அமெரிக்க தேசத் துரோகிகளுக்கெல்லாம் அடைக்கலம் தர இந்தியா ஒன்றும் திறந்த வீடு அல்ல” என்று இந்திய தேசப் பற்றுடன் பதில் சொல்லிவிட்டார் வெளியுறவுத் துறை அமைச்சர்!

“அமெரிக்க எஜமான் - நமது நாட்டு ரகசியங்களை தெரிந்து கொள்ளட்டும். அது அவர்கள் எடுத்துக்கொண்ட உரிமை. அதற்காக அற்ப இந்திய குடிமக்கள் எல்லாம் அந்த உரிமையை கேட்கலாமா?” என்று எதிர் கேள்வி போடுகிறார்கள், ஆட்சியாளர்கள்.

இந்தியாவில் சி.பி.அய்., அய்.பி. என்ற பெயரில் புலனாய்வுத் துறைகள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. இவர்கள் ரகசியமாக தேசநலனுக்கான செயல்பாடுகளையெல்லாம் துப்பாக்கிகளை ஏந்தி உயிரைப் பணயம் வைத்து செய்து கொண்டிருக் கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்வதே தேச பக்தி.

குஜராத் முதல்வர் மோடியை கொலை செய்ய தீவிரவாதிகள் திட்டமிட்டார்கள் என்று கூறி, மும்பையைச் சார்ந்த இஷ்ரத்கான் எனும் மாணவியையும், இன்னும் நால்வரையும் இந்திய உளவுத் துறை தந்த தகவல் அடிப்படையில் குஜராத் போலீசார் சுட்டுக் கொன்றுவிட்டனர். இது ‘போலி என்கவுண்டர்’; உளவுத் துறையும் (அய்.பி.), குஜராத் போலீசும் சேர்ந்து நடத்திய சதி என்று சி.பி.அய். உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விட்டது. இப்படி அய்.பி.க்கு எதிராக வழக்கை நடத்தும் சதிஷ்வர்மா எனும் சி.பி.அய். அதிகாரி, அப்படி ஒன்றும் நேர்மையான அதிகாரி அல்ல; அவர் பணியாற்றும் சி.பி.அய்.யும் நேர்மையானது அல்ல என்று மற்றொரு தகவல் வெளிவந்துள்ளது. உள்துறை அமைச்சகத்தில் பணியாற்றிய ஆர்.வி.எஸ். மணி என்ற அதிகாரி, சி.பி.அய்.க்கு எதிராக ஒரு குண்டை தூக்கிப் போட்டுள்ளார். அதாவது உள்துறை அமைச்சகத்தில் தாம் பணி யாற்றியபோது இஷ்ராத் ஜஹான் போலி என் கவுண்டருக்கு அய்.பி. தான் காரணம் என்று பிரமாண பத்திரத்தில் சேர்க்குமாறு தன்னைக் கட்டாயப்படுத்தியதாக அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார்.

அது மட்டுமல்ல; 2001 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தாக்குதலும், 2008இல் மும்பையில் நடந்த தாக்குதலும் **இந்தியாவே திட்டமிட்டு நடத்தியது** என்று சி.பி.அய். அதிகாரி சதிஷ்வர்மா, தன்னிடம் கூறியுள்ளதாகவும் அதிகாரி மணி அந்த கடிதத்தில் எழுதியுள்ளார்.

நாடாளுமன்றத் தாக்குதலைக் காரணம் காட்டி, ‘பொடா’ சட்டம் வந்தது. மும்பை தாக்குதலைக் காரணம் காட்டி ‘தீவிரவாதத் தடுப்புச் சட்டம்’ (UAPAD) வந்துவிட்டது. தாக்குதல்கள் நடத்தப் பட்டதே, இந்தச் சட்டங்களைக் கொண்டு வருவதற்குத்தான் என்று சி.பி.அய். அதிகாரி தெரிவித்தாராம்!

அடேங்கப்பா! இப்படி எல்லாம்கூட நடக்குமா என்று கேட்காதீர்கள். தேசத்தைக் காப்பாற்ற இந்த ரகசியத் தாக்குதல்கள் எல்லாம் கட்டாயத் தேவை என்பது தேசபக்தர்களுக்குத்தான் தெரியும்! தேசவிரோதிகளுக்குப் புரியவே புரியாது. தேசத் தந்தை, அகிம்சை போதித்த காந்தியின் தேசமல்லவா? அவர் வழியில் நடைபோட வேண்டாமா? தேச பக்தியும், அதன் ரகசியங்களும் இதோடு முடிந்து விடவில்லை. முன்னாள் அதிகாரி ஆர்.வி.எஸ். மணி எழுதிய இந்தக் கடிதத்தை பாகிஸ்தான் தனது தேசபக்திக்கு பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கிவிட்டது. இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் காரணமல்ல என்ற உண்மை வெளிவந்துவிட்டது என்று அந்த நாட்டு ஊடகங்கள் இந்தக் கடிதத்தை தலைப்பு செய்திகளாக வெளியிட்டுவிட்டன.

ஆனாலும் எவ்வளவோ ரகசியங்கள் எல்லாம் வெளி வந்தாலும்கூட, ஒரு பிரச்சினையில் மட்டும் ரகசியத்தை கண்டிப்பாகக் காப்பாற்றுவதில் மன்மோகன் காங்கிரஸ் ஆட்சி அசைந்துக் கொடுக்காமல் இருந்து வருகிறது. ராஜீவ் கொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட நீதிபதி ஜெயின், நீதிபதி வர்மா விசாரணை அறிக்கைகளையும் கேட்டு, தலைமை தகவல் அதிகாரியிடம் பேரறிவாளன் மனுதாக்கல் செய்திருந்தார். அந்த அறிக்கைகளைத் தரவேண்டும் என்று அதிகாரியும் அனுமதித்து விட்டார். அதற்குப் பிறகுதான் இந்த அறிக்கைகளைத் தேடத் தொடங்கினார்கள். ஜெயின் ஆணைய அறிக்கையின் ஒரு பகுதிதான் கிடைத்திருக்கிறதாம். மற்றொரு நீதிபதியான வர்மா தந்த அறிக்கை தான் கிடைக்கவில்லையாம்! அதாவது முழுவதுமே காணாமல் போய் விட்டதாம்! அப்படிப் போடு!

விசாரணை அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது சட்டம். ஆனால், தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ்தான் பெற முடியும் என்பது இந்தியாவின் ‘ஜனநாயகம்’!

அப்படி என்ன வர்மா அறிக்கையில் ‘ரகசியம்’ அடங்கியிருக்கிறது என்று கேட்கத் தோன்றுகிறதா? அதில்தான் ராஜீவ் காந்திக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளில் நடந்த குளறுபடிகள், குழி பறிப்புகள் பற்றிய விவரம் அடங்கியிருக்கிறது. அதற்குக் காரணமான அதிகாரிகளின் பெயர்கள் அடங்கி இருக்கிறது. நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் பெயர் பட்டியலும் அடங்கி இருக்கிறது. இவ்வளவு ரகசியங்களும் உள்ள அறிக்கை காணாமல் போகாமல் இருக்குமா, என்ன?

தூதரக ரகசியம் வெளியாகலாம்; ‘என்கவுண்டர்’ ரகசியம் வெளியாகலாம்; நாடாளுமன்றத் தாக்குதல் ரகசியம் வெளியாகலாம்; பேரறிவாளன் கேட்கும் ‘ஏனய்யா என்னை தூக்கில் போடச் சொல்லுகிறீர்கள்’ என்ற கேள்விக்கான விடை மட்டும் ‘ரகசியம்’; ராஜீவ் பாதுகாப்புகளை குலைத்தது யார் என்ற கேள்விகளும் ரகசியமோ ரகசியம்!

எந்த விலைக் கொடுத்தாலும் சரி, எங்கள் தேசத்திலிருந்து இந்த ரகசியங்களை மட்டும் நீங்கள் வாங்கவே முடியாது; அது அமெரிக்க உளவுத் துறையாக இருந்தாலும்கூட!

– கோடங்குடி மாரிமுத்து

## காதலாகிக் கசிந்த உயிர்!

*தூய அன்புக் காதலொன்று*
*துரத்தி துரத்தி*
*அடிக்கப் பட்டதே!*

*காயம்பட்ட நெஞ்சோடு*
*அது*
*கல்லறைக்கு*
*விரட்டப்பட்டதே!*

*மூளை சிதற சிதற*
*உன்னை*
*முட்டித் தள்ளியது*
*புகை வண்டித் தொடரா?*
*பகை கொண்ட சதியா?*

*தலைதெறிக்க*
*ஓடிவந்த*
*தாயின் முன்னே*
*நீ*
*தலைவெடித்து*
*வீழ்ந்து கிடந்த*
*கொடுமை என்ன!*

*குலம் மாறி*
*நீ*
*காதலித்தாயென்று*
*களம் அமைத்தோர்*
*உன் கதை முடித்ததென்ன!*

*நீதியின்*
*காலடியில் வீழ்ந்து*
*நியாயம்*
*கேட்பதுபோல்*
*நெடுஞ்சாண் கிடையாய்*
*மாண்டு கிடக்கும்*
*இளவரசனே!*

*சாதிவெறிக்*
*கொடுமைகளுக்கு*
*உன் சாக்காடு*
*சமாதி கட்டுமா!*

*இனிவரும்*
*சந்ததியர்க்காவது*
*உன்னால்*
*ஒரு நீதி கிட்டுமா!*

**மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்**

## ஏற்காட்டில் நடந்த சுகன்யா-ஜெகன் வாழ்க்கை ஒப்பந்தம்

மேட்டூர் கழக ஆதரவாளரும், பெரியார்-அம்பேத்கர் கொள்கைப் பற்றாளருமான ஓய்வுப் பெற்ற துணை ஆட்சியர் இரா.குபால கிருட்டிணன் அவர்களின் மகன் பா.ஜெகன்-தே.கா.சுகன்யா ஆகியோர் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த நிகழ்வு 14.7.2013 அன்று காலை 8.30 மணியளவில் சேலம் ஏற்காட்டில் வெங்கடேசுவரா திருமண மண்டபத்தில் நடை பெற்றது.

பாவலர் எழுஞாயிறு தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் மண விழாவை நடத்தி வைத்தார். மருத்துவர் ஆர்.மோகன், சமூக ஆர்வலர் பொறியாளர் அரிஅரன், பகுத்தறிவாளர் அ.தனபாலன் உள்ளிட்ட பலரும் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்கள் சார்பாக கழக ஏட்டுக்கு ரூ.5000 நன்கொடை வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)


‘புரட்சிப் பெரியார் முழக்கம்’
இதழுக்கு உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

DATE OF PUBLICATION 24.07.2013
PURATCHI PERIYAR MUZHAKKAM

TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கூடங்குளம் எந்திரங்களில் கோளாறு

## எச்சரிக்கிறார், அணு விஞ்ஞானி கோபால கிருட்டிணன்

இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னாள் தலைவர் கோபாலகிருட்டிணன், அணுமின் உற்பத்திக்கு அவர் எதிரானவர் அல்ல; ஆனாலும், கூடங்குளம் மின் திட்டத்தில் ஆபத்துகள் சூழ்ந்திருப்பதை அவர் சுட்டிக்காட்டி எச்சரித்து வருகிறார். ஒரு விஞ்ஞானியின் இந்த 'அபாய அறிவிப்பை' திட்ட ஆதரவாளர்களும் ஆட்சியாளர்களும் அலட்சியப்படுத்தி வருகிறார்கள். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு கடந்த வாரம் கோபாலகிருட்டிணன் அவர்களின் நீண்ட கட்டுரையை வெளியிட்டிருந்தது. அதில், அவர் கூறியுள்ள பல்வேறு கருத்துகளில் முக்கியமான ஒன்றை சுட்டிக் காட்ட வேண்டும்.

கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு கருவிகளை வழங்கியது ரஷ்ய நிறுவனத்தின் அதிகாரி ஒருவர், 2012 பிப்ரவரியில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரின் பெயர் செர்ஜிஷடோல்வ். அவரைக் கைது செய்தது ரஷ்யாவின் பாதுகாப்புத் துறை. குற்றச்சாட்டு என்ன தெரியுமா? அணுமின் திட்டத்துக்குத் தேவையான மூலப் பொருள்களை மலிவான விலையில் தரக் குறைவாக வாங்கி, தரம் கொண்டதாக ஏமாற்றி, அதிக விலை நிர்ணயித்து, விலை வித்தியாசத்தை அந்த அதிகாரி சுருட்டிக் கொண்டார் என்பதே குற்றச்சாட்டு. இப்படி தரக் குறைவான எந்திரங்களை உதிரிப் பாகங்களை விற்றதாகக் கூறப்படும் காலத்தில்தான் இந்தியாவில் கூடங்குளம் முதல், இரண்டாம் அணு உலைகள் நிர்மாணிக்கப்பட்டன. பல்கேரியா, ஈரான், சீனா போன்ற நாடுகளும் இந்த ஊழலால் பாதிக்கப் பட்டிருக்கலாம் என்றும் தெரிகிறது. இதைத் தொடர்ந்து, பல்கேரியாவும், சீனாவும் விழித்துக் கொண்டு, தங்கள் நாட்டுக்கு ரஷ்யா வழங்கிய உதிரிப் பாகங்கள் தரக்குறைவாக இருப்பதைக் கண்டறிந்து, சந்தேகங்களையும் விளக்கங்களையும் கேட்கத் தொடங்கிவிட்டன. தரக்குறை வான பொருட்கள் அணு ஆபத்துகளை உருவாக்கும் வாய்ப்புகள் இருப்பதை ரஷ்யாவின் புலனாய்வு செய்தியாளர்கள் எச்சரித்துள்ளனர். இந்தக் காலகட்டத்தில் ரஷ்யாவிடமிருந்து எந்திரம், உதிரிபாகங்களை வாங்கிய நாடுகள், உடனடியாக உற்பத்தியை முழு வீச்சில் நிறுத்தி, மறுசோதனைகளை நடத்த வேண்டும் என்ற குரல், ரஷ்யாவிலிருந்தே ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. அந்நாட்டின் 'ஈக்கோ டிஃபென்ஸ்' (Eco Defence) என்ற சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பின் பொறுப்பாளர் (விளாடிமிர்ஸ்லிவ்யாக்) - இந்த ஆபத்தை வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறார்.

கூடங்குளம் அணுமின் திட்டத்தின் முதலாம் திட்டப் பிரிவு உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஏற்பட்ட நீண்டகால தாமதம் இதுதான் என்பது இப்போது தெரிகிறது. ஆனால், இந்த உண்மைகள் மூடி மறைக்கவே முயற்சிகள் நடக்கின்றன.

இந்தப் பிரச்சினை குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்திடம் கேள்விகள் கேட்கப்பட்டன. இதற்கு ஆணையம் அளித்த பதில்தான் விசித்திரமானது. "கருவிகளை வாங்கும் உரிமைகள், அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் அதிகார வரம்புக்குள் இல்லை" என்பதுதான் ஆணையத்தின் பதில். அணுசக்தி தொடர்பான மற்றொரு அமைப்பு இந்திய அணுசக்திக் கழகம் (என்.பி.சி.அய்.எல்.) அந்த நிறுவனம் ரஷ்யாவில் கைது செய்யப்பட்ட நபர் குறித்தோ, அவரது நிறுவனம் குறித்தோ எந்தத் தகவலும் தங்களுக்குத் தெரியாது என்று பதில் கூறிவிட்டது. இந்தக் கூற்றுகள் உண்மைதானா?

இந்திய அரசுக்கு இந்த உண்மைகள் தெரியும். அதனால்தான் ஊழல் அதிகாரி கைது செய்யப்பட்ட பிறகு அணுசக்தித் துறையின் சிறப்பு செயலாளர் ஏ.பி.ஜோஷி என்ற பார்ப்பனர் தலைமையில் இந்தியாவின் மூத்த அதிகாரிகள் குழு ஒன்றை ரஷ்யாவிற்கு அனுப்பி வைத்தது. மாஸ்கோவில் இருக்கும் இந்திய தூதரகத்துக்கும் அங்கே செயல்படக்கூடிய இந்திய அணுசக்தித் துறை அதிகாரிகளுக்கும் ரஷ்யாவையே உலுக்கிய இந்தக் கைது பற்றித் தெரிந்தப் பிறகே, அவர்கள் இந்திய அரசுக்கு தகவல் தந்து, அதன் பிறகே இந்தியா, இந்த நிபுணர்கள் குழுவை ரஷ்யாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. ஜோஷி தலைமையில் அதிகாரிகள் வந்த செய்தி இந்தியாவில் உள்ள ரஷ்ய தூதரக இணைய தளத்தில் பதிவாகியுள்ளது. கூடங்குளம் அணுமின் உற்பத்தியின் முதல் இரண்டு பிரிவுகளில் இந்த எந்திரங்கள், உதிரிபாகங்கள் நிறுவப்பட்டப் பிறகே ஊழல் வெளியே வந்ததால், இந்திய அரசு, இந்த உண்மைகளை வெளிவராமல் தடுப்பதில் அதீத அக்கறை காட்டுகிறது. அதிர்ச்சியான இந்த உண்மைகளை வெளிப்படுத்திய விஞ்ஞானி கோபாலகிருட்டிணன் இவ்வாறு எச்சரிக்கிறார்.

"கூடங்குளம் - முதல், இரண்டாவது பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள தரம் இல்லாத கருவிகள் - உதிரி பாகங்கள், மூலப் பொருட்களின் ஆபத்துகளை இப்போது மூடி மறைக்கலாம். ஆனால் உலை சில காலம் இயங்கும் நிலையில் அதனால் பேரழிவுகள் சந்திக்க நேர்ந்தால், உண்மைகள் வெளியே தெரிந்துவிடும். எனவே இந்த திட்டத்தின் மின் உற்பத்தி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்" என்று எச்சரிக்கை மணி அடிக்கிறார், விஞ்ஞானி கோபாலகிருட்டிணன். விஞ்ஞானியின் எச்சரிக்கை மணி ஆட்சியாளர்கள் காதில் கேட்குமா? அல்லது, அவரையும் தேச விரோதிகள் பட்டியலில் சேர்த்துவிடப் போகிறார்களா?

### தூத்துக்குடி மாவட்டக் கழகக் கலந்துரையாடல்

தூத்துக்குடி மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம், தூத்துக்குடி சோமா விடுதியில் 7.7.2013 ஞாயிற்றுக் கிழமை, மாவட்டத் தலைவர் பொறிஞர் சி.அம்புரோசு தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் க.மதன், பொருளாளர் ரவிசங்கர், மாநகரச் செயலாளர் பால்.அறிவழகன், நெல்லை மண்டலச் செயலாளர் கோ.அ.குமார், ஆழ்வை ஒன்றிய பா.முருகேசன், திருவை ஒன்றிய சந்தனராசு மற்றும் தோழர்கள் செல்லத்துரை, சோசப், மனோகரன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், பெரியாரியல் பரப்புரைப் பயணம் பற்றியும், எதிர்காலப் பணிகள் பற்றியும் விளக்கிக் கூறினார். பெரியார் பிறந்த நாளையொட்டி செப்டம்பர் இறுதி வாரத்தில் பெரியாரியல் பரப்புரைப் பயணம் இரண்டு நாட்கள் நடத்துவது பற்றி முடிவு செய்யப்பட்டது.16.6.13 அன்று நடந்த பயிலரங்க வரவு செலவு கணக்கு தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### தூத்துக்குடியில் பெரியாரியல் பயிலரங்கம்

தூத்துக்குடி மாவட்ட கழகச் சார்பில் பெரியாரியல் பயிலரங்கம் 16.6.2013 ஞாயிறன்று புதுக்கோட்டையில் மாவட்டத் தலைவர் பொறிஞர் சி.அன்புரோசு இல்லத்தில் நடைபெற்றது. நெல்லை-குமரி மாவட்ட தோழர்கள் உள்பட நாற்பதுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி வழக்கறிஞர் அதிசய குமார், மனித உரிமைகள் சட்டங்கள், மீறல்கள், நடவடிக்கைகள் பற்றி வகுப்பெடுத்தர். பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், மூவாயிரம் ஆண்டு கால வரலாற்றை, சமயங்களின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி பற்றிய வரலாற்றுப் பதிவுகள் பற்றிய விரிவான செய்திகளை விளக்கி வகுப்பு நடத்தினார். நண்பகல் அசைவ உணவு வழங்கப்பட்டது. உணவுச் செலவினை தோழர் மலையராசன் ஏற்றுக் கொண்டார். முற்பகல், பிற்பகல் தேநீர் செலவினை தோழர் பால். அறிவழகன் ஏற்றுக் கொண்டார்.

## சென்னை கல்லூரி நடத்தும் கண்டிக்கத்தக்க கருத்தரங்கு

சென்னையிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி கல்லூரியின் நாட்டியத் துறை கருத்தரங்கம், நாட்டிய செயல்முறை நிகழ்ச்சி ஒன்றை நடத்தப் போவதாக அறிவிப்பு வெளி வந்துள்ளது. இதற்கான தலைப்பு 'தேவதாசி மரபும் பரதநாட்டியமும்' என்பதாகும். சொர்ணமாலயா என்ற பார்ப்பனப் பெண் இதை நடத்துகிறாராம்! பெண்களை கோயிலுக்கு 'பொட்டுக் கட்டி' விடும் தேவதாசி இழிவு, சட்டப்படி ஒழிக்கப்பட்டு விட்ட பிறகு, அதில் ஏதோ பெருமை மிக்க மரபுகள் இருப்பது போலவும், பரத கலையோடு தேவதாசி முறைக்கு தொடர்புகள் தொடருவது போலவும் கருத்தரங்குகள் நடத்தப்படுவது பச்சைப் பார்ப்பனியப் போக்கையே காட்டுகிறது.

ஒரு சமூகத்துப் பெண்களை இழிவுபடுத்திய முறையை மரபுப் பெருமையாக்கி விவாதிப்பது வன்மையான கண்டனத்துக்குரியது. பார்ப்பனப் பெண்களை நிர்வாணமாக ஓடவிட்டு, அவர்கள் ஓடும் தூரம் வரை நிலத்தை தானமாக வழங்கும் 'கண்ணாடி மான்யம்' என்ற முறைகூட இந்த நாட்டில் இருந்தது. அதன் மரபுப் பெருமைக்கு கருத்தரங்கம் நடத்துவார்களா?

'உடன்கட்டை' இருந்தது என்பதற்காக அதன் மரபுப் பெருமை பேசுவார்களா? கல்லூரி நிர்வாகம் இதைக் கைவிட வேண்டும்!

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தீண்டாமைகளின் 'ஆணிவேர்' புனிதங்களின் மூலம் தகர்க்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் பார்ப்பனர்களுக்கு ஆத்திரம். பார்ப்பன அர்ச்சகர் இல்லாத எந்தக் கோயிலுக்கும் பார்ப்பனர்கள் வழிபாட்டுக்கு வரமாட்டார்கள்; கோயிலே தீட்டாகிவிட்டது என்பார்கள். கடந்தகால அனுபவங்கள் இதையே நமக்கு உணர்த்துகின்றன.

ஜாதி இழிவு ஒழிப்புப் போராட்டத்தை எந்தப் பெரியார் அமைப்பு முன்னெடுத்தாலும் திராவிடர் விடுதலைக் கழகம், அது, பெரியார் முன்னெடுத்த ஜாதி ஒழிப்புக்கான போராட்டமாகவே பார்க்கும். அதை எதிர்த்து கொச்சைப் படுத்தும் பார்ப்பன சக்திகளுக்கு பதிலடிக் கொடுக்கத் தயங்காது. பெரியார் இயக்கங்கள் வாக்குகளுக்கு ஓடிக் கொண்டிருக்கும் ஓட்டு அரசியல் கட்சிகள் அல்ல. இதை பார்ப்பனர்கள் புரிந்து கொள்ளட்டும்!

– **'இரா'**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP
Posted on: 25th July 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.